

கல்கி

KALKI 27-3-1977 75 காசு



அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





பியர்ஸ்— அசல் கிளிசரின் சோப்

கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர் உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல் மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூற்றாண்டு கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது. பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக் கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப் பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை



கல்கி



1977
மார்ச் 27
நள ௵
பங்குனி 14

ராஜாஜி சிந்தனை

பரம்பொருள்

வேதாந்தத்தில் சைவம் வைஷ்ணவம் முதலிய சமய பேதங்கள் இல்லை. பரம்பொருளை எந்தப் பெயர் வைத்துத் தியானித்தல் நலம் என்கிற வாதங்கள் அதில் இல்லை. ஸ்ரீ சங்கராச்சாரியார் எழுதிய வேதாந்த நூல்களில் நாராயணன் என்றே ஈசனைக் குறிப்பிடுவார். சைவ சித்தாந்த நூல்களில் பரம்பொருளை சிவன் என்றே குறிப்பிடுவார்கள். பெயர்களும் தியானத்துக்காக மனத்தில் நாம் கற்பித்துக் கொள்ளும் அங்கங்களும் சின்னங்களும், பூஜை செய்யும் மூர்த்திகளும் ஓங்காரமும் கூட. நம்முடைய உள்ளத்தைப் பரம்பொருள் வழிச் செலுத்துவதற்கு உபயோகப்படும் சாதனங்களேயொழிய வேறல்ல. பொருள் ஒன்று பெயர் பலவாயிருக்கும் அப்பொருளை.

''ஏகமூர்த்தி இரு மூர்த்தி
மூன்று மூர்த்தி பலமூர்த்தி
யாகி ஐந்து பூதமாய்
இரண்டு சுடராய் அருவாகி
நாகம் ஏறி நடுக்கடலுள்
துயின்ற நாராயணனே!''

என்று திருவாய்மொழியில் சடகோபன் பாடினார்.

-அச்சமில்லை என்ற நூலில்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

20%

பருத்தித்
துணிகள்
மீது சிறப்புத்
தள்ளுபடி!



பருத்திப் புடவைகள்,
கண்கவர் வண்ணங்கள்,
மனதை அள்ளும்
கோலங்கள். கோடை
காலத்துக்கு ஏற்ற
குளுமையான புடவைகள்.
நாட்டின் பல பாகங்
களிலிருந்து தருவிக்கப்
பட்ட எண்ணற்ற வகை
வகைகள். எல்லாம்
தங்களுக்கே.

கல்யாண காலத்துக்
கேற்ற புடவை, துணி
ரகங்கள்.

தங்கள் வரவை
எதிர் நோக்கும்

ஹேண்ட்லூம் ஹவுஸ்

9, ரத்தன் பஜார்,
சென்னை-600 003.

ADWAVE HH 414 A

கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் வேண்டுகோள்

க. சந்தானம்

இதனை மார்ச் 16ந் தேதி எழுதுகிறேன். தேர்தல் முடிவுகள் இன்னும் சில தினங்களில் தெரிய வரும். அவை பிரசுரமாகும்போது தேர்தலில் சம்பந்தப்பட்டிருக்கும் எல்லோருடைய மனங்களும் உடனடியான விளைவுகளில் ஈடுபட்டிருக்கும். கட்சிகள் தங்கள் வெற்றி தோல்விகளைக் கணக்கிட்டுப் பார்க்கும். வெற்றி பெற்ற வேட்பாளர்கள் மகிழ்ச்சிக் கடலில் மிதப்பார்கள். தோல்வியுற்றோர் வருத்தமும் மனக் கசப்பும் அடைந்திருப்பார்கள். தேர்தல் முடிவுகளைப் பற்றியே எண்ணிக் கொண்டிராமல் எத்தகைய மனப்பான்மையை மேற்கொள்வது தேசத்துக்கு நல்லது என்று அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதல் காரியம் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டிக் கொள்வதையும் பழி வாங்கும் எண்ணங்களையும் ஒதுக்குவது. தேர்தல் பிரசாரம் சூடு பிடித்த போது எதிர்த்தரப்பினர் மீது பல அன்பிலாச் சொற்கள் வீசப்பட்டிருக்கலாம்; தலையின்றிப் பல உள்நோக்கங்கள் கற்பிக்கப் பட்டிருக்கலாம். இவற்றை யெல்லாம் மறக்கவும் மன்னிக்கவும் மனப்பூர்வமாக முயல வேண்டும்.

ஜனதா கட்சி ஒன்றுபட்டு ஒரே அமைப்பாவது அது ஆட்சிக்கு வரும் வாய்ப்புப் பெற்றால் எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு எதிர்க்கட்சியாக விளங்க நேர்ந்தாலும் அவசியம்தான். இந்தியா சுவீகரித்துக் கொண்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயகம் இரு கட்சி அமைப்பிலேதான் திறம்பட இயங்குவது சாத்தியமாகும். சட்டங்கள் இயற்றுவதிலும் வரிகள் போடுவதிலும் மந்திரிசபை தீர்க்க தரிசனத்துடன் செயல்படுகிறதா என்று கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஆளும் கட்சிக்கும் உண்டு. எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் குறைகூறி விமர்சிப்பது எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்குத் தேசிய பிரச்னைகளில் ஆக்கபூர்வமான யோசனைகள் கூறி உதவுவதும் அவசியம் என்பதை உணர வேண்டும்.

ஆட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் போதிய அளவு தொடர்பு இல்லாதது இந்திய நாடாளுமன்றத்தின் தேசியச் சாயலை வெகுவாகக் குறைத்து விட்டிருக்கிறது. எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் அடங்கிய விஷயாலோசனைக் குழுக்கள் அமைவது நல்லது. முன்

கல்கி மலர் 36 இதழ் 35

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அமையவிருக்கின்ற புதிய நாடாளுமன்றம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு இந்த நாட்டை ஆள வேண்டும் என்பதை மனத்தில் கொண்டு அது திறமையுடனும் இலகுவாகவும் இயங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். நாடாளுமன்றம் என்பது பெரும்பான்மை பலம் பெற்று மந்திரி சபை அமைக்கும் கட்சி மட்டும் அடங்கியதல்ல. எதிர்த்தரப்பில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் சிறப்பாகக் கடமையாற்றுவார்களேயானால் ஆட்சியிலுள்ளவர்களைப் போலவே அதே அளவுக்குத் தேசத் தொண்டாற்ற முடியும்.

இந்தத் தேர்தலின் விளைவாக நாடாளுமன்றத்தைப் பொறுத்தமட்டிலேனும் இரு கட்சி ஜனநாயகம் உருவாகும் என நம்பிக் கொண்டிருக்கிறேன்.

பிருந்த இந்த நடைமுறை மீண்டும் அமலாக வேண்டும். அரசின் கொள்கைகளை முதலில் இந்தக் குழுக்கள் தோழமை மனப்பான்மையுடன் விவாதிக்க வேண்டும். பிறகு நாடாளுமன்ற விவாதத்துக்கு வரும்போது ஒவ்வொரு கட்சியும் தனது அறிவிக்கப்பட்ட நிலையிலிருந்து மாறாமல் நிற்க வேண்டும்.

இரு தரப்பிலும் ஒப்புதல் ஏற்பட்டு இரண்டு நெருக்கடி நிலைப் பிரகடனங்களும் வாபஸ் பெறப்படும் என்றும் இயல்பான ஜனநாயக நடைமுறைகள் மீண்டும் அமலாகும் என்றும் நம்பிக் கொண்டிருக்கிறேன். இதைச் செய்தால் குறிப்பிட்ட சில அம்சங்களில் குறை கூறப்படலாமேயொழிய மற்றபடி பொதுவாக அனைவருக்கும் ஏற்ற பொருளாதார சமூகக் கொள்கைகளை

உருவாக்கிக் கொள்வதில் சிரமம் இருக்கும் என்று தோன்றவில்லை.

இதெல்லாவற்றையும் விட முக்கியம் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதிநிதியையும் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயினும் மதிப்பும் மரியாதையும் கொடுத்து நடத்துவது. நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளின் கௌரவம் அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவரா அல்லது எதிர்த் தரப்பைச் சேர்ந்தவரா என்பதைப் பொறுத்ததல்ல. கடந்த இருபது மாதங்களாக இருந்து வரும் நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் மிகத் தீமையான அம்சம், பலப்பல நாடாளுமன்ற பிரதிநிதிகளை அவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சிக்கும் அதன் தலைவருக்கும் அவர்களைப் பிடிக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காகச் சிறையில் தள்ளியதுதான். அடுத்து அமையும் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எதிர்த் தரப்பு உறுப்பினர்களின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் தங்களுடையது போலவே கருதி மதிப்பார்கள் என நம்புகிறேன். நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் விளைவாக நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு ஏற்பட்ட சேதம் சீக்கிரமே செப்பனிடப்பட வேண்டும்.

பாரதத்தில் உள்ளது போன்ற கூட்டாட்சி அமைப்பில் அரசியல் கட்சிகளும் கூட்டாட்சி முறையில் இயங்கினால்தான் பலம் பெற முடியும். மையத்தில் எல்லா அதிகாரங்களையும் குவிப்பது தேசத்துக்கு எவ்வளவு கெடுதலோ அவ்வளவு அரசியல் கட்சிகளுக்கும் கெடுதல். காங்கிரஸ் தலைவர்களே மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் அக்கட்சிக்குச் சக்தி வாய்ந்த தலைமைகள் உருவாகாதது கண்டு வருத்தப்படுகின்றனர் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஒவ்வொரு சட்டசபைத் தொகுதிக்கும் அதையடுத்து ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் கட்சிகளின் அமைப்புகளும் அவற்றுக்குத் தலைவர்களும் உருவாவதே இயற்கையானது. இவை இணைந்து மாநில அளவில் உருவாகும் தலைமை, மாநிலம் சம்பந்தப்பட்ட எல்லா கொள்கைகளிலும் காரியங்களிலும் சுதந்திரமாக இயங்க அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். அதே சமயத்தில் தேசம் முழுவதற்குமான மைய அமைப்பில் சக்தி வாய்ந்த முறையில் குரலெழுப்பும் உரிமையும் பெற்றிருக்க வேண்டும். கட்சித் தலைவர்கள் மக்களுடன் சதா தொடர்பு கொண்டிருப்பதன் மூலமே மத்திய, மாநில அரசுகளின் கொள்கைகளை மக்கள் புரிந்து கொள்ளுமாறு செய்ய முடியும். இதே போன்று எதிர்க்கட்சியினரும் மத்திய, மாநில அரசுகளின் தவறுகளைச் சுட்டிக் காட்ட முடியும். அரசியல் கல்வியை இடைவிடாது மக்களுக்கு அளிப்பதுதான் ஜனநாயகத்தின் சாரம். ஏதோ ஆறு வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் சமயத்தில் மட்டும் மக்களை அணுகுவதல்ல.

அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற ஜனநாயகமும் திறம்பட இயங்கப் பத்திரிகைச் சுதந்திரம் இன்றியமையாதது என்பதைச் சொல்லத் தேவையில்லை. தேர்தலை அறிவித்துப் பத்திரிகைத் தணிக்கையைத் தளர்த்திய பிறகு பத்திரிகைகள் ஓரளவு சுதந்திரம் பெற்றுள்ளன. பத்திரிகைத் தணிக்கை எதிர்காலத்தில் மீண்டும் எப்போதுமே அமலாகாது என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். பத்திரிகை உலகைச் சேர்ந்த அனைவரும் முதலாளிகளும் ஆசிரியர்களும் இணைந்து எவ்வாறாயினும் சரி, பத்திரிகைச் சுதந்திரம் பறிபோகாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். பத்திரிகைகள் தாங்களாகவே வகுத்துக் கொள்ளும் ஒரு நெறிமுறைக்கு மட்டுமே உட்பட்டு நடக்கலாம். இத்தகைய ஒரு நெறிமுறையை வகுத்துக் கொள்வது பத்திரிகைகளுக்கு மட்டுமின்றி சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தேவை.


கடைசியாக லஞ்ச ஊழலை நமது பொது வாழ்விலிருந்து அறவே நீக்கி விடுவதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தீவிரம் காட்ட வேண்டும் என விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்போன்ற ஒரு மைய அமைப்பை உருவாக்கி அதில் மத்திய – மாநில அரசைச் சேர்ந்தவர்கள், மந்திரிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களை விசாரிக்க வழி செய்வது மிக அவசியம். இவ்விஷயத்தில் லோக் பால், லோக் ஆயுக்த என்ற அமைப்புக்கள் பற்றி சென்ற நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட மசோதாவை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

இவ்விஷயங்களிலெல்லாம் அபிப்பிராய ஒற்றுமை ஏற்படுமேயானால் இந்திய ஜனநாயகம் மீண்டும் சீராக இயங்கும்.

மதுரை அழைக்கிறது

உலகசமய கலாச்சார தத்துவ மகாநாடு மதுரை மாநகரில் 30–3–77 முதல் 5–4–77 வரை வாரத் திருவிழாவாகக் கோலாகலமாக நடைபெற இருக்கிறது. இதில் பல நாட்டுப் பிரதிநிதிகள், வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்களானாலும் 'வேற்றுமையில் ஒற்றுமை' காண விருக்கிறார்கள்.

ஆசாரிய ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவை நேபாள மன்னர் ஸ்ரீ பாஞ்ச் சர்க்கார் ஸ்ரீ மகாராஜாதி ராஜ வீரேந்திரவீர் விக்ரம் சகாதேவ் தொடங்கி வைக்கவும் தமிழ்நாடு ஆளுநர் ஸ்ரீ மோகன் லால் சுகாடியா தலைமை தாங்கவும் இசைந்துள்ளார்கள். ராமநாதபுரம் ராஜா ஸ்ரீ ராமநாத சேதுபதி வரவேற்புரை வழங்க ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் நன்றியுரையோடு நிறைவேறும் முதல்நாள் விழா பின்னர் மேலும் ஒரு வாரத்துக்குத் தொடர்கிறது. ஸ்ரீ டி. எஸ். சந்தானம், மு. இஸ்மாயில், மால்கம் ஆதிசேஷையா, சிட்டிபாபு, ஜான்கோட்ஸ், ஆர். ஆர். திவாகர் போன்ற பெரியோர்களின் தலைமையில் அருமையான சொற்பொழிவுகளோடு, இசை –கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இவ்விழாவில் பங்குகொண்டு இன்புறுவதோடு, இறையுணர்வும் பெற்று இனிது வாழ முத்தமிழ் வளர்த்த மதுரை மாநகர் காந்தி மியூசியத்துக்கு அனைவரையும் அழைக்கிறது.



இனிமேல் உங்கள் ஜனநாயகப் பார்வை தெளிவாக இருக்கும்!
பாரதம்
இரு கட்சி ஜனநாயகம்
கண் டாக்டர்
1977 நாடாளு மன்றத் தேர்தல்
மீண்டும் இந்த நிலை?
கட்சி மாறிகள்
ஜனநாயகப் பண்பு
தப்பு நடந்து போச்சு.. தப்பு நடந்து போச்சு.. மன்னிச்சிடுங்க!
தப்பு நடந்ததற்குக் காரணமே கத்தி தான்!
அதிகார துஷ்பிரயோகத்துக்குப் பலியானவர்கள்
இந்திரா
நெருக்கடி நிலை பிரகடனம்
மக்கள்

கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லைதான்.



ஆனால் உடலின் உள்ளே உள்ள கோளாறுகளை சரிவர புரிந்து கொள்ள தெளிவான எக்ஸ்ரே படம் வேண்டாமா?

புகழ்பெற்ற மருத்துவர்களின் ஒருமுகமான கருத்து என்ன தெரியுமா? எக்ஸ்ரேயில தெளிவான படம் வேண்டுமென்றால் இந்து பிலிம்தான் அதைக் கொடுக்க முடியும் என்பது! இடையறா முயற்சியின் விளைவாக இந்துவின் தரம் நாளடைவில் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. இன்று உலகின் தலை சிறந்த எக்ஸ்ரே பிலிம்களின் தரத்திற்கு இந்து பிலிம்கள் எந்த விதத்திலும் குறையாதவை.

நல்ல ஸ்பீட், உயர்ந்த காண்ட்ராஸ்ட், சிறந்த லாட்டிட்யூட், நோயின் நுட்பங்களைத் தெளிவாகக் காட்டும் தன்மை— இவையெல்லாம் என்னவென்று புரியாவிட்டால் விட்டுத் தள்ளுங்கள்—இந்து பிலிம் என்றாலே தரத்தின் சிகரம் என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதும்.

தொழில் வல்லுனர்கள் இந்துவையே நாடிச் செல்வது இயற்கைதான். இப்பொழுது உங்களுக்குத் தெரியும், தொழில் முறை வல்லுனர்கள் ஏன் இந்துவையே நாடிச் செல்கிறார்கள் என்று. ஏனெனில் அவர்கள் இந்துவிடம் சிறந்தவற்றையே எதிர்பார்த்து வருகின்றார்கள். ஒளிப்பதிவாளர்கள் மட்டுமல்ல, தலை சிறந்த தொழில்முறை புகைப் படக் கலைஞர்கள், ஒளிப்பதிவாளர்கள்— இவர்கள் எல்லோருக்கும் தெரியும், இந்து போட்டோகிராஃபிக் பொருட்களை உபயோகிப்பதால் மிகச் சிறந்த பயனை அடையலாம் என்பது. அது எளிதாகக் கிடைக்கின்றது என்றோ, குறைந்த செலவில் கிடைக்கின்றது என்பதனாலோ அல்ல; ஆனால் அது சராசரி தரத்தினைப் பெற்றுவிட்டது என்ற காரணத்தினால் கூடத்தான்.

இந்து அளிப்பவை— முன்னணியாளர்களுடன் முன்னணியில்

ஆகவே பிரபலமடைந்தோருடன் தாராளமாக சேர்ந்து கொள்ளுங்கள் இந்துவின் துணைகொண்டு.

இதோ இந்து அளிப்பவை: இந்து எக்ஸ்ரே பிலிம். இந்து பாலியஸ்டர்-பேஸ் எக்ஸ்ரே பிலிம். இந்து ரோல் பிலிம். இந்து ப்ரோமைடு பேப்பர். இந்து சினி பாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து மீடியம் காண்ட்ராஸ்ட் கிராபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயா பாஸிடிவ். இந்து டாக்குமெண்ட் காப்பியிங் பேப்பர்.

INDU®


இந்து என்றால் பிலிம்· போட்டோ·சினி·எக்ஸ்ரே.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர்
உதகமண்டலம் 643 005

SAA/HPF/2258

“ஆறுகால்” ஸ்தோத்திரம்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



நம் பகவத்பாதாளைப் பற்றி அவருடைய சிஷ்யரான ஸ்ரீ பத்மபாதாசாரியாள் ஒரு ச்லோகம் பண்ணியிருக்கிறார். ''யத்வக்த்ர மானஸ ஸர:'' என்று ஆரம்பிக்கும். அதன் முழு அர்த்தம் இங்கே நான் சொல்லவில்லை. அதிலே ''வினீத விநேயப்ருங்கா:'' என்று வருகிறதுதான் நம் விஷயத்துக்கு முக்கியம்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாளுடைய மனஸ் எப்படி இருக்கிறது? கரைகாணாத விசாலமாக, ஒரே தெளிவாக ஜில்லென்று இருக்கிறது. மானஸ ஸரஸ், மானஸரோவர் என்றெல்லாம் சொல்கிறார்களே, ஹிமாசலத்தில் இருக்கிற பரம நிர்மலமான விஸ்தாரமான ஏரியை, அந்த மானஸ ஸரஸாக இருக்கிறது ஆசார்யாளின் மனஸ். மனஸ் நம் கண்ணுக்குத் தெரியாது. முகம்தான் தெரியும். முகம்தான் மனஸுக்குக் கண்ணாடி. *Face is the index of the mind* என்கிறார்கள். நாம் வேண்டுமானால் மனஸிலிருப்பதை முகத்தில் காட்டாமல் போலி வேஷம் போடலாம். ஆசார்யாள் மாதிரியான மஹா புருஷர்களுக்கு 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.' ஆகையால் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் முகமும் அவர் மனஸ் மாதிரியே நிர்மலமாக, விஸ்தாரமாக மானஸரோவர் போலவே இருக்கிறது. ஒரு தடாகம் என்றால் அதில் தாமரைப் பூ இருக்க வேண்டுமே. ஆசார்யாளின் முக தடாகத்தில் பூக்கிற தாமரைப் பூ எது? ரொம்பவும் உயர்ந்த தத்துவங்களை ஓயாமல் பொழிந்து உபதேசித்து ஜகத்தை உத்தாரணம் பண்ணுகிற அவருடைய பாஷ்யங்களே தடாகத்தில் தாமரைப் பூ மலர்ந்த மாதிரி அவருடைய முகத் தடாகத்திலே இருக்கிறது.

''யத் வக்த்ர'' என்ற ச்லோக ஆரம்பத்தில் ''வக்த்ர'' என்றால் 'முகம்' அல்லது 'வாய்' என்று அர்த்தம். முகம், மானஸ ஸரஸ்: அதிலிருந்து வரும் பாஷ்யம், தாமரைப் பூ.

ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஒரு வேடிக்கை. ஸம்ஸ்கிருதத்தில் 'வாய்' என்ற அவயவத்துக்குத் தனியாக ஒரு வார்த்தை இல்லை. 'முகம்', 'வக்த்ரம்'என்கிற மாதிரி *Face* என்ற அர்த்தத்தில் உள்ள வார்த்தைக்குத்தான் 'வாய்' என்றும் அர்த்தம். தமிழில் பார்த்தாலோ 'வாய்'க்குத்தான் வார்த்தை இருக்கிறது. 'முகம்' என்பதற்கு (*Face*க்கு) தமிழ் வார்த்தை இல்லை. 'முகம்' என்பது ஸம்ஸ்கிருத வார்த்தை. அது தமிழ் தாதுவில் வந்ததல்ல. 'மூஞ்சி' என்று பேச்சு வழக்கில் என்னவோ சொல்கிறோம். ஆனால் அது இலக்கிய மொழி (*Literary Language*) இல்லை. ஸம்ஸ்கிருதத்தில் வாய் இல்லை; தமிழில் முகம் இல்லை.

இதனால் பழங்காலத்தில் ஸம்ஸ்கிருத கடிகா ஸ்தானங்களிலும் தமிழ்ப் பள்ளிகளிலும் படிக்கிற வித்யார்த்திகள் பரஸ்பரம் கேலி பண்ணிக் கொள்வார்களாம். (இப்போது மாதிரி ஸம்ஸ்கிருதம், தமிழ் என்று கட்சி கட்டிக் கொண்டு குஸ்தி பிடிக்காவிட்டாலும் அந்தக் காலத்திலும் இந்த அசட்டுத் தனம் கொஞ்சம் கொஞ்சம் இருந்திருக்கிறது!) தமிழ் மாணவன் ஸம்ஸ்கிருதம் படிக்கிறவனைப் பார்த்து, ''வாயில்லாதவன்'' என்று பரிகாசம் பண்ணுவானாம்; அவன் இவனைத் திருப்பி ''முகமில்லாதவன்'' என்று கேலி பண்ணுவானாம்!

வக்த்ரம் என்றால் முகம், வாய்.

சாதாரணமாகக் கவிகள் முகம், கண், பாதம், கை முதலியவற்றைத் தாமரைக்கு உவமித்து 'முகாம்போஜம்', 'நயன கமலம்', 'பாத பத்மம்', 'கர அரவிந்தம்', என்றெல்லாம் சொல்வார்கள். தம் பெயரிலேயே ஒரு பத்மத்தை வைத்துக் கொண்டிருக்கிற பத்மபாதாசாரியாளோ இங்கே ஆசார்யாளின் முகத்தை மானஸ ஸரஸ் என்று சொல்லி, அவர் உபதேசிக்கிற பாஷ்யத்தைத் தாமரை என்கிறார். பாஷ்யம் என்றால் - ஃபிலாஸஃபி. அது மண்டையை உடைக்கிற பாறை மாதிரித்தான் பொதுவாக இருக்கும். ஆனால் இந்த ஃபிலாஸஃபியே நம் ஆசார்யாள் கையாள்கிற போது தாமரைப் பூ மாதிரி மிருதுவாக, அழகாக ஆகி விடுகிறது.

தாமரை என்று இருந்தால் அதிலிருந்து தேன் ஊற வேண்டும் அல்லவா? ஆசார்யாளின் பாஷ்யமான இந்தத் தாமரையிலிருந்தும் தேன் ஊறி வடிகிறது. அது என்ன தேன்? பாஷ்யங்களின் உட்பொருளான அத்வைதம்தான் தேன். அவருடைய உபதேச ஸாரம்தான் தேன். அந்தத் தேனைப் பருகுவதற்காகக் கூட்டம் கூட்டமாக சிஷ்யர்களான வண்டுகள் வந்து மொய்க்கின்றனவாம்.

இந்த ச்லோகத்தில் தாமரையைப் பற்றியும் வண்டைப் பற்றியும் வருகிற மாதிரியே ஆசார்யாளைப் பற்றிய இன்னொரு ச்லோகத்திலும் வருகிறது. எண்ணூறு வருஷங்களுக்கு முற்பட்ட ஒரு கல்வெட்டில் இந்த ச்லோகம் பொறித்திருக்கிறது. அந்தக் கல்வெட்டு எங்கே கிடைத்தது என்று சொன்னால் உங்களுக்கு இன்னம் ஆச்சரியமாயிருக்கும். அது கம்போடியா தேசத்தில் கிடைத்த கல்வெட்டு!

(தொடரும்)

'1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய

க்ளாக்ஸோவின்



இன்பமான குடும்ப சலுகை

ரூ. 1/- தள்ளுபடி

கீழ்க்கண்ட கூப்பனைப் பூர்த்தி செய்யுங்கள். உங்கள் முழுப் பெயரையும், முகவரியையும் எழுதி, சிறு குடும்பத்தின் நன்மைகள் பற்றிய வாக்கியத்தைப் பூர்த்தி செய்யுங்கள். இக் கூப்பனையும், நீங்கள் இப்பொழுது வாங்கியுள்ள க்ளாக்ஸோஸ்-D-யின் 400 கிராம் பேக்கின் மேற்புற மூடும் பகுதியையும் (Flap) கடைக் காரரிடம் கொடுங்கள். 400 கிராம் பேக்கின் மீது உங்களுக்கு ரூ. 1/- தள்ளுபடி தரும்படி கடைக்காரர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

உடனடி நன்மை கிட்டும். காக்கவேண்டாம். தபாலிட வேண்டாம். இது க்ளாக்ஸோவின் 'இன்பமான குடும்ப'சலுகை. பொன்னான வாய்ப்பைப் போகவிடாதீர்கள். க்ளாக்ஸோஸ்-D உடனடியாக சக்தி அளிக்கிறது. உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நல்லது. அது உங்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி ஊட்டுகிறது.

க்ளாக்ஸோஸ்-D®

-யின் 400 கிராம் பேக்கின் மீது

இங்கே வெட்டுக

உங்கள் பெயர் ....

உங்கள் முகவரி ....

....

இந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்க (எந்த மொழியிலும்): "சிறிய குடும்பங்கள் நன்மை பயக்கின்றன, ஏனெனில் ....

....

கடைக்காரரின் பெயர் .... ஊர் ....

அன்பார்ந்த கடைக்காரரே,
மேற்கண்ட விவரங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப் பட்டிருந்தால், க்ளாக்ஸோஸ்-D யின் (பழைய அல்லது புதிய பேக்குகளை) ஒவ்வொரு 400 கிராம் பேக் வாங்கும் போதும், வாடிக்கையாளருக்கு ரூ. 1 தள்ளுபடி அளியுங்கள்.


விற்பனை செய்யப்பட்ட பேக்கிலிருந்து க்ளாக்ஸோஸ்-D யின் பெயர் கொண்ட மேற்புற மூடும் பகுதியை (Flap) கிழித்து எடுத்து, அதன் பின்புறம் உங்கள் கடையின் முத்திரையைக் குத்துங்கள். பின்னர் அந்த மூடும் பகுதியைக் கூப்பனுடன் இணைத்து எங்கள் விற்பனைப் பிரதிநிதியிடம் வழங்குங்கள். நாங்கள் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அந்த ரூ. 1/-யும் கூடவே 25 காசும் ஈடு செய்வோம்.

நன்றி.

ஃபாமிலி ப்ராடக்ட்ஸ் டிவிஷன்

KL க்ளாக்ஸோ லேபரேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்

முந்துங்கள்! க்ளாக்ஸோவின் 'இன்பமான குடும்ப சலுகையால் பயன் பெறுங்கள். இந்த சலுகை 1977 ஏப்ரல் 15-ம் தேதி வரைதான்.



dCA/GL/43 E TAM.

பக்தர்கள் பரிவர்த்தனை மூலம் அநாதி காலம் தொட்டுப் பாரதத்தின் ஒருமைப் பாட்டை உறுதிப்படுத்தி வருபவர்கள் காசி விசுவநாதரும் ராமேசுவரம் ராமநாதரும். அனுதினமும் முடிவில்லாத் தொடராக வடக்கே இருந்து வரும் பக்தர்கள் கொண்டு வரும் கங்கா ஜலத்தால் ராமநாதருக்கு அபிஷேகம் நடந்து கொண்டே இருக்கிறது. இதே போல் தெற்குக் கடல்களிலிருந்து நீரைப் பக்தர்கள் கொண்டு சென்று வடக்கே காசியிலும் கங்கையிலும் சேர்ப்பித்துப் பூஜிக்கின்றனர்.

இந்த இரு க்ஷேத்திரங்களிலும் கோயில் கொண்டுள்ள விசுவநாதரையும் ராமநாதரையும் சுப்ரபாதம் பாடித் துயிலெழுப்பும் பாக்கியம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

''காசி ராமேசுவர சுப்ரபாதங்களை இசைத் தட்டில் பதிவு செய்ததன் மூலம் நான் எனது வாழ்க்கைப் பயனை அடைந்து விட்டேன்'' என்கிறார் ஸ்ரீமதி எம். எஸ்.

இறையுணர்வுடன் கூடிய தமது இசையால் ஏதோ மாயாஜாலம் போன்று மனித குலத்தின் இதயங்களையெல்லாம் ஒன்றுபடுத்தியுள்ள ஸ்ரீமதி எம். எஸ்., இந்த இசைத் தட்டின் வாயிலாகத் திருப்பள்ளி யெழுச்சி பாடும் போதே, இந்த உலகின் க்ஷேமத்துக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் கண் திறந்து பார்த்துக் கருணை கடாட்சத்தை அருளுமாறு மனமுருகி காசி–ராமேசுவர தெய்வங்களை வேண்டுகிறார்.

வாரணாசியில் உள்ள சிறந்த சமஸ்கிருத அறிஞர்கள் தொகுத்த காசி விசுவநாத சுப்ரபாதம் இந்தப் புதிய இசைத்தட்டின் ஒரு பக்கத்தில் பதிவாகியுள்ளது. வால்மீகி, ஆதி சங்கரர் போன்றவர்கள் இயற்றியுள்ள சில வரிகளும் சில அடிகளும் இதில் இடம் பெறுகின்றன. விசுவநாதரின் புகழ் பாடுவதுடன் காசி க்ஷேத்திரம், புனித கங்கை, அதன் மணிகர்ணிகா கட்டம் ஆகியவற்றின் மகிமையையும் சுப்ரபாதம் எடுத்தியம்புகிறது. வாராணசியின் இதர முக்கிய கடவுளரான அன்னபூர்ணேசுவரி, டுண்டி கணேசர், கால பைரவர், மாதவர் ஆகியோரின் சிறப்புக்களையும் கூறுகிறது.

காசி சுப்ரபாதத்தைத் தொடர்ந்து ஆதி சங்கரர் இயற்றிய சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்திரமும் அன்னபூர்ணாஷ்டகமும் இசைத்தட்டின் முதல் பக்கத்தில் இடம் பெறுகின்றன.

இசைத் தட்டின் மறுபக்கம் ''கவிகோகில'' டாக்டர் வே. ராகவன் இயற்றிய ராமேசுவர ராமநாத சுப்ரபாதம் ஒலிக்கிறது. இந்தத் திருப்பள்ளியெழுச்சி சுலோகங்களில் - வேதங்கள், ராமாயணம், புராணங்கள் ஆகியவற்றிலிருந்து கருத்துக்களை எடுத்துக் கொண்டு அவற்றுக்குக் கவிதா உருவம் தந்து ராமநாதனையும் அவரது தேவி பர்வதவர்த்தினியையும் துதிக்கிறார் திரு ராகவன். அதோடு இந்த க்ஷேத்திரத்தை நிறுவிய ஸ்ரீராமர், சீதை, மாருதி ஆகியோரையும் சேதுவில் உள்ள பலப்பல தீர்த்தங்கள், புனித கட்டங்கள் ஆகியவற்றையும் வணங்கித் துதிக்க வழி செய்கிறது இந்த சுப்ரபாதம். ராமேசுவரத்துக்கு விஜயம் செய்து, பக்தியில் கரைந்து க்ஷேத்திர மகிமையைப் பாடியுள்ள பல தமிழ்ப் புலவர்கள், துறவிகள், தபஸ்விகள் ஆகியோரைப் பற்றி சுப்ரபாதம் பக்தியோடு குறிப்பிடுகிறது. அவர்களிலெல்லாம் தலையாய இடம் பெறுகிறவரும் அக்னி தீர்த்தத்தில் ஆதிசங்கரரின் சந்நிதியை அமைத்தவருமான காஞ்சிப் பெரியவாளுக்கு வணக்கம் தெரிவிக்கிறது.

சுப்ரபாதத்தில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர் பற்றி வந்துள்ள ஒரு குறிப்பையொட்டி ராமேசுவர ராமநாதர் மீது அவர் இயற்றியுள்ள, ''ராமநாதம்பஜேஹம்'' என்ற பாடல் மிகப் பொருத்தமாக இறுதியில் ஒலிக்கிறது.

இத்தனை சிறப்புக்களைக் கொண்ட அருமையான இசைத்தட்டு இம்மாதம் 29ல ஸ்ரீ ராமநவமி தினத்தன்று பாரதத்தின் முக்கிய



நகரங்கள் பலவற்றில் இதற்கென்றே நடை பெறும் விழாக்களில் வெளியிடப்படுகிறது.

வடக்கே காசி க்ஷேத்திரத்தில் மேன்மைதங்கிய காசி மகாராஜா இசைத்தட்டை வெளியிடுகிறார். இந்த வைபவத்தில் ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம். எஸ்., ஸ்ரீமதி ராதா விசுவநாதன் ஆகியோர் நேரில் சென்று பங்கெடுத்துக் கொள்கின்றனர். விழா அமைப்பாளர் ஸ்ரீ ஜவாஹர்லால் டாண்டன் மிக உற்சாகத்துடன் ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். காசி விசுவநாதர் கோயிலில் நடக்கும் இசைத் தட்டு வெளியீட்டு விழாவோடு ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுக்குப் பாராட்டு விழாவும் இணைகிறது. மறுநாள் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் இன்னிசைக் கச்சேரி, முராரிலால் மேத்தா அரங்கில் நடக்கிறது.

தெற்கே ராமேசுவரத்தில் சேதுபதி ராஜா இசைத்தட்டை வெளியிடுகிறார். ராமேசுவரம் சுப்ரபாதத்தை இயற்றிய டாக்டர் வே. ராகவன் விழாவில் பங்கேற்கிறார். ஸ்ரீ அக்னி ஹோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் வாழ்த்துரை வழங்குவார்.

சென்னையில் மயிலை கபாலீசுவரர் கோயிலில் மேதகு ஆளுனர் திரு சுகாதியா இசைத் தட்டை வெளியிடுகிறார். திரு வி. சந்திரசேகரன், திரு வைத்திய சுப்பிரமணிய அய்யர், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர் விழாவில் பங்கேற்கின்றனர்.

பம்பாயில் சுவாமி சின்மயானந்தாவின் பிரதம சீடர் சுவாமி தயானந்தா இசைத் தட்டை வெளியிடுகிறார். ஷண்முகானந்த சபா திரு டி. வி. ராமானுஜம் தலைமை வகிக்கிறார். பாரதிய வித்யா பவன் திரு ராமகிருஷ்ணன் பங்கேற்கிறார். மாதுங்கா பஜனை சமாஜத்தில் விழா நடைபெறுகிறது.

புதுதில்லியில் பாரதிய வித்யாபவனில் நடக்கும் விழாவில் மேதகு ஜெய்சுக்லால் ஹாத்தி தலைமையில் சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி திரு கஜேந்திர கட்கர் இசைத்தட்டை வெளியிடுகிறார்.

கல்கத்தாவில் திரு கிரிதாரிலால் மேத்தா இசைத்தட்டை வெளியிடுகிறார். டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி தலைமை வகிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெங்களூரில் கர்நாடக ஆளுனர் திரு உமா சங்கர் தீக்ஷித் தலைமை தாங்க இசைந்துள்ளார். மைசூர் உயர்நீதிமன்ற முன்னாள் பிரதம நீதிபதி ஸ்ரீ நிட்டூர் ஸ்ரீநிவாஸ ராவ் இசைத்தட்டை வெளியிடுகிறார். இங்கு விழா கோகலே பப்ளிக் அஃபேர்ஸ் இன்ஸ்டிட்யூட்டில் நடக்கிறது.

ஹைதராபாத்தில் சுவாமி ரங்கநாதானந்தா இசைத்தட்டை வெளியிடுகிறார். ஹைதராபாத் உயர்நீதிமன்ற நீதிபதி அல்லாடி குப்புசாமி தலைமை தாங்க இசைந்துள்ளார். விழா நடக்குமிடம்: ராமகிருஷ்ண ஆசிரமம்.

நாகபுரியில் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஸ்ரீ நியோகி இசைத்தட்டை வெளியிடுகிறார். நாகபுரி பாரதிய வித்யாபவனில் விழா நடக்கிறது.

கோழிக்கோடில் மாத்ருபூமி பிரதான ஆசிரியர் திரு கே. பி. கேசவ மேனன் இசைத் தட்டை வெளியிடுகிறார். கேரள மாநில ஆளுனர் மேதகு வாஞ்சு அவர்கள் தலைமை தாங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சிப் பெரியவாள் இந்த இசைத்தட்டின் பெருவாரியான உற்பத்தி தொடங்கு முன்னரே, முதல் பதிவினையே கேட்டுத் தமது நல்லாசிகளை வழங்கினார்கள். புதுப் பெரியவாள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஸ்ரீ ராமநவமி தினத்தன்று மதுரைக்கருகே இருப்பார்கள். அவர்களிடம் அன்று அதிகாலையில் ஓர் இசைத் தட்டைச் சமர்ப்பித்து ஆசி பெறப்படும்.

காசி — ராமேசுவரம் சுப்ரபாதம் இசைத் தட்டின் மேலுறைப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் பிரசுரித்து விசுவநாதரையும் ராமநாதனையும் வணங்கி லோகக்ஷேமத்தை வேண்டுகிறோம்.

வண்ணச் சித்திரம்: விஜு

மந்திரி நினைப்பும் மக்கள் நடப்பும்!

○ "தானியக் கதிர்களை எலிகள் நாசம் செய்து விடுகின்றன. எனவே எலிகளைக் கொன்று கிராம அதிகாரியிடம் ஒப்படைப்பவர்களுக்கு, ஓர் எலிக்குத் தலா இருபத்தைந்து காசு வீதம் பரிசு வழங்கப் படும்" என்று மந்திரி அறிவித்தார்.

ஒருசில வருடங்கள் சென்றன. அந்தக் கிராமத்தில் விவசாயம் முன்னேற்றமடையவே இல்லை. மாறாக விளைச்சல் மிகவும் குறைந்து போய்விட்டது.


விவசாய மந்திரி மீண்டும் அந்தக் கிராமத்துக்கு வந்தபோது அதிகமான நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாகக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டார். காரணம் விசாரித்தபோது கிராம அதிகாரி சொன்ன பதில்:



"ஓர் எலியைக் கொன்று வந்து கொடுத்தால் இருபத்தைந்து பைசா பரிசு என்று அறிவித்தீர்கள். எலிகளைக் கொன்ற விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் இந்த வகையில் நல்ல வருமானம் கிடைத்தது. எனவே எலிப் பண்ணைகளை வைத்து, ஏராளமான அளவில் எலிகளை உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். குறிப்பிட்ட வளர்ச்சியில் அவைகளைக் கொன்று வந்து கொடுத்துப் பரிசுப் பணம் பெற்றுக் கொண்டு செல்கிறார்கள். இந்தச் சுலபமான வருவாய் இருக்கும்போது எதற்காக அவர்கள் விவசாயம் செய்து பாடுபட வேண்டும்?" -எம். ரவீந்தர

○ '35 ஆயிரம் கரப்பான் பூச்சிகள் எங்கே கிடைக்கும்' என்று ஒருவர் கேட்டார். 'எதற்கு அவ்வளவு?' என்று கேட்டார் நண்பர். 'என் வீட்டைக் காலி செய்யப் போகிறேன். நான் வீட்டுக்கு முதலில் வந்தபோது எப்படி இருந்ததோ அப்படியே விட்டுப் போக வேண்டும் என்று வீட்டுக்காரர் சொல்கிறார்.' டிட்பிட்ஸ் - கே. ஆர்.

ஹார்லிக்ஸ்



ஒவ்வொரு நாளும் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் ஊட்டச் சக்தி.

ஒவ்வொரு நாளும் ஹார்லிக்ஸ் அருந்தினால், அது உங்கள் குடும்பத்தினருக்கு எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் ஊட்டச் சக்தியை அளித்து, அவர்களை பூரண ஆரோக்கியத்துடன் விளங்கச் செய்கிறது.

உலகமெங்கிலும் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுவது ஹார்லிக்ஸ் ஒன்றுதான். தனிச்சிறப்பு மிக்க ஹார்லிக்ஸ் செய்முறை, ஹார்லிக்ஸில் அடங்கியுள்ள சத்துமிக்க, சுத்தமான பொருள்களை கலக்கும்பொழுது, அவற்றிலுள்ள இயற்கையான, நல்ல தன்மைகளை நிறுத்தி, அவற்றை எளிதில் ஜீரணிக்க வகை செய்கிறது. அதனால், மிகுந்த அளவில் ஊட்டச்சக்தியை அளிப்பதும் ஹார்லிக்ஸ் ஒன்றுதான்.

அதனாலேயே, சுசித்ரா ஹார்லிக்ஸை தனது குடும்பத்தினரது வாழ்க்கையின் ஒரு அம்சமாக்கி இருக்கிறாள்.

சுசித்ராவைப் போன்றே, உங்கள் குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு நாளும் ஹார்லிக்ஸ் அளித்து, அவர்கள் ஆரோக்கியமாகவும், வலுவுடனும் வளருவதைக் கவனியுங்கள்.

"ஊட்டச்சத்திற்கு ஹார்லிக்ஸை ஒரு முக்கியமான மூலப்பொருள் உங்களுடைய குடும்பத்தினரின் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கவும், அவர்களை ஒவ்வொரு நாளும் ஆரோக்கியமாக வைத்திருக்கவும் நான் ஹார்லிக்ஸையே சிபாரிசு செய்கிறேன்".



ஹார்லிக்ஸ் முழுமையான ஊட்டம்பெற



படித்தோம் சொல்கிறோம்

கோமகள் கோவளை


சோழப் பேரரசின் இளவரசி கோவளை திறமைக் குறைவுள்ள சகோதரர் அதிராஜேந்திரரைப் பட்டத்து இளவரசராக்கித் தன் கைக்குள் அதிகாரத்தைப் பிடிக்க நடத்தும் சதிப் போராட்டங்கள் 'கோமகள் கோவளை' சரித்திர நாவலாக விரிந்திருக்கிறது. அதிகார வெறி பல கொலைச் செயல்களையும், எதிரியோடு சேர்ந்து சதி செய்யும் அளவுக்கும் கொண்டு வந்து விடுகிறது! சளுக்கிய நாட்டின் இளவரசர் விக்கிரமாதித்தனோடு இளவரசி கோவளை செய்யும் சதிச் செயல்கள் கடைசியில் வெட்ட வெளிச்சமாகின்றன. அந்தச் சதிச் செயல்களைச் செய்ததும் தன் காதல் வெற்றிக்காக என்று சொல்லி வாதிடும் கோவளை மாமன்னர் வீரராஜேந்திரருடைய தண்டனையிலிருந்து தப்பும் கட்டம் உணர்ச்சிகரமான கட்டம்!

'கோமகள் கோவளை' நாவலைக் கையிலெடுத்தால் அதைப் படித்து முடித்துவிட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் முறையில் நாவலாசிரியர் ஜெகசிற்பியன் படைத்திருக்கிறார். அவரது இனிய எளிய நடை நாவலின் வேகத்துக்கு உறுதுணை செய்கிறது.

பிரசுரம்: வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17. விலை ரூ. 10.-பி.எஸ்.எம்.

குழந்தைகள் கலைக் களஞ்சியம்

வெளவால் தன் கண்களை அதிகம் பயன்படுத்துவதில்லை. அது ஒலியெழுப்பி, அந்த ஒலி எதிரில் பூச்சி, புழு அல்லது வேறு எந்தச் சிறு பொருள் இருந்தாலும் அதன் மீது பட்டு எதிரொலி உண்டாக்கும். இந்த எதிரொலியைக் கொண்டுதான் வெளவால் தன் எதிரில் உள்ள பொருள் எந்தத் திசையில் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று அறிந்துகொள்கிறது. எனவேதான் இருட்டிலும் கூட வெளவால் மரத்திலோ அல்லது சுவரிலோ மோதிக்கொள்ளாமல் பறக்கிறது. வெளவாலின் குரல் மிக உச்சத் தொனியில் உள்ளது. இதன் ஒலி ஒரு விநாடிக்கு 30,000 முதல் 70,000 அதிர்வுகளைக் கொண்டது. வினாடிக்கு 20 முதல் 20,000 வரை அதிர்வுகளைக் கொண்ட ஒலியைத்தான் நாம் கேட்க முடியும். அதனால்தான் வெளவால் எழுப்பும் குரலொலியை நம்மால் கேட்க முடிவதில்லை.



வெளவாலைப் பற்றி இந்த அரிய செய்தியைத் தெரிந்துகொண்ட கையோடு ஹௌரா பாலத்துக்கு வருவோம். இந்தியாவிலேயே மிக நீளமான பாலம் இதுதான். மின்சார டிராம், மோட்டார் வண்டிகள் மட்டுமின்றி மாட்டு வண்டிகள் செல்லவும் இப்பாலத்தில் தனி வழிகள் உண்டு. பாலத்துக்கு அடியில் கப்பல் செல்லலாம். அவ்வளவு உயரமானது.

அது சரி, வெளவாலுக்கும் ஹௌரா பாலத்துக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? குழந்தைகள் கலைக் களஞ்சியம் பத்தாம் தொகுதியில் ஆரம்பம் வெளவால்; முடிவு ஹௌரா.

பத்தாம் தொகுதியுடன் குழந்தைகள் கலைக் களஞ்சியப் பணி முற்றுப் பெறுகிறது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் முதலில் கலைக் களஞ்சியமும் பிறகு குழந்தைகள் கலைக் களஞ்சியமும் உருவாக உழைத்தவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் நன்றிக்குப் பெரிதும் பாத்திரமாகியுள்ளனர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு தி. சு. அவினாசிலிங்கமும் கலைக் களஞ்சியப் பதிப்பாசிரியர் திரு பெரியசாமி தூரனும்.

இந்தப் பத்தாம் தொகுதி மற்ற தொகுதிகளைப் போலவே ஏராளமான வண்ணப் படங்களுடன் மிக நேர்த்தியாகப் பெரிய எழுத்துக்களில் குழந்தைகள் மனம் கவரும் விதமாக அச்சாகியுள்ளது. மற்ற தொகுதிகளில் இல்லாத ஒரு விசேஷமும் இத் தொகுதியில் உள்ளது. அதுதான் பத்துத் தொகுதிகளுக்கும் சேர்த்து அமைந்த பொருட் குறிப்பு அகராதி.

குழந்தைகளின் மன இயல்பைப் புரிந்து கொண்டு இந்தப் பொருட் குறிப்பு அகராதி

யிலும் கூடச் சில வண்ணப் படங்களைச் சேர்த்திருக்கிறார்கள். அத்தனை கருத்தும் சிந்தனையும் தயாரிப்பில் இருந்திருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகம் பற்றிய சிறு அறிமுகக் கட்டுரையும் அனுபந்தமாக இணைந்திருக்கிறது.

நிலையான பயன் தரும் தலையாய தொண்டு.

—குட்டி கிருஷ்ணன்

கிடைக்குமிடம்: ஓரியண்ட் லாங்மன் லிட். 36, ஏ, அண்ணாசாலை, சென்னை-600.002. விலை குறிப்பிடப்படவில்லை.

காண்டேகர் மணிமொழிகள்

மராட்டிய மொழிக்கு இலக்கிய வளம் சேர்த்த ஸ்ரீ காண்டேகர், தமிழ் இலக்கியத்துக்கும் மணியான பணி செய்தவர். அவரைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்திய ஸ்ரீ கா. ஸ்ரீ ஸ்ரீ அவர்கள் அபிநவ காண்டேகர் என்று அவரோடு சேர்த்துப் புகழப் பெற்றவர்.

பாரதீய ஞானபீடத்தின் விருது பெற்ற ஸ்ரீ காண்டேகரின் சொல்லோவியங்களிலிருந்து ரகம் ரகமாகத் தரமான மணிமொழிகளைத் தேர்ந்தெடுத்துத் தந்திருக்கிறார் திரு அன்புப் பழம் நீ.

சிறப்பான பொறுக்கு மணிகள்தான் என்றாலும், தோடு, மூக்குத்தி போன்ற கட்டடங்களில் பதித்திருக்கும்போது, அவற்றை அணிய வேண்டியவர்கள் அணிந்திருக்கும்







✖ ஜெகசிற்பியன்

✖ நாரன்

✖ காண்டேகர்

✖ வண்ணநாசன்

போது, பொலிவு தரும் அழகே வேறுதானே? காண்டேகரின் இந்த மணிமொழிகள் அவரது நூல்களில் எந்த இடத்தில், எப்படிக் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை அறியும் ஆவலைத் தூண்டிவிடுமானால் அன்புப் பழம் நீ தம் முயற்சியில் பழம் எடுத்தவர்தான்.

—ரா.வீ.

கிடைக்குமிடம்: பாரி நிலையம், 54, பிராட்வே, சென்னை 600.001. விலை ரூ. 2.

கலைக்க முடியாத ஒப்பனைகள்

சிறுகதை ஆற்றில் எத்தனையோ படித்துறைகள். அவற்றில் எல்லாம் வைத்து மிகச் சிரமசாத்தியமான துறை, ஒரு நிகழ்ச்சியின் சூழ்நிலையை அப்படியே வாசகன் உணரும்படியாகச் செய்யும் கலை.

வண்ணதாசன் இத்துறையில் இறங்கி ஓரளவு வெற்றிகரமாக வெளிவந்திருக்கிறார். திருக்குற்றாலத்து அருவிக்குப் போகும் வழியில் தைல எண்ணெய் விற்கும் கடையின் சூழ்நிலையையும் அந்தக் கடைக்காரர் பாத்திரத்தையும் 'ஓர் அருவியும் மூன்று சிரிப்பும்' என்ற கதையில் மிக ரசமாக வடித்திருக்கிறார். ஒரு முறை குற்றாலத்துக்குப் போய் வந்தவர்கள் இந்தக்கதையின் மூலம் மற்றொரு முறையும் எவ்விதச் செலவுமின்றிப் போய்விடலாம்.

அதே போல் ''சபலம்'' என்ற கதையில் ஏழைப் பள்ளி ஆசிரியர் இரண்டாம் வகுப்புக் குழந்தை ''சாக்லேட்'' சாப்பிடுவதைக் கண்டு சபலமடைவதும், குழந்தைகள் சண்டை கடைசியில் ''அட்டென்டென்ஸ்'' எடுக்கையில் ஒரு கணத்தில் மறைந்து போவதையும் நல்ல முத்தாய்ப்போடு முடித்திருக்கிறார். நல்ல கதை.

இவர் கைப்பற்றத் தொடங்கியுள்ள முறை மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய முறையாகும். இல்லையானால் நேரே போய்க் கொண்டிருக்கும் ரயிலை லூப் லைனில் தவறிக் கொண்டு போய் விடுவது போல், கதைக்கு எடுத்துக்கொண்ட சூழலைவிட்டு வேறெங்கோ சென்று, கதையையும் கெடுத்து வாசகனையும் அலுப்படையச் செய்யும். ஆகவே சிறு சிறு விஷயங்களையெல்லாம் தொகுத்து எழுதுகையில், பிரதான விஷயத்துக்கு உதவுவதாக இருக்கிறதா என்று கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுப் பார்த்துக் கொண்டே கதை எழுத வேண்டும். சில கதைகளில் சம்பந்தமில்லாத வரலாறுகளைக் கொடுத்து அலுக்கச் செய்கிறார் வண்ணதாசன்.

கதைகள் யாவும் திருநெல்வேலி கொச்சைத் தமிழில் இருக்கின்றன. இந்தப் பேச்சுத் தமிழை அறிந்தவர்கள்தான் படித்துப் புரிந்து கொள்ள முடியும். மற்றவர்களுக்குப் புரிவதே கஷ்டம்.

புது மாதிரியான படங்களுடனும் பக்க அமைப்புகளுடனும் இத்தொகுதி வெளிவந்துள்ளது. அச்சுத் தொழிலிலும் இப்புத்தகம் புதிய பாதை வகுத்துள்ளது. இந்த அம்சம் பாராட்டப்பட வேண்டியதாகும்.

—எஸ்.வி.எஸ்.

பிரசுரம்: வண்ணதாசன், 21-இ, சுடலைமாடன் கோவில் தெரு, திருநெல்வேலி—627006. விலை ரூ. 10.



எம். ஜி. ஆருக்காகவே, முழுக்க முழுக்க எம்ஜியாரையே உயர்த்திக் காட்டும், எம்ஜியார் 'மசாலாக்கள்' நிறைந்த ஓர் எம்ஜியார் படம்! இந்தப் படத்தில் ஒரு மாறுதல்—எம்ஜியாருக்கு இரட்டை வேடம் இல்லை. மற்றப்படி 'டிஷ்யூம் டிஷ்யூம்' சண்டைகள், பல மாறுவேடங்கள், அயோக்கியனைப் பிடித்துக் கொடுப்பதற்காகப் போலீஸுக்கு மறைந்து வாழ்தல், நாடகத்தில் நடித்தல், நடனம் ஆடுதல், ஓர் ஏழைக் குடிசை வாழ் குருவிக்காரப் பெண்ணைக் காதலித்து அவள் கரம் பற்றுதல், பல பெண்கள் ஒருமிக்கக் காதலித்தும் இம்மிகூட மனம் தளராமல், ஏகபத்தினி விரதனாய் இருத்தல் ஆகிய எல்லாச் சுவையான சங்கதிகளும் உண்டு.

படத்தின் கலை நுணுக்கங்கள், 'ஈஸ்ட்மென் கலர்' ஒளிப் பதிவு, வெளிப்புறக் காட்சிகள் யாவும் சிறப்பாயிருக்கின்றன. எம்.ஜியார் படங்களின் தனிச் சிறப்பு பாடல்கள். அவை மிகவும் இனிமையாயிருக்கின்றன.

ஏ. பி. நாகராஜன் பண்பட்ட சினிமா டைரக்டர்; பண்பில் உயர்ந்த பல படங்கள் எடுத்தவர்; சிறந்த டைரக்டர்; வசன கர்த்தா, கதாசிரியர். ஆனால் ''நவரத்தின''த்தில் எதற்கும் அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் ஒரு கதை அளந்து விட்டார். அவர் தமது கதை என்று சொல்லிக்கொள்ள இதில் எதுவும் இல்லை. 'எம்ஜியார் கதம்பம்' என்று வேண்டுமானால் சொல்லலாம்.

பட்டாளத்து அத்தான் (சின்ன வயதில் பார்த்தது) திரும்பி வந்து விட்டான் என்று அளவு கடந்த குதூகலத்தில் ஆழ்ந்து உற்சாகக் குதி போட்டுவிட்டுப் பிறகு உண்மை தெரிய வந்ததும், பொங்கிப் பொருமிக் கண்ணீர் வடிக்கும் கிராமத்துப் பெண் பவளாயியாக வரும் ஜெயசித்ரா நடிப்பில் முதல் இடம் பெறுகிறார். அடுத்த இடம் 'குருவிக்காரி' லதாவுக்குத்தான். அடேயப்பா! என்ன தொடிப்பு! என்ன துடிப்பு! பவளாயியின் கிராமத்துத் தோழியாக வரும் புஷ்பலதா அருமையாக நடித்திருக்கிறார்.

தமிழ்ப் பட வில்லன்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு வரும் இந்நேரத்தில் எம். என். நம்பியார் பழைய பாணியை அப்படியே கடைப்பிடித்து வருகிறார். தேங்காய் சீனிவாசனும், 'அச்சச்சோ' சித்ராவும் காமெடிக் காட்சிகளுக்குக் களையூட்டியிருக்கின்றனர்.

விலைமகளாக வரும் ஸ்ரீப்ரியா, மனத்தில் பதியும் வண்ணம் நடித்திருக்கிறார். தம் அவல நிலையை விரக்தியோடு கதாநாயகனிடம் விளக்கிய இடம் ஒன்று போதும் அவரைப் பாராட்ட. நல் வழிக்குத் திரும்பிய பிறகும் இவர் நடிப்பில் நல்லதொரு மாற்றம் தெரிகிறது.

ஒரு நயமான கதையை ரசமாகக் காட்டுவிருப்பார் என்று ஏ. பி. நாகராஜனை நம்பியவர்களை அவர் நன்றாய் ஏமாற்றி விட்டார்!

—காந்தன்



நான் சமீபத்தில் மதுரையில் ஒரு பிரபல வக்கீல் வீட்டுக்குச் சென்றிருந்தபோது சி. ஆர். நரசிம்மன் அவர்களும் அங்கு வந்திருந்தார். வக்கீலுக்கு அப்போதுதான் பிறந்திருந்த பேரக் குழந்தையின் கையில் பணத்தை வைத்த அவர், 'ஏன்டா சின்னப் பயலே! நீ எப்போ கூப்பிட்டாலும் நான் தூணில் இருந்துகூடப் பிளந்து கொண்டு வர வேண்டும்' என்றார். நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன். பின்புதான், அந்தக் குழந்தையின் பெயர் பிரஹ்லாதன் என்று தெரிந்தது. —கௌரி ப்ரியா

ராஜனின் தாயார் உடல்நலமின்றி இருப்பதாக ஐஸ் ஹவுஸுக்கு ஒரு தந்தி வந்தது. அவளருகே இருப்பதற்காக அவன் உடனே புறப்பட்டான். பயணத்தின் கடைசி கட்டத்தில் அவன் ஜட்காவில் போக வேண்டியிருந்தது. ஜட்கா ஒன்றை அமர்த்திக் கொள்ளும் போது, முஸ்லிம் குதிரை வண்டிக்காரன் சகா ஒருவனிடம் உருதுவில் 'இந்த இளைஞனின் தாய் இறந்து விட்டாள்' என்று கூறியதாக ராஜனுக்குத் தோன்றியது. அது உறுதியாகி விடக் கூடாதே என்று பயந்தவனாக அவன் கேள்வி ஏதும் கேட்காமலேயே இருந்து விட்டான். முன்சீப் வீடு நோக்கிச் சென்ற ஜட்காவில் குலுங்கியபடி அமர்ந்திருந்த பயணி கடைசி வரையில் மௌனம் சாதித்தான்.

அவன் காதுகள் அவனை ஏமாற்றியிருக்கவில்லை. சிங்காரம்மா இறந்துதான் போயிருந்தாள். காலராவுக்குப் பலியாகி விட்டிருந்தாள். அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவில்லை என்று ராஜன் தன் தகப்பனாரைக் குற்றம் சாட்டினான். ''எனக்கு ஏற்பட்ட வேதனையாலும் அதிர்ச்சியாலும் அவரை நான் ஏசினேன். அதற்காக அன்று முதல் இன்று வரை நான் வருத்தப்பட்டுக் கொண்டுமிருக்கிறேன்'' என்று ராஜாஜி பின்னால் ஒருசமயம் ஒப்புக் கொண்டார்.[1]

இந்தக் கிராமத்தில் வளர்ந்தவள் ராஜனின் தாயார். அவள் தனக்காக ஒரு பெண்ணைப் பார்த்து வைத்திருந்தாள் என்பது ராஜனுக்குத் தெரியும். அந்தப் பெண் குப்பத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் லக்ஷ்மிபுரம் கிராமத்தில் வசித்தாள். பெயர் அலர்மேலு மங்கம்மாள். சுருக்கமாக அலமேலு என்றோ அல்லது மங்கா என்றோ அழைத்தனர்.

அவள் தகப்பனார் திருமலை சம்பங்கி அய்யங்கார் ஊர் ஊராகச் சென்று ஹரிகதைகள் சொல்பவர். எளிமையானவர், மென்மையான மனமுடையவர். வைஷ்ணவர்களின் கரங்களில் ஆசார சீலத்தை உறுதிப்படுத்தும் வகையில் சிறிய சங்கு சக்கரங்களைப் பச்சை குத்துவது அவரது பரம்பரைத் தொழில். ராஜன்கூட இப்படித் தன் கரங்களில் பச்சை குத்திக் கொண்டதுண்டு. திருமலை சம்பங்கி ஐயங்கார் தம் மகளைச் சிங்காரம்மாவின் மகனுக்குக் கொடுக்கச் சித்தமாயிருந்தார்.

லக்ஷ்மிபுரம் கோயிலில் மங்கா சேவித்து விட்டு வருவதை ராஜன் பார்ப்பதற்கு ஏற்பாடாயிற்று. சொக்கிப் போன அவன் அவளை ஏற்பதாகச் சொன்னான்.

குப்பம் கிராமத்தில் வாழையும் மாவிலைத் தோரணங்களும் கட்டி மலர்களால் அலங்கரித்த முற்றத்தில் ஐந்து நாள் திருமண வைபவங்கள் சம்பிரதாயமாக, ஆனால் அடக்கமாக நடந்தன. விருந்தினர் முன்னிலையில் சம்பங்கி அய்யங்கார் தமது பெண் மங்காவை ராஜனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். விவாக மந்திரங்கள் ஒலிக்க ராஜன் தன் மனைவியின் வலக்கரம் பற்றித் தீயை வலம் வந்தான். அந்நாளைய புதுமணப் பெண்கள் பலரைப் போல் மங்காவுக்கும் வயது பத்துதான்.

ராஜாஜி

வாழ்க்கை வரலாறு



''ஏழைப் பெண்ணை ஏற்பேன்!''

ராஜனின் கல்யாணப் பேச்சுக்கள் ஆரம்பமாயின. இவர்களை விடப் பணக்காரக் குடும்பங்களிலிருந்து பெண் கொடுப்பதாகச் சொன்னார்கள். முன்சீப், அவர்களில் சிலரைப் பற்றி யோசிக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டார். ஆனால் ராஜன் அனைவரையுமே வேண்டாம் என்று ஒதுக்கி விட்டான். ''கடைசியில் நீ ஓர் ஏழைப் பெண்ணை மணந்து கொள்ளும்படியாகி விடும்'' என்று சித்தி கூறினாள். ''ரொம்ப சரி, ஒரு ஏழைப் பெண்ணைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்புகிறேன்'' என்று ராஜன் பதில் சொன்னான்.

பெங்களூர் மெட்ராஸ் பாஸஞ்சர் வண்டி பெரும்பாலும் தெலுங்கு பேசுவோரே வாழ்ந்த குப்பம் கிராமத்தில் ஒரு சில வினாடிகள் நிற்கும்.

தகப்பனாரின் ஆசை

இன்னும் குழந்தையாகவே இருந்த மனைவி தன் பெற்றோருடன் வசித்தாள். மணமகன் சட்டப் படிப்பைத் தொடரச் சென்னை திரும்பினான். 1900-ம் வருஷம் ஜனவரி மாதம் தனது இருபத்தோராவது வயதில் ராஜன்

1. நூலாசிரியரிடம் உரையாடலின்போது கூறியது.

பி. எல். தேறினுன் — மூன்ருவது வகுப்பில். ஒருவேளை அவன் தாயாரின் மரணமும் அவனுடைய திருமணமும் படிப்பைப் பாதித்திருக்கலாம். எவ்வாருயினும் பரீட்சையை முன்னிட்டு அதற்காகப் படிப்பதில் அவனுக்கு ஒரு மேம்போக்கான சிரத்தைதான் இருந்தது என்றே தோன்றுகிறது. தங்கப் பதக்கம் பெறுகிற ஒருவனுக்கு இருக்கக் கூடிய பரீட்சை ஆர்வம் ராஜனுக்கு இருக்கவில்லை.

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்ட ராஜனுக்கு வக்கீலாகத் தொழில் நடத்துவதே இயல்பாகப் பட்டது. சில புத்திசாலி இளைஞர்கள் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேற பிரிட்டனுக்குச் சென்றனர் என்பது உண்மைதான். இத்தகைய திட்டம் ராஜன் அல்லது அவன் தகப்பனுர் மனத்தில் எழுந்திருந்தால், அதை ராஜனுடைய மந்தப் பார்வை காரணமாகவும் அவன் தந்தையின் வறுமை காரணமாகவும் கைவிட நேர்ந்திருக்கும்.

சக்கரவர்த்தி அய்யங்கார் தம் மகன் ஒரு நீதிபதியாக ஒருநாள் விளங்குவான் என்று எதிர்பார்த்திருக்கலாம். அவன் பிறந்தபோது ஒரு ஜோதிடர் எதிர்காலத்தில் அவன் ராஜப் பிரதிநிதியாகவே — வைஸ்ராயாகவே — விளங்குவான் என்று சொன்னுர். அது அபத்தமாகத் தோன்றியது. ஆனுல் ஒரு நீதிபதியாக விளங்குவதென்பதே பெரிய விஷயம் தான். அது நடக்க முடியாத காரியமும் அல்ல.2 வக்கீலாகப் பணியாற்றினுல் நாளடைவில் நீதிபதியாக உயரலாம். தொரப்பள்ளியும் ஒசூரும் எந்த ஜில்லாவைச் சேர்ந்தவையோ அந்த ஜில்லாவின் தலைநகரான சேலத்தில் தாலே முன்சீப்பின் பெரிய எஜமானரான கலெக்டர் துரையின் காரியாலயமும் இருந்தது! எனவே சேலம் நகரில்தான் ராஜன் வக்கீல் தொழில் நடத்த வேண்டும் என்று அப்பாவும் பிள்ளையுமாகத் தீர்மானித்தனர்.

- அரவிந்த கோஷ்
- வீ. விஜயராகவாச்சாரியார்





ராஜ்மோகன் காந்தி

3. சேலத்தில் முதல் பத்தாண்டுகள்

சேர்வராயன் குன்றுகளுக்கு இடையில் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது சேலம் நகர். வடக்கே உயர்ந்துள்ள குன்றுகள். தெற்கே தொடுவானை நோக்கி அலை அலையாக நெளிந்து சரிகின்றன. ஸி. ஆர். என்று நண்பர்களாலும் கட்சிக்காரர்களாலும் சீக்கிரமே அழைக்கப்பட விருக்கும் ராஜன் இந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் சேலத்துக்கு வந்து சேர்ந்தபோது அதன் ஜனத்தொகை எழுபதாயிரம். குன்றுகளில் காப்பி பயிரிடுவதில் சோதனைகள் நடத்தி வெற்றி கண்டாகி விட்டது. ஆனுல் நகரத்திலோ சுற்றுவட்டாரத்

---

2. சக்கரவர்த்தி ஐயங்கார் இந்தச் சோதிடக் கருத்தை அடியோடு புறக்கணித்துவிடவும் இல்லை. தமது நண்பர் ஒருவரது மகன் திவானுக வருவான் என்று ஒரு சோதிடர் கூறியதாகக் கேள்விப்பட்டதும், "அது என்ன பிரமாதம்! என் மகன் வைஸ்ராயாகவே விளங்கப் போகிறுன்!" என்று பதிலுரைத்தாராம்.

நிலோ தொழில்கள், சிறிதோ பெரிதோ எந்த அளவிலும் மாதிரிக்குக் கூட இருக்கவில்லை.

சேலத்தின் தாழ்ந்த கூரைகளையுடைய ஆயிரக்கணக்கான வீடுகளில் கைத்தறிகள் இயங்குவதன் எதிரொலி மட்டும் சதா கேட்டுக் கொண்டேயிருந்தது. சேர்வராயன் குன்றுகளில் கடல் மட்டத்திலிருந்து 4500அடி உயரத்தில் அமைந்த ஏர்க்காடுக்கு ஐரோப்பியர்கள் அடிக்கடி செல்வார்கள். நகரின் இந்தியப் பிரமுகர்கள், விரல் விட்டு எண்ணி விடக்கூடிய சில வக்கீல்களும் அரசு அதிகாரிகளுமே. அதிகாரிகளிலும் மிக உயர்ந்த பதவி வகிப்போர் யாருமில்லை. அந்தப் பதவிகள் பிரிட்டிஷாருக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தன.

ராஜனின் தகப்பனருக்கு மகனைப் பற்றி அசாத்தியப் பெருமை, அவனிடம் ரொம்ப நம்பிக்கை. அக்ரஹாரம் இரண்டாவது தெருவில் ராஜன் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்ட சில நாட்களுக்கெல்லாம் அவர் ஓசூர் முன்சீப் உத்தியோகத்திலிருந்து தாமாகவே ஓய்வு பெற்று ராஜனுடன் வந்து சேர்ந்து கொண்டார். சக்கரவர்த்தி ஐயங்காரின் பெரிய புதல்வர்கள் இதற்குள் குமாஸ்தா வேலைகளில் சேர்ந்து ஜில்லா நிர்வாகத்தில் உதவி வந்தார்கள். சில சமயங்களில் அவர்கள், உண்மைகளைக் கண்டறியவோ அல்லது வரி வசூலிக்கவோ கோவேறு கழுதைகளில் ஏறிச் சென்றனர்.

முதல் வழக்கு

சேலத்துக்கு வந்து சேர்ந்த சிறிது காலத்தில் ஸி. ஆரின் முதல் கட்சிக்காரரின் வழக்கு எதிர்பாராதவிதமாக திடுதிப்பென்று விசாரணைக்கு வந்து விட்டது. இவ்விஷயம் தெரிய வந்ததும் அவசரம் அவசரமாகக் சைக்கிளில் ஏறி எத்தனை வேகமாக முடியுமோ அத்தனை வேகமாக மிதித்து நீதிமன்றத்தை அடைந்தார். அங்கே ஓர் ஆங்கில நீதிபதி அக்கிராசனம் வகிக்க, அனுபவம் மிக்க ஒரு வக்கீல் எதிர் வழக்காட நிற்பதைக் கண்டார். வழக்காடத் தாம் தயார் செய்து கொள்ளவில்லை என்பதை மறைத்து வாசாலகமாகப் பேசினார் ஸி. ஆர். நீதிபதி உருகி விட்டார்.

அந்த வழக்கை ஸி. ஆர். ஜெயித்தது அவர் பிரபலமடைவதற்கு முதற்படியாக அமைந்தது. பெருங்குற்றம் சாட்டப்பட்டவர்கள் உள்படப் பலர் அவர் வீடு தேடி வந்தார்கள். 1900-மாவது ஆண்டு முடிவதற்குள் ஒரு கொலை வழக்கில்கூட ஆஜராகி விட்டார்.3

நவரத்ன ராமராவும் சென்னையில் சட்டம் படித்திருந்தார் — ராஜனுக்கு ஒரு வகுப்போ அல்லது இரு வகுப்புக்களோ மேலே. ராமராவ் ஹாஸ்டலில் வீணையையும் வயலினையும் பயில முயன்றதை ராஜன் பின்பற்றவில்லை; பொறுத்துக் கொண்டான்.

ஸி. ஆருடைய வரவேற்பைப் பெற்றுத்தான் ராமராவும் சேலத்துக்கு வந்து வக்கீலாகத் தொழில் நடத்த முயன்றிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஸி. ஆருக்கு ஜூனியராக அவருக்குக் கீழ் சில காலம் ராமராவ் பணியாற்றியதாகவும் தெரிகிறது.

ராமராவுக்குத்தான் வக்கீல் தொழில் ஒத்துக் கொள்ளவில்லையோ அல்லது வக்கீல் தொழிலுக்குத்தான் ராமராவைப் பிடிக்கவில்லையோ, எப்படியானாலும் அவர் இரண்டே வருஷங்களில் தமது சொந்த ஊரான மைசூருக்குச் சென்று அங்கே அரசுப் பணியில் சேர்ந்தார். படிப்படியாக முன்னேறி உன்னத நிலையை அடையப் போகிறவர் அவர்.

மங்கா தன் பெற்றோருடன் லக்ஷ்மிபுரத்தில் வாழ்ந்தாள். 1901 இறுதி வரை ஸி. ஆரின் சித்தியும் அவள் கணவரும் அக்ரஹாரத்தில் ஸி. ஆரின் வீட்டைக் கவனித்துக் கொண்டார்கள். சமையல் பாத்திரங்கள் வாங்கிப் போட்டார்கள். வீட்டின் நிர்வாகப் பொறுப்பையேற்ற அந்தத் தம்பதிக்குச் சக்கரவர்த்தி ஐயங்காரின் விதவைச் சகோதரி ஒருத்தி அவ்வப்போது உதவி வந்தாள்.

மங்கா தன் கணவர் வீட்டை அடைந்தபோது அவளுக்குப் பன்னிரண்டு வயது. தனது பதின்மூன்றாவது பிறந்த நாளைக்கு மறுதினம் அவள் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். கிருஷ்ணசுவாமியை அடுத்து இரு ஆண்டுகளுக்குள்ளாகவே இன்னொரு புதல்வன் ராமசுவாமி பிறந்தான். தமது மனைவி அவ்வளவு இளம் வயதில் பிரசவ வேதனைகளை அனுபவிக்க நேர்ந்ததே என்ற எண்ணம் ஸி. ஆரின் மனத்தை அவரது வாழ்நாளெல்லாம் குடைந்து கொண்டிருந்தது.

உன்னுணர்வாக அடைந்த அவரது நீதிமன்றச் சாகசம் அந்தக் குடும்பம், அதுவரை கண்டிராத அளவுக்குச் செல்வத்தையும் கொண்டு வந்து சேர்த்தது. புதிதாக வரும் வழக்குரைஞர்கள் பலர், பெரிய வக்கீல் நேரமில்லாததாலோ, பிடிக்காததாலோ வேண்டாம் என்று விட்டு விட்ட வழக்குகளை ஏற்கக் காத்திருக்க நேர்வது சகஜம். ஆனால் ஸி. ஆருக்கு இந்த நிலை ஏற்படவே இல்லை. எடுத்த எடுப்பிலேயே தாம் பெரிய வக்கீலாக மதிக்கப்படுவதை அவர் உணர்ந்தார்.

இதயம் கவர்ந்த இயக்கம்

சேலம் வழக்கறிஞர்களுள் மட்டுமின்றி, சேலம் நகரப் பெரும் புள்ளிகளிலேயே பிரதானமானவர் அந்நாளில் ஸி. விஜயராகவாச்சாரியார் தாம். 1885-ல் அவர் இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத்துக்குச் சென்று வந்திருந்தார். அந்த அமைப்பை உருவாக்கிய தாதாபாய் நௌரோஜி, ஹியூம், வெட்டர்பர்ன் ஆகியோரின் சகாவாக விளங்கினார்.

ஸி. ஆர். அவருடைய நட்பைப் பெற்றார். தொழில் முறையில் இருவருடைய போட்டா போட்டி அதிகரித்துக் கொண்டே போன போதிலும் இந்நட்பு நீடித்தது. மற்றொரு பிரசித்தி பெற்ற சேலம் வக்கீல் தாந்தோணி ஸ்ரீனிவாச அய்யங்காருக்கும் ஸி. ஆருக்கும் இடையேயும் நல்லெண்ணம் உருவாகியது.

உலக யுத்தத்தின் ஒரு விளைவும் ஓர் இந்திய நிகழ்ச்சியின் முடிவும் ஸி. ஆரின் கவனத்தைக் கவர்ந்தன. 1904-லும் 1905-லும் ஜப்பான்

3. Felton, I meet Rajaji P. 24.

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*







டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனதை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பாள் ...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து. இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

Lederle தயாரிப்பு * அமெரிக்கன் ஸையனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடுமார்க்

Sista's-INC-829 |/77 Tam

ருஷ்யாவைப் பல முனைகளில் தோற்கடித்தது. ஆசியா ஐரோப்பாவை வெல்ல முடியாது என்ற கருத்தும் ஆசியா ஆண்மையற்றது என்ற எண்ணமும் தகர்க்கப்பட்டன. 1905-ல் வைஸ்ராய் கர்ஸான் பிரபு வங்கத்தை நறுக்கி சமூகமும் முஸ்லிம் சமூகமும் பெருவாரியாக அமைந்த இரு பகுதிகளாகப் பிரிக்கப் போவதாக அறிவித்தார். நிர்வாக வசதிதான் காரணம் என்று பிரிட்டிஷார் கூறினார்கள். ஆனால் இரு சமூகத்தினரையும் பிரித்தாளும் சூழ்ச்சியே உள்நோக்கம் என்று இந்தியர்கள் அபிப்பிராயப்பட்டனர். திலகர் போராட்ட மனப்பான்மையுடன் இருந்தார். வங்கத்தில் அரவிந்த கோஷ் போன்ற பலரும் அவ்வாறே போராடத் தயாரானார்கள். பிரிட்டிஷ் தயாரிப்புக்களை பகிஷ்கரிப்பதற்கு ஓர் இயக்கம் ஆரம்பமாயிற்று.

வி. ஆரை இந்த இயக்கம் கவர்ந்தது. அதே நேரத்தில் ஜப்பான், தான் பெற்ற வெற்றியின் மூலம் இந்தியர்கள் உள்பட ஆசிய மக்கள் அனைவருக்கும் தமது கண்டத்தைப் பற்றிய பெருமித உணர்வை ஊட்டியிருப்பதை அவர் கண்டார்.4 இதை அவரே பிற்காலத்தில் நினைவுபடுத்திக் கொண்டு கூறியிருக்கிறார். இச் சம்பவங்களால் ஏற்பட்ட உணர்வுகள் அவரைத் தொலைவில் இருந்த கல்கத்தாவுக்குப் பயணப்படும்படி செய்யுமளவுக்குச் சக்தி வாய்ந்தவையாக இருந்தன. 1906 டிசம்பரில் அங்கு நடந்த காங்கிரஸ், இந்தியா அதுவரை கண்டிராத அளவில் மிகப் பெரிய அரசியல் கூட்டமாக விளங்கியது. வி. ஆர். அரசியலில் புகுவதை உறுதிப்படுத்தியது இந்த கல்கத்தா காங்கிரஸ் தான்.

(தொடரும்)

தமிழாக்கம்: **வி. ராஜேந்திரன்**


4. நூலாசிரியரிடம் உரையாடலின்போது கூறியது.

இங்கிலாந்திலுள்ள தமது நண்பர் வீட்டுக்கு நன்கு படிக்கத் தம் பையனை அனுப்பி வைக்கிறார் ஒரு பிரஞ்சுப் பணக்காரர் - நல்லை ஆசிரியர். நண்பரின் மகனைத் தம்மிடம் (பிரான்சுக்கு) அனுப்பும்படியும் ஏற்பாடு செய்கிறார். இந்தக் கண்டிப்பான அப்பாவின் கட்டுப்பாடுகளுக்கு டிமிக்கி கொடுக்க ஆள் மாறாட்டம் செய்து, தன் நண்பர்களோடு உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காகத் தான் போகவேண்டியதற்குப் பதில் தன் நண்பன் ஒருவனைத் தன் பெயரில் அனுப்பி வைக்கிறான்—அந்தப் பணக்காரப் பையன். இந்த ஆள்மாறாட்டத்தினால் ஏற்படும் குழப்பங்களும், களேபரங்களும் படம் பார்ப்பவர்களை ஒன்றரை மணி நேரம் சிரிக்க வைக்கின்றன. 'மன்ஏஜர்'களின் மனோபாவம், கொட்டம் எல்லாம் இருந்தாலும் வழுக்கைத் தலையும் சப்பை வாயும் குட்டை உடலும் கொண்ட அப்பாவாக வரும்'லூயி டி ஃபீனே' தான் படத்தின் கதாநாயகன். இள வட்டங்களையெல்லாம் ஒரே நாளில் ஒதுக்கிவிட்டு மனிதர் என்னமாய் நடிக்கிறார்!

'எதற்காகச் சிரிக்க வேண்டும், ஏன் சிரிக்க வேண்டும்? சிரிக்கலாமா?' என்று நான் நட்சத்திரங்களையும் காரண காரியங்களையும் யோசித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரால்ய ரசனை கிடையாது என்று அர்த்தம். இந்தப் படத்தில் யோசிக்காமல் சிரித்து மகிழ நிறையச் சம்பவங்கள் இருக்கின்றன.

கண்ணுக்குக் குளிர்ச்சியான வண்ணப்படம். ரம்மியமான காட்சிகள். இது ஒரு பிரெஞ்சு மொழிப் படம். ஆங்கிலத்தில் 'டப்' செய்திருக்கிறார்கள். அது பல இடங்களில் நம்மைப் பழி வாங்குகிறது. பிரெஞ்சா ஆங்கிலமா என்று புரிந்து கொள்ள முடியாமல் குழப்புகிறது. அதை மறக்கும்படி செய்கின்றன கதையில் வரும் சிரிப்புக் காட்சிகள். 'கிராண்ட் வெகேஷன்' (Grand Vacation) நல்லதொரு பொழுதுபோக்குப் படம். — கௌசிகன்





மங்கையிடம் கொஞ்சும்
மனோலயங்கள் ஆயிரம்
மாறும் லயங்களின் மென்மை அனைத்தும் தெளிந்து, பெண்மை கொஞ்சும் ஆடைகள் அநேகம் அவளைத் தழுவிடப் படைக்கிறது ஜாஸ்மின்; நகம் முதல் சிகை வரை அவளைத் தனித்திடும் பெண்மை பளிச்சிடச் செய்கிறது.
அணிவீர் ஜாஸ்மினின் அருமை லேஸ்கள்; பூப் பின்னல் துணிவகைகள்; வண்ண பிரிண்ட்களில் ஜெர்ஸி, டஃபேட்டா, க்ரேப், ப்ரொகேட் என்றிவைகள். வீட்டுக்கு அழகு கூட்டிடச் செய்யும் அலங்காரத் துணி வகையுடன், ஜாஸ்மினின் உள்ளங்கவர் லேஸ் திரைச் சீலைகள்.
Jasmine®
லேஸ்
பெண்மை அணியுட
பெண்மை
Professional Motivators/Jasmine/'21

அத்தியாயம் 11

பழகிய குரல்

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி



குதிரை மேலிருந்து வெள்ளத்தில் பாய்ந்த விக்கிரமன் சற்று நேரம் திக்கு முக்காடிப் போனான். படுவேகமாக உருண்டு புரண்டு அலை எறிந்து வந்த காட்டாற்று வெள்ளம் விக்கிரமனையும் உருட்டிப் புரட்டித் தள்ளியது. உறுதியுடன் பல்லைக் கடித்துக் கொண்டு விக்கிரமன் தன்னுடைய பூரண பலத்துடன் சமாளித்துத் தண்ணீர் மட்டத்துக்கு வந்தான். பின்னர், வெள்ளத்தின் போக்கை அனுசரித்து நீந்தத் தொடங்கினான்.

கொஞ்சம் நிதானித்துச் சுற்று முற்றும் பார்த்தபோது இரு கரையும் ஏறக் குறைய சம தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. எனவே, வந்த வழி திரும்புவதைக் காட்டிலும் அக்கரைக்குப் போய்விடுவதே நல்லது என்று தீர்மானித்துக் கொண்டு எதிர்ப்புறம் நோக்கிச் சென்றான். ஆற்றின் நேர் குறுக்கே அந்த வேகமான வெள்ளத்தில் நீந்துவதென்பது இயலாத காரியமாதலால், அக்கரையில் கொஞ்ச தூரத்தில் கீழ்த் திசையிலே காணப்பட்ட ஓர் அரச மரத்தைக் குறிவைத்துக் கொண்டு நீந்தத் தொடங்கினான்.

சட்டென்று குதிரையின் ஞாபகம் வந்தது. ''ஐயோ! அது வெள்ளத்தில் போயிருக்குமே?'' என்ற எண்ணத்தினால், அவன் திடுக்கிட்டான். திரும்பிப் பார்த்தபோது, வெகு தூரத்தில் தான் ஆற்றில் இறங்கிய இடத்துக்கருகில் குதிரை வெள்ளத்துடன் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

''நல்ல வேளை! குதிரையாவது பிழைத்ததே!'' என்று அவனுக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று. ஏனெனில், தான் தப்பிக் கரையேறலாம் என்ற ஆசை அவனுக்கு வர வரக் குறைந்து வந்தது. அக்கரையை நெருங்க, நெருங்க வெள்ளத்தின் வேகம் அபரிமிதமாயிற்று. யானைகளையும் குன்றுகளையும் கூடப் புரட்டித் தள்ளிவிடக் கூடிய வேகத்துடனும் 'ஓ'வென்ற இரைச்சலுடனும் அந்த வெள்ளம் அலை மோதிக் கொண்டு வந்தது. விக்கிரமனுடைய கைகள் களைப்படையத் தொடங்கின. நீந்திக் கரையேறுவது அசாத்தியம் என்றே விக்கிரமன் முடிவு செய்து விட்டான். ஆகா! விதியின் விசித்திரத்தை என்னவென்று சொல்லுவது! என்னவெல்லாம் பகற்கனவு கண்டோம்! ஆகாசக் கோட்டைகள் கட்டினோம்! எல்லாம் இப்படியா முடிய வேணும்! தந்தை பார்த்திப மகாராஜா கண்ட கனவைப் போலவே தன்னுடைய கனவும் முடிந்து விட்டதே! அவராவது போர்க்களத்தில் வீர மரணம் அடைந்தார். தான் ஆற்று வெள்ளத்தில் அகால மரணமல்லவா அடைய வேண்டியிருக்கிறது! இதற்காகவா இவ்வளவு அவசரமாய்த் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்தோம்? — ஐயோ! அம்மாவைப் பார்க்காமலேயல்லவா போகிறோம்! ஒரு தடவையாவது அவளைப் பார்த்து, ''அம்மா! தகப்பனுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன்; கடல்களுக்கு அப்பால் உள்ள தேசத்தில் சுதந்திர இராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கிறேன்'' என்று சொல்லக் கொடுத்து வைக்கவில்லையே! அவ்விதம் சொன்ன பிறகு இத்தகைய மரணம் சம்பவித்திருந்தால் கூடப் பாதகமில்லை!—ஆகா! திரும்புங் காலையில் மாமல்லபுரத்தில் அந்தத் தாமரைக் கண்ணாளைக் கண்டு பிடித்து, அவள் யாராயிருந்தாலும் சரி



தான், ''என்னுடன் நீயும் தேசப்பிரஷ்டையாகி வரச் சம்மதமா?'' என்று கேட்க எண்ணியிருந்தோமே? அவள் ஒருவேளை நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாளோ! அப்படியானால் எத்தகைய ஏமாற்றம் அடைவாள்!— கம்பீரத் தோற்றமுள்ள அந்த ஒற்றர் தலைவனை மறுபடியும் பார்த்து, அவனிடம் குதிரையை ஒப்புவிக்காமல் அல்லவா போகிறோம்?....

விக்கிரமனுடைய கைகள் அடியோடு களைத்து விட்டன. அவனுடைய உடம்பு இரும்பினால் ஆனது போல் கனத்தது! முடியாது. இனி ஒரு கணமும் முடியாது .... அதோ வெள்ளத்தில் உருண்டு புரண்டு கறுப்பாய் வருகிறதே, அது என்ன? பெரிய மரம் ஒன்றை வெள்ளம் அடித்துக் கொண்டு வருகிறது. நல்ல வேளை! அதைப் பிடித்துக் கொள்ளலாம்... ஐயோ! மரம் அதோ போய்விட்டதே! இனிமேல் நம்பிக்கைக்குச் சற்றும் இடமில்லை. விக்கிரமனுடைய கண்கள் இருண்டன; மதி மயங்கிற்று. 'அந்தச் சமயத்தில் அவனுக்குத் திடீரென்று படகோட்டி பொன்னனுடைய நினைவு வந்தது. இளம் பிராயத்தில் காவேரியில் நீந்தக் கற்றுக் கொள்ளும்போது, சில சமயம் இம்மாதிரிக் களைப்படைந்து முழுகும் தறுவாய்க்கு வந்து விடுவதுண்டு. அப்போதெல்லாம் பொன்னன் அவனைத் தூக்கி எடுத்துக் காப்பாற்றியிருக்கிறான். அம்மாதிரி இச்சமயமும் பொன்னன் வரமாட்டானா?...இது என்ன பைத்தியக்கார எண்ணம்?... அதோ கரையில் ஒரு மனித உருவம் தெரிகிறது. அது யார்? ஒருவேளை பொன்னன்தானோ?... இது என்ன வீண் பிரமை?...''அம்மா!.. அம்மா!'' ... விக்கிரமனை ஒரு பெரிய அலை மோதிற்று. அவன் நீரில் அமிழ்ந்து நினைவிழந்தான்.

■ ■ ■

விக்கிரமனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரக்ஞை வந்து கொண்டிருந்தது. எங்கேயோ வெகு தூரத்திலிருந்து — பாதாள உலகத்திலிருந்து வருவது போல், — ''மகாராஜா!'' என்ற மெல்லிய குரல் கேட்டது. இது யாருடைய குரல்! கேட்டுப் பழகிய குரல் மாதிரி இருக்கிறதே! — ஆம், படகோட்டி பொன்னனுடைய குரல் தான் — இது உண்மையாக நடப்பது தானா! கனவில்லையா? பிரமையில்லையா? கடைசியாகக் காட்டாற்று வெள்ளத்தில் நான் இறங்கியதும், நீந்திக் கை களைத்து நீரில் மூழ்கியதும் விக்கிரமனுக்கு நினைவு வந்தன. — ஒருவேளை இது மரணத்துக்குப் பிறகு மறு உலகத்தில் கேட்கும் குரலோ? — இது வரையில் விக்கிரமனுடைய கண்கள் மூடியிருந்தன. இப்போது ஒரு பெரும் பிரயத்தனம் செய்து பார்த்தான். ஆம்; படகோட்டி பொன்னனுடைய முகம் தான் அது! மழையில் நனைந்து, வெள்ளத்தில் மூழ்கி எழுந்திருந்த பொன்னனுடைய தேகம் முழுவதும் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. போதாதற்கு அவனுடைய கண்களிலிருந்தும் நீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது.

''பொன்னா! நீதானா? இதெல்லாம் நிஜமா? அல்லது கனவா?'' என்றான் விக்கிரமன்.

''மகாராஜா! நானும் அதையே தான் கேட்க இருந்தேன். நிஜமாக நீங்கள்தானா? அல்லது இது கனவா? பிரமையா? நிஜமாக விக்கிரம மகாராஜாவையா நான் வெள்ளத்திலிருந்து கரை யேற்றினேன்?... உயிர் பிழைத்துக் கண் விழித்து என்னுடன் பேசுவது நீங்கள்தானா — ஒன்றுமே நம்ப முடியவில்லையே! — ஆகா! வள்ளி மட்டும் இச்சமயம் இங்கே இருந்தாளானால்?''

ஆற்றங்கரை அரச மரத்தடியில் ஒரு பெரிய வேரின் மேல் பொன்னன் உட்கார்ந்திருந்தான். அவனுடைய மடியின் மீது விக்கிரமனுடைய தலை இருந்தது. மழை நின்று சிறு தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது. குளிர்ந்த வாடை வீசிற்று. இரவு சமீபித்துக் கொண்டிருந்தபடியால் நாலாபுறமும் இருள் அடர்ந்து வந்தது.

விக்கிரமன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்

''பொன்னா! நான்தான்; விக்கிரமன்தான். ஓர் அதிசயத்தைக் கேள். வெள்ளத்தில் முழுகும்போது நான் என்ன நினைத்துக் கொண்டேன் தெரியுமா? கடைசியாக, உன்னைத்தான் நினைத்துக் கொண்டேன். காவேரி நதியில் நான் நீந்தக் கற்றுக் கொண்ட

போது, என் கை சளைத்துத் தண்ணீரில் முழுகப் போகும் தருணத்தில் எத்தனை தடவை நீ என்னை எடுத்துப் படகில் ஏற்றி விட்டிருக்கிறாய்? அது எனக்கு நினைவு வந்தது. இந்தச் சமயத்திலும் நீ வரக்கூடாதா என்று நினைத்தேன். கரையிலே ஒரு மனித உருவத்தைப் பார்த்தேன். ஒருவேளை நீதானோ என்றும் எண்ணினேன். இருக்காது—இது பிரமை என்று எண்ணிக் கொண்டே தண்ணீரில் மூழ்கினேன். நிஜமாக நீயாகவே இருந்து விட்டாயே! – என்ன அற்புதம்? – அவ்வளவு சரியான சமயத்தில் நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?'' என்றான்

''எனக்கும் அப்படித்தான் ஆச்சரியமாயிருக்கிறது, மகாராஜா! அதோ பாருங்கள், அந்த மண்டபத்தை!'' என்று பொன்னன் சுட்டிக் காட்டினான். சற்றுத் தூரத்தில் ஒரு சிறு மண்டபம் காணப்பட்டது.

''பெரு மழை பிடித்துக் கொண்ட போது, நான் அந்த மண்டபத்தில் ஒதுங்கியிருந்தேன். ஆற்றில் வெள்ளம் பிரமாதமாய்ப் பெருகும் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அப்போது அக்கரையில் குதிரைமேல் யாரோ வருவது தெரிந்தது. ஆற்றில் இப்போது இறங்கினால் ஆபத்து ஆயிற்றே என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும் போதே நீங்கள் மளமளவென்று இறங்கி விட்டீர்கள். ஆனால் அப்போது நீங்கள் என்று எனக்குத் தெரியாது. குதிரை மேலிருந்து வெள்ளத்தில் குதிப்பதையும், நீந்தி இக்கரைக்கு வர முயற்சி செய்வதையும் பார்த்து இவ்விடத்துக்கு வந்தேன். நீங்கள் கை சளைத்து முழுகுவதைப் பார்த்து விட்டுத் தண்ணீரில் குதித்தேன். மகாராஜா! அந்தச் சமயம்—சொல்ல வெட்கமாயிருக்கிறது – இந்தப் பெரும் வெள்ளத்தில் நாமும் போய் விட்டால் என்ன செய்கிறது? என்று கொஞ்சம் யோசனை உண்டாயிற்று. நல்ல வேளையாக அந்த



யோசனையை உதறித் தள்ளி விட்டுக் குதித்தேன். அப்படிக் குதிக்காமல் இருந்திருந்தால் ஐயோ!'' என்று பொன்னன் கண்களை மூடிக் கொண்டான். அவன் உடல் வெட வெட வென்று நடுங்கிற்று.

''பொன்னு! அதை ஏன் இப்போது நினைக்கிறாய்? நமது குலதெய்வமான முருகக் கடவுள்தான் அந்தச் சமயத்தில் உனக்கு அவ்வளவு துணிச்சலைக் கொடுத்தார்... இல்லை, இல்லை! காலஞ்சென்ற பார்த்திப மகாராஜாதான் தோன்றாத் துணையா யிருந்து ஆபத்து வரும் சமயங்களி லெல்லாம் என்னைக் காப்பாற்றி வருகிறார்!... இருக்கட்டும், பொன்னு! என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறேனே? — மகாராணி சௌக்கியமா?'' என்று ஆவலுடன் கேட்டான் விக்கிரமன்.

மகாராணி என்றதும், பொன்னன் திடீரென்று கண்களைக் கைகளால் பொத்திக் கொண்டு விம்மத் தொடங்கினான். இதைப் பார்த்ததும் விக்கிரமனுக்கு ஏற்பட்ட நெஞ்சத் துடிப்பை விவரிப்பது இயலாத காரியம்.

''ஐயோ! பொன்னு! என்ன விபத்து நேர்ந்து விட்டது? மகாராணி இறந்து விட்டாரா?'' என்று பதை பதைப்புடன் கேட்டான்.

அப்போது பொன்னன், ''இல்லை, மகாராஜா இல்லை. மகாராணி எங்கேயோ உயிரோடுதான் இருக்கிறார். ஆனால், எங்கே என்றுதான் தெரியவில்லை....'' என்றான்.

விக்கிரமனுக்குக் கொஞ்சம் உயிர் வந்தது.

''அதெப்படி பொன்னு! உன்னிடந்தானே நான் மகாராணியை ஒப்புவித்து விட்டுப் போனேன்? நீ எப்படி அஜாக்கிரதையா யிருந்தாய்?....''

''மகாராஜா! எல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டும். மறுபடியும் மழை வலுக்கும் போலிருக்கிறது. ஏற்கெனவே தாங்கள் நனைந்திருக்கிறீர்கள். குளிர் காற்றும் அடிக்கிறது! அதோ அந்த மண்டபத்துக்குப் போகலாம், வாருங்கள். எவ்வளவோ சொல்ல வேண்டும். எவ்வளவோ கேட்க வேண்டும். இரவும் நெருங்கி விட்டது.''

இருவரும் எழுந்திருந்து மண்டபத்தை நோக்கிப் போனார்கள்.


(தொடரும்)



பகவான் ஸத்யஸாயிபாபாவின் சரிதமான 'ஸ்வாமி' நூலைப் பாரதீய வித்யாபவன் மண்டபத்தில் மார்ச் 5ந் தேதி சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி திரு எஸ். சூரியமூர்த்தி வெளியிட்டார். பல அறிஞர்களும் நூலாசிரியர் திரு ரா. கணபதி அவர்களின் எழுத்தாற்றலையும் நூலின் சிறப்பையும் வாழ்த்திப் பாராட்டினர். பூம்புகார் பிரசுரம் 1008 பக்கங்களில் படங்களோடு இந்த அரிய நூலைத் தந்துள்ளது. விலை ரூ. 49.


விலாசம்: பூம்புகார் பிரசுரம் மன்னார்சாமி கோயில் தெரு சென்னை - 13.

பம்பாய் கலினா கல்விக் கழகத்தின் வருஷாந்திர விழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கலாக்ஷேத்ரா ருக்மிணிதேவி அவர்களும், மத்திய சர்க்கார் சட்டமந்திரி கோகலேயும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பள்ளி மாணவிகளின் பரத நாட்டியம், தசாவதாரம் ஆகியவை மெச்சும்படி அமைந்திருந்தன.




பப்பு :பீடரின் குணச்சிறப்பைக் கண்டறிய தேவை— அன்னையின் கண்ணோட்டம்

* தனிப்பட்ட அமைப்பு தாய்ப்பால் குடிப்பதைப் போன்ற மகிழ்ச்சி குழந்தைக்குக் கிடைப்பதுடன், வயிற்றில் காற்றும் குறைவாக புகுகிறது.
* சரளமாக பால் பாய்ந்து வருகிறது. எனவே குழந்தை எளிதாக பால் குடிக்கிறது.
* புத்தம்புதிய ரப்பரால் ஆனது. எனவே அடிக்கடி கொதிக்க வைத்தாலும், சீக்கிரம் தொய்ந்து போகாது. துர்நாற்றம் வீசாது.
* ஒவ்வொரு நிப்பிளிலும் பப்பு முத்திரை— தரத்துக்கு உத்தரவாதம்.
* இரண்டு திணுசுகள்— ஊடுருவி பார்க்கக் கூடியது மற்றும் வார்த்தெடுக்கப்பட்டது.



துடிப்பான குழந்தைப் பருவத்தின் இனிய துணை



பப்பு

:பீடர் மற்றும் நிப்பிள்

U-P-7 TAM



பொதுவாகத் தேர்தல்களுக்கு மக்களைக் கவரும் சக்தி அதிகமாக உண்டு. கேரளாவில் கோழிக்கோடு - பாலையம் சந்திப்பில் ஒரே கம்பத்தில் 160 கொடிகளைக் கட்டியிருக்கிறார்கள். அது 140 சட்டசபைத் தொகுதிகளையும், 20 பாராளுமன்றத் தொகுதிகளையும் குறிப்பதாகும். தேர்தலைக் கண்டு சுவர்களும், விளக்குக் கம்பங்களும், ரஸ்தாக்களும் நடுங்கத்தான் செய்கின்றன. அசந்தால் மனிதர்களின் முதுகுகளில் கூட விளம்பரம் செய்துவிடுவார்கள்.

'பாகிஸ்தான் அதிபர் பூட்டோ எதிர்ப்பு எதுவும் இன்றி வெற்றி பெற்றார்' என்ற செய்தி வந்தது. அந்தச் செய்தியைத் தொடர்ந்து, அவரை எதிர்த்து வேட்பு மனுத் தாக்கல் செய்ய வந்தவர்களை மனு தர முடியாத வகையில் வெளியே தடுத்து நிறுத்தி விட்டார்கள் என்ற செய்தியும் வந்தது.

நம் நாட்டில் சில தொகுதிகளில் சற்றுத் தொலைவில் உள்ள கிராம மக்கள் தேர்தல் சாவடிக்குச் செல்லத் தொடங்கும்போது, காலிகளை விட்டு ஊரில் கலகம் ஏற்படுத்தி, கூரைகளில், வைக்கோல் போர்களில் தீயிட்டு ஓர் அமைதியற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை வாக்களிக்கச் செல்ல முடியாமல் ஆக்கி விடுவார்கள். ஒரு பெரிய செல்வந்தருக்கும் ஒரு காங்கிரஸ் தியாகிக்கும் பலமான தேர்தல் போட்டி ஏற்பட்டது. செல்வந்தர் தமது அந்தஸ்தை எந்த வகையிலும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாய நிலையில் எந்த வழியையும் கையாளத் தயாரானார். வாக்காளர்களைச் சரிக்கட்டி, லஞ்சம் தந்து, பணத்தை வாரி இறைத்தார். அதன் பின்னும் அவருக்கொரு சந்தேகம். பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தமக்கு ஓட்டுப் போடாமல் சதி செய்து விடுவார்களோ என்று. பணம் வாங்கியும் ஓட்டுப் போட மாட்டார்கள் என்று தோன்றிய சந்தேகத்துக்குரியவர்களை வாக்களிப்புக்கு முன்னால் இரவோடு இரவாகக் கார்களில் சற்றுத் தொலைவிலுள்ள ஊர்களுக்கு அழைத்துச் சென்று சௌகரியமான இடங்களில் தங்க வைத்தார்கள். அவர்களுக்கு உணவு மற்றும் வசதிகளையும் நல்ல முறையில் ஏற்பாடு செய்து, ''முற்பகல் நகரத்தில் உள்ள வாக்காளர்களை யெல்லாம் வாக்களிக்கச் செய்த பின் பிற்பகல் உங்களை அழைத்துப் போக வண்டி வரும். சாப்பிட்டு விட்டுத் தயாராக இருங்கள். வண்டி வந்ததும் சற்றும் தாமதிக்காமல் உடனே புறப்பட்டுவிடவேண்டும்'' என்று சொல்லிச் சென்றவர்கள் சென்றவர்களே. அன்றைய தினம் அவர்கள் வோட்டளிக்க



முடியவில்லை. காருக்குக் காத்திருந்து மாலைப் பொழுது கழிந்ததும், அவர்கள் நொந்து, கசந்து நடந்தும், பஸ்களிலுமாக ஊர் வந்து சேர்ந்தார்கள்.

தேர்தல்களில் சவால்கள், எதிர் சவால்கள், கலகங்கள் இதெல்லாம் அன்னாளிலும் ஏற்பட்டது உண்டு. சர் சி. பி. ராமசாமி அய்யர் ஒரு தேர்தலில் போட்டியிட்டுப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது நான் எந்த நிலவரத்துக்கும் தயாராக வந்திருக்கிறேன். மக்கள் பரபரப்படையத் தேவையில்லை என்று சொல்லித் தமது சட்டைப் பையிலிருந்த ரிவால்வரை எடுத்து மேஜை மீது வைத்துச் சொற்பொழிவு ஆற்றினாராம். அதைப்போல் நீதிக் கட்சியின் பெருந் தலைவராக இருந்த சர் தியாகராஜ செட்டியார் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசும்போது பொதுக்கூட்டத்தில் நடுவிலிருந்து ஒருவன் அடிக்கடி எதிர் மறித்துப் பேசுவதும் கூச்சலிடுவதுமாகத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான்.

செட்டியாருக்குக் கோபம் வந்து கைச் சட்டைகளை மடக்கிக் கொண்டு மேடையை விட்டு இறங்கிக் கூட்டத்தின் நடுவே இருந்த அவனைத் தரதரவென்று சட்டையோடு பிடித்திழுத்து அடிக்கப் போய்விட்டாராம். அவன் நடுங்கிப் போய் மன்னிப்புக் கேட்டானும். ஆகவே பெரியவர்கள் துணிவுள்ளவர்களாகவும் பொது வாழ்க்கையில் இருந்தே ஆக வேண்டியிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளை ஒரு முறை தமிழ்ப் பேராசிரியர் திரு வி. க. சொல்லக் கேட்டேன்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை, ராஜ்நாராயணன் எதிர்ப்பது போல் அவரது தந்தை நேருஜியை சோஷலிஸ்ட் தலைவர் ராம் மனோகர் லோகியா எதிர்த்து வந்தார். இவர்கள் ஒரு தடவை கூட வெற்றி யடைந்ததில்லை. இதைப் பற்றி லோகியாவிடம் கேட்ட போது சாதாரணமான ஒருவரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி யடைவதை விட இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவிடம் தோற்பதையே நான் பெருமையாகக் கொள்கிறேன் என்றார்.

வேட்பு மனுவைத் தாக்கல் செய்துவிட்டு அந்தத் தொகுதிக்குச் செல்லாமலே, தொடர்ந்து வெற்றி பெறக் கூடியவர்கள் நம் நாட்டில் நிறையவுண்டு. அந்த வகையில் நேருஜியும் ஒருவர். அதைப் போல் மல்ல, தமது 'எம். எல். ஏ. பதவியையும் விட்டு வந்திருக்கிறார்.

தேர்தலில் போட்டி யிட்டால் யாராவது ஒருவர் மட்டும் வெற்றியடைவதையும் மற்றவர்கள் தோல்வி யடைய நேர்வதையும் தவிர்க்க முடியாது. ஆனால் மகத்தான தோல்வி மாபெரும் வெற்றி என்று கூறக் கூடியவை சில உண்டு. அந்த வகையில் ஒன்றுதான் தமது சொந்த ஊரான விருதுநகர்த் தொகுதியில் அகில இந்தியத் தலைவராக இருந்த காமராஜர் கல்லூரி மாணவரிடம் தோல்வி அடைந்தது. அதே போன்ற இன்னும் ஒன்றுதான் தமது சொந்த ஊரான காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணாவும் ஒரு பஸ் முதலாளியிடம் தோல்வி அடைந்தது. 1952ல் முன்னாள் முதல்வர் பக்தவத்சலமும் தமது சொந்த ஊரான பொன்னேரிப் பகுதி மீஞ்சூரில் ஒரு சாமான்ய சுயேச்சையிடம் தோல்வி அடைந்தார்.

கலைஞர் கருணாநிதி தேர்தல் விஷயங்களில் கெட்டிக்காரர். எப்பொழுதுமே இவர் தமது சொந்த ஊரில் தேர்தலில் நிற்பதில்லை. தேர்தல் தோறும் தொகுதிகளையும் மாற்றிக் கொண்டே வருவார். இவர் முதன் முதலில் சென்னை சட்டசபைக்கு 1957ல் நின்றது



தென்னிந்தியாவில் ராமநாதபுர மாவட்டத்தில், முத்துராமலிங்கத் தேவரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நேசமணியும், கேரளத்தில் நம்பூதிரிபாடும் தனிப் பெரும் தன்மை கொண்டவர்களாக விளங்கினார்கள்.

கட்சி மாறுவோரில் நேர்மையானவர்களும் இல்லாமல் இல்லை. தி. மு. க. ஆட்சியின் போது நடந்த விவசாயிகள் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்ட கோவை கிருஷ்ணசாமி கவுண்டர் என்பவர் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகினார். அந்தக் கட்சி மூலம் பெற்ற எம். எல். ஏ. பதவியையும் ராஜினாமாச் செய்து விட்டார். ஆந்திராவில் மூர்த்திராஜு என்பவர் ஜனதா கட்சிக்கு வரும்போது காங்கிரஸை மட்டு

திருச்சி குளித்தலைத் தொகுதியில். பார்ப்பனர் வோட்டுக்கள் பரவலாக நிறைந்து மிராசுதார்களின் செல்வாக்கும் அங்கே ஓங்கியிருந்தது. இவர் தி. மு. க. என்பதால் ஆஸ்திகர்களின் வோட்டு கிடைக்காது என்று அஞ்சி ஒரு வழி செய்தார். ''கருணாநிதி பார்ப்பன அடிமை'' என்றும் ''ஆஸ்திகர்களுக்குத் துணை போகிறவர்'' என்றும் பல வகையில் குறிப்பிட்டு ஒரு துண்டுப் பிரசுரம் தொகுதி முழுவதும் பரப்பப்பட்டது. அந்தப் பிரசுரத்தை வெளியிட்டது திராவிட கழகம் என்று இருந்தது. திராவிட கழகத்தினர் இப்படி ஒரு நோட்டீசைப் பார்த்து வியந்தனர். கலைஞர் ஆத்திகர்களிடம் ஆதரவு பெறுவதற்காகக் கையாண்ட தந்திரமிது என்று பின்னால் வெட்டவெளிச்சமாயிற்று.

காட்சி நம்பர் 3



விமல் மித்ர

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

4. இதென்ன புதிர் ?

பெண்மணியின் அந்த வியப்புக் கேள்வியில், அப்படி ஒருவர் இருக்க முடியாது என்பது போல் பொருள் தொனித்தது.

''நம் ஐயாவைத்தான் சொல்றேன், அம்மா!'' கமலாவின் பதிலில் புதிர் இன்னும் இறுகியது.

''ஐயா எப்பொழுது வந்தார்கள்? நீ எப்பொழுது போனாய்?'' என்று கேட்டாள் பெண்மணி.

''இப்பத்தான் கொஞ்ச நேரம் முன்னாடி வந்தாங்க. ஐயா வந்தப்புறம்தான் அம்மா நான் இங்கே விட்டுப் போனேன்!'' என்றாள் கமலா.

•அதைக் கேட்டதும் பெண்மணியின் முகம் அறுந்து தொங்கி விட்டது.

''ஐயா எங்கே இருக்கிறார்கள்? கண்ணிலேயே காணோமே!'' என்று கூறி உள் அறைப் பக்கம் போக அடி எடுத்து வைத்தாள். அதற்கு முன்னாலேயே அறைக்குள்ளிருந்து ஒருவர் தள்ளாடித் தடுமாறியவாறு வெளி அறைக்கு வந்தார். அவரைக் கண்டதும் பெண்மணி சிறிது துணுக்குற்றாள். பிறகு சமாளித்துக் கொண்டாலும் திக்கினாற் போல, ''நீ.... நீங்.... நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

அவருடைய கண்கள் இலந்தைப் பழமாகச் சிவந்திருந்தன. சிவந்த கண்களால் அவர் என்னைப் பார்த்த பார்வை பொசுக்கி விடுகிறாற் போலிருந்தது. என்னைச் சந்தேகப்படுகிறாற் போல் அவர் பார்த்த அந்தப் பார்வையை என்னால் சந்திக்க முடியவில்லை. அங்கிருந்து போய் விட வேண்டும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர், ''நீங்கள் யார்? சரயுவுக்குத் தெரிந்தவர்களா?'' என்று என்னைக் கேட்டார்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை.

பெண்மணி — பெயர்தான் இப்பொழுது தெரிந்து விட்டதே — சரயு அவரை நோக்கி, ''நீங்கள் எதற்காக இந்த அறைக்கு வந்தீர்கள்? போங்கள் அந்த அறைக்கு!'' என்று கூறி இடைமறித்தாள்.

அவர் வீம்பாக அங்கேயே நின்றார். ''ஏன்? அந்த அறைக்கு நான் எதற்காகப் போகணும்? இந்த அறையில்தான் இருப்பேன். நான் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறேன்!'' என்றார்.

''இல்லை, நீங்கள் சரியாக இல்லை. நீங்கள் திரும்பவும் இன்று குடித்து விட்டு வந்திருக்கிறீர்கள்! போங்கள், அந்த அறைக்குப்போய் விடுங்கள்!'' என்றாள் சரயு, அவர் கையைப் பிடித்து.

அவர் சரயுவின் கைகளை ஓர் உதறல் உதறிவிட்டு, ''ஏன்? உனக்கு வெட்கமாயிருக்கிறதா? நான் சாராயம் குடிக்கிறேனே, ஜனங்கள் என்னை வெறுக்கிறார்களே என்று? நான் செய்கிறது சரியாகத்தான் செய்கிறேன். நான் குடிக்கிறேன். இதை ஒளிக்கவில்லை; மறைக்கவில்லை. அதற்காக நான் எவனுடைய அப்பன் வீட்டுச் சொத்தையும் வழிப்பறி செய்யவில்லையே!'' என்றார்.

சூழ்நிலை படுமோசமாகிக் கொண்டிருந்தது. என்னையோ வெட்கம் பிடுங்கித் தின்றது. சரயுவும் கூடத்தான் கூசிக் குறுகிப் போனாள். ''என்ன உளறுகிறீர்கள்? குடிக்கிற குடியிலே மூளையும் தறி கெட்டுப் போய் விட்டதா, என்ன?'' என்று அதட்டினாள்.

அவள் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவர் — அவர் என்ன வேண்டிக் கிடக்கிறது? — **அவன்** என்னைச் சாட்சியாக்கினான். ''பார்த்தீர்களா? பெரிய பதிவிரதையாட்டம் பேசுகிறாள் சரயு? பார்த்துக் கொள்ளுங்கள், நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். ஐயா, சுவாமி! நான் தினமும் சாராயம் குடிக்கிறது தான். ஆனால் என்றைக்கும் இவள் இது மாதிரி பேசியதில்லை. இன்றைக்கு நீங்கள் கூட வந்திருக்கிறீர்கள்? அதனாலே இவளை வெட்கம் பிடுங்கித் தின்கிறது; பேசுகிறாள்!'' என்று கூறிப் பெரிதாகக் கடகடவென்று சிரிக்கலானான்.

''என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? உங்களுக்கு வெட்கம் மானம் துளிக் கூடக் கிடையாதா? இன்றைக்கு முதல் முறையாக இவர் நம் வீட்டுக்கு வந்திருக்கிறார். அவருக்கெதிர்த்தாற் போல் என்னை இப்படி அவமானப்படுத்துகிறீர்களே, உங்களுக்கே நன்றாயிருக்கிறதா? இவர் என்ன நினைப்பார்?'' என்றாள் சரயு. அவள் அவனது நாவாக் கட்டையைப் பிடிக்காத குறைதான்.

''அது கிடக்கட்டும். இவரை எங்கேயிருந்து பிடித்துக் கொண்டு வந்தாய்? முதலில்

அதைச் சொல்லு! இவர் உனக்கு என்ன வேண்டும்?'' தடிப்பாகக் கேட்டான் அவன்.

''இவர் எனக்கு என்ன வேண்டும்? இந்தத் தெருவிலே இருக்கிறார். அவ்வளவு தான்!'' என்றாள் சரயு.

''ஓகோ! ஒரு தெருவிலே இருக்கிறதனாலே, யாரை வேண்டுமானாலும் வீட்டுக்கு அழைத்து வந்து அவனுக்கு விருந்து வைத்து உபசாரம் செய்ய வேண்டுமோ? இவரைப் புதிசாய்ப் பிடித்திருக்கிறேன் என்று சொல்லி விட்டுப் போயேன்!''

நான் வெகு நேரமாகப் பொறுத்துக் கொண்டிருந்தேன். இனியும் இந்த இரண்டு பேருக்கும் இடையில் ஒரு கணம் இருந்தாலும் நாம் 'சிப்பட்டு'ச் சிரழிய வேண்டியதுதான் என்று தோன்றியது. ஆனாலும் ஒரு விஷயம் மட்டும் எனக்கு விளங்கவில்லை. 'இந்தஇரண்டு பேருக்கும் இடையில் என்ன உறவு இருக்கும்? உறவு எது வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டுமே! அதனாலே நமக்கு என்ன?' அதைப் பற்றியெல்லாம் அதிகம் சிந்திக்காமல் எழுந்து நின்றேன். ''நான் வருகிறேன்!'' என்று கூறி விடையும் பெற்றேன். அதைக் கேட்டதும் அவன் பிரமித்துப் போய் என்னிடம் ஓடி வந்தான். என் இரு கைகளையும் இறுகப் பற்றிக் கொண்டு, ''ஸார், நீங்கள் எதற்காகப் போகிறது? நன்றாயிருக்கிறதே! உங்களைச் சரயு ஓர் ஆளாக மதித்து வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறாள். நீங்கள் இருங்கள். நான் வருகிறேன். நான் கலைக்கு உதவாத ஆள் ஐயா!'' என்றான். பிறகு விடு விடு என்று வாசற்புறம் சென்றான். சென்றவன் சட்டென்று திரும்பி, ''என் கோட்டு இங்கேயே விடுபட்டுப் போய் விட்டது. எடுத்துக் கொண்டு போகிறேன்!'' என்றான். கோட்டை எடுத்துப் போக அவன் உள்ளே வருவதற்குள்ளாகவே, சரயு கோட்டை எடுத்து வந்து அவன் முன் விட்டெறிந்தாள்.

கோட்டு அவன் முகத்தில் போய் விழுந்தது.

அவன் எவ்வித உணர்ச்சியையும் கொட்டாமல் கோட்டை மாட்டிக் கொண்டான். பிறகு என்னைப் பார்த்து, ''பார்த்தீர்கள் அல்லவா, இந்தப் பெண்ணின் போக்கிரித்தனத்தை! ஒருநாள் என்னையும் உங்களைப் போலவே மதித்து மரியாதை காட்டி, திசை திருப்பி இப்படித்தான் தன் வீட்டுக்கு அழைத்து வந்தாள். உங்களுக்குக் கிடைத்திருக்கிற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. கண்ணாலே கண்டு காதாலே கேட்கக் கூடிய வாய்ப்பைத்தான் சொல்லுகிறேன். இன்றைக்கு இவள் என்னை வீட்டை விட்டு வெளியேற்றுகிறாள். உங்களை வீட்டுக்குள்ளே அழைத்து வந்திருக்கிறாள். நான் சொல்கிறதைச் சொல்லி விடுகிறேன், சார்! எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள், முன்னெச்சரிக்கையாக இருங்கள்!'' என்றான்.

நான் அவனுக்கு எதிர் விடை அளித்து வாயடைக்க விரும்பினேன். ஆனால் சரயு தடுத்து விட்டாள். ''அவர் பேச்சை நீங்கள் காதிலேயே வாங்கிக் கொள்ளாதீர்கள். அவர் ஒரு மிருகம்; மரியாதை கொடுத்து மரியாதை வாங்கத் தெரியாத பிண்டம். அவருக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான். எங்கேயாவது நரகத்திலே போய்ச் சீரழியட்டும்!'' என்றாள்.

அவன் போய் விட்டான்.


சரயு பேசாமல் நின்ற இடத்திலேயே சிறிது நேரம் நின்றாள். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சை உதிர்த்தாள்.

இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு ''நான் வருகிறேன். நான் வந்ததனால் விரும்பத் தகாத நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது. எனக்கு இது முன்பே தெரிந்திருக்குமானால், மெய்யாக நான் இங்கே வந்தே இருக்க மாட்டேன்!'' என்றேன்.

''போகலாம், இருங்கள். இந்த நேரத்தில் நீங்கள் புறப்பட்டுப் போனால், என் மேல் நீங்கள் கோபித்துக் கொண்டு போவதாகத் தான் எண்ணுவேன்!'' என்று சரயு என்னைத் தடுத்தாள்.

''அப்படியெல்லாம் இல்லை. என்னைத் தவறாகக் கருதாதீர்கள். பார்க்கப் போனால், நான் ஏதும் முக்கியமான காரியத்தை உத்தேசித்து வரவில்லை. நீங்கள் சொன்னீர்களே என்பதற்காக வந்தேன். வந்தாயிற்று, பார்த்தாயிற்று! நான் வருகிறேன்!'' என்று கூறி அவள் அனுமதியை எதிர்பாராமலேயே நான் அங்கிருந்து புறப்பட்டு விட்டேன்.

இந்தச் சம்பவம் இங்கேயே முடிந்திருக்கலாம்தான். வாழ்க்கையில் இது போல்



எத்தனை எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றின் ஆரம்பம் அனைவருக்கும் தெரிகிறது. ஆனால் முடிவு தெரியாமலே போய்விடுகிறது. இத்தனை பெரிய உலகத்திலே எவன் எப்பொழுது வருகிறான், எவன் எப்பொழுது போகிறான் என்று யார் கணக்கு வைத்துக் கொள்வார்கள்? ஆனால் சில சம்பவங்கள் ரயில் வண்டித் தொடரைப் போல் கோவையாக நிகழ்கின்றன. பரந்திருக்கும் தண்டவாளத்தில் அலுங்காமல் நலுங்காமல் ஓடிப் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்த பின்பே முடிகின்றன.

சரயுவை ஒட்டிய சம்பவமும் ஏறக்குறைய இத்தகையதுதான்.


எனது அலுவல் களன் இருக்கிறதே, இதில் மக்கள் கூட்டம் மிகுதி. ஏனெனில் என் தொழிலுக்கு முக்கியமான பொருள் மனித வாழ்வு; அவனது மன இயல்பு. இதை முதலீடாகக் கொண்டுதானே என் வண்டி ஓடுகிறது! நான் என் வேலையில் மூழ்கிவிட்டால், மூழ்கியபடியே இருக்க வேண்டும் எழுதிய வண்ணமே இருக்க வேண்டும் என்று என் மனம் விழையும். எழுத்து நல்லபடி முடியாதவரையில் மனத்துக்கு நிம்மதி ஏற்படுவதே யில்லை. அப்பொழுது ஏறக்குறைய என்ன, முழுக்க முழுக்க என் மனநிலை அப்படித்தான் இருந்தது.

எழுத்தைப் பிழைப்பாகக் கொள்வதில் ஒரு சௌகரியம் இருக்கிறது என்றாலும் பொறுப்புணர்ச்சிக்கும் ஒரு குறைவு இல்லை. எண்ணிக்கையோடு எழுத்தின் தரத்தையும் கருத்தில் கொண்டு, இரண்டையும் ஈடுகட்டும் சிரம சாத்தியமான காரியத்தில் எழுத்தாளன் இரவு-பகல் பாராது முழு மூச்சோடு உழன்றாக வேண்டும். அப்பொழுதுதான் அவன் வாழ்க்கைச் சகடம் ஓடும்.

நான் அப்படி உழன்று கொண்டிருந்த நேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். என் வேலைக்காரன் ஏதோ அலுவலாக வெளியில் போயிருந்தான். அதனால் நானே, ''யார் அது?'' என்று உரக்கக் குரல் கொடுத்தேன்.



ஸ்ரீ கருணாகரேசுவரர் திருப்பணி



பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் ஒன்றான திருவாரூர் வரலாற்றுப் பெருமை கொண்ட பல கோவில்களை உடையது. ஞானாம்பிகையுடன் அருளாட்சி புரியும் கருணாகரேசுவரர் கோவில் அநபாயச் சோழன் காலத்தில் கருணாகரத் தொண்டைமானால் கட்டப் பட்டதாகும். தற்போது இது மிகவும் சிதிலமாகிக் கிடக்கிறது. இதைப் புதுப்பித்துத் திருப்பணி செய்யவும் குடமுழுக்கு ஆட்டவும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அனுக்கிரகத்துடன் ஒரு குழு செயற்பட்டு வருகிறது. இதன் பணி சிறப்புற நிறைவேற அன்பர்கள் அணுக வேண்டிய முகவரி: செயலாளர், ஸ்ரீ ஞானாம்பிகா சமேத கருணாகரேசுவர சுவாமி கோவில் திருப்பணிக் குழு, புதுத் தெரு, திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

வெளியிலிருந்து யாரோ பெண்ணின் மெல்லிய குரல் கேட்டது.

நான் எழுந்து விரைந்து சென்று கதவைத் திறந்தேன். வாசலில் நின்று கொண்டிருந்தவள்... சரயு!

''நீங்களா?'' நான் வியப்போடு கேட்டேன்.

சரயு சட்டென்று அறைக்குள்ளே நுழைந்தாள். தன் தலைத் துணியைச் சிறிது இழுத்து விட்டுக் கொண்டு தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முயன்றாள். அப்புறம், ''என்னை 'நீங்கள்' என்று கூப்பிடாதீர்கள். அத்தனை மரியாதைக்கு நான் அருகதை உள்ளவள் இல்லை. நான் சின்னவள். வயதில் மட்டும் அல்ல; எல்லா வகையிலுமே. நீங்கள் என்னை நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டால், அப்புறம் என்னோடு பேச்சுகூட வைத்துக் கொள்ள மாட்டீர்கள். அவ்வளவு வெறுப்பீர்கள்!'' என்றாள்.

சரயுவின் பேச்சைக் கேட்ட நான் அப்படியே வெளிறிப் போய் நின்றேன். இது போல் இவள் என்னிடம் முன்பு ஒருபொழுதும் பேசியதில்லை. திடீரென்று இவளுக்கு என்ன நேர்ந்து விட்டது? என்னெதிரிலே தன்னையே ஒப்படைக்கத் துணிந்தவள்போலப் பேசுகிறாளே!

அறைக்குள் நுழைந்த சரயு, ''கதவைத் தாளிடுகிறேன். தவறாகக் கருதாதீர்கள். என்னைப் போலீஸ் துரத்துகிறது!'' என்றாள்.

''போலீஸா?''

''ஆமாம். போலீஸ்தான். அதற்குப் பயந்துதான் நான் உங்கள் வீட்டுக்கு ஓடி வந்திருக்கிறேன்!''

''வீணில் உன்னைப் போலீஸ் துரத்துவானேன்? நீ என்ன செய்தாய்?''

''அன்றைக்கு ஒருத்தரை நீங்கள் என் வீட்டில் பார்த்தீர்களே, போதையிலே கூட மிதந்து பிதற்றினாரே, நினைவிருக்கிறதா? அவர் என்னைப் பிடிக்கப் போலீஸிலே சொல்லியிருப்பாரா யிருக்கும்!'' என்றாள் சரயு.

''அவன் யார்? உன்னைப் போலீஸிலே பிடித்துக் கொடுக்க வேணும் என்று அவன் நினைக்கிற அளவுக்கு நீ என்ன காரியம் செய்தாய்?''

''எல்லாவற்றையும் சொல்கிறேன். முதலில் குடிக்க எனக்கு ஒரு தம்ளர் தண்ணீர் கொடுங்கள். என் தொண்டை உலர்ந்து போய்க் கிடக்கிறது. உங்கள் வீட்டிலே வேலைக்காரனோ, வேலைக்காரியோ யாரும் கிடையாதா?'' என்று கேட்டாள் சரயு.

''அதனாலே என்ன, இதற்கு வேலைக்காரனும் வேலைக்காரியும் வேணுமா? நானே கொண்டு வந்து தருகிறேன்!'' என்று கூறி உள்ளே போய் ஒரு தம்ளர் குளிர்ந்த நீரை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்தேன்.

''அபசாரம்! நான் செய்த பாவங்கள் போதாது என்று இந்தப் பாவமும் வேறு சேர்ந்து கொண்டு விட்டது. தண்ணீர் கொண்டு வந்து தருகிற சிரமத்தை உங்களுக்குத் தந்தது பாவமில்லையா? இருந்தாலும் என்ன செய்வது? நாவறட்சியில் உயிரே போய்விடும் போலிருக்கிறதே!'' என்று கூறிச் சரயு ஒரே மூச்சில் தம்ளர் தண்ணீரைக் காலி செய்தாள். பிறகு, ''இது எச்சில் தம்ளர். இதை நான் உங்கள் கையில் தரமாட்டேன். சமையலறை எங்கு இருக்கிறது, சொல்லுங்கள்! நான் கழுவி வைத்து விடுகிறேன்!'' என்றாள்.

நான் அவள் கையிலிருந்த தம்ளரை வாங்கிக்கொண்டு ''அதெல்லாம் நீ ஒன்றும் கழுவித் தரவேண்டாம். இங்கேயே இருக்கட்டும். வேலைக்காரன் வந்தால் கழுவி வைத்துவிடுவான். அது போகட்டும், அந்த ஆள் யார், சொல்லு!'' என்று அவள் விட்ட இடத்தைத் தொடர்ந்தேன்.

''அவன் ஒரு மோசக்காரன். அந்த நாசக்காரன்தான் என்னை இந்த வழிக்குக் கொண்டு வந்தவன்!'' என்றாள் சரயு.

அப்படியும் அவள் சொன்னது எனக்கு விளங்கவில்லை. ''என்ன வழி? என்ன சொல்கிறாய், நீ?'' என்று கேட்டேன்.

சரயு திடுமென்று அழுது விட்டாள். அவள் என்னவோ சொல்லத்தான் வாய் எடுத்தாள். ஆனால் நெஞ்சு அடைத்துக்கொண்டு விட்டது. சிறிது நேரம் தன்னைச் சரிப்படுத்திக்கொண்ட பின், ''இதையெல்லாம் நீங்கள் கேட்காமல் இருக்கிறதே நல்லது. யாருக்கும் இந்த விஷயங்கள் தெரியாது. யாரிடமும் சொல்லக் கூடிய விஷயங்களும் இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் நீங்கள் நம்பினால் போதும். நான் நல்ல குடும்பத்துப் பெண். அந்த மோசக்காரன்தான் என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கினான்'' என்றாள்.

மறுபடியும் அதே ரகசியம்!

அவ்வளவு சுலபமாக இவள் எதுவும் சொல்ல மாட்டாள் என்பதை நான் புரிந்து கொண்டேன். அவளே கூற விரும்பாத பொழுது, அவளைப் பலவந்தப்படுத்திச் சொல்ல வைக்கக் கூடாது என்றும் முடிவு செய்தேன்.

எனவே, ''இங்கே இருந்தால், போலீஸ் உன்னைப் பிடிக்காது, பிடிக்க முடியாது என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டேன்.

பாட்டனாரின் முதுகுவலி, பாட்டியின் உடல்வலி,
அம்மாவின் தலைவலி,
அப்பாவின் ஜலதோஷம், மகனின் சுளுக்கு
அனைத்துக்கும்
நிவாரணம் அளிக்க
இல்லந்தோறும்
இருக்க வேண்டிய
நல்ல மருந்து.





அமிர்தாஞ்சனம்

வலி, ஜலதோஷம், சுளுக்கு ஆகியவற்றிற்கு சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவுங்கள். அதன் சிறப்பான பத்து மருந்துகளின் கலவை வியக்கத்தக்க வகையில் உங்களுக்கு நிமிஷத்தில் நிவாரணமளிப்பதை உணர்வீர்கள்.


சிக்கனமான ஜாடி. சிறிய பாட்டில் மற்றும் மலிவு விலையில் அடக்கமான டப்பாவிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் 80 ஆண்டுகளுக்கு
மேலாக நம்பகமான குடும்ப நிவாரணி.


அமிர்தாஞ்சன் லிமிடெட்.


Bayer Chemistry

promotes human progress in many spheres









Our multipurpose factory at Thana (Maharashtra) manufactures a wide range of

- **Agricultural pesticides** for increasing food production
- **Household pesticides** to rid houses of vermin
- **Rubber chemicals** to meet the increasing demands of the Rubber industry
- **Pharmaceuticals** for the improvement of public health

Bayer thinks of tomorrow–today

Bayer (India) Limited
Express Towers, Nariman Point,
Bombay 400 021

Bayer

BAYER

DPS-3

''இதோ பாருங்கள்! இன்று காலை வரையில் யாரும் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. தினம் போலக் காலையில் கண் விழித்துச் சமையல் வேலையைக் கவனிக்கலாம் என்று உட்கார்ந்தேன். கமலாவை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் இல்லையா?'' என்று கேட்டாள் சரயு.

''எந்தக் கமலாவைச் சொல்கிறாய்? உன் வேலைக்காரியைத்தானே''?''

''ஆமாம். கமலாவும் இதற்கு உடந்தை என்பது இதுவரை எனக்கு நிசமாகவே தெரியாது. நிசிகாந்த பாபுவையும் கூடத்தான் நீங்கள் பார்த்திருக்கிறீர்களே!''

''நிசிகாந்த பாபுவா? யார் அது?''

''அன்று போதை ஏறிப் பிதற்றிக் கொண்டிருந்தாரே, அவர்தான் நிசிகாந்த பாபு—நிசிகாந்த ஹால்தார்!''

''அவனுக்கும் உனக்கும் என்ன உறவு?''

''உறவா? உறவு-முறை எதும் இல்லை. வெறும் நன்றி அறிவுதான். ஒரு நாள் அவர் என்னை ஓர் ஆபத்திலிருந்து காப்பாற்றினார். காப்பாற்றினவரே இன்னொரு நாள் இப்படி ஓர் ஆபத்திலே மாட்டி வைப்பார் என்று நான் என்ன கண்டேன்?''

பேச்சுக்கு இடையில் கதவு தட்டும் ஓசை கேட்டது. சரயு ஒரேயடியாகப் பயந்து அரண்டு போய் விட்டாள். ''போலீஸ் வந்து விட்டாற் போலிருக்கிறதே! என்னை உள்ளே ஏதாவது ஓர் அறையில் ஒளித்து விடுங்கள்! சீக்கிரம்!'' என்று பதறியவள், தானே பக்கத்து அறைக்குள் புகுந்து கொண்டாள். நானும் அவளோடு அந்த அறைக்குப் போனேன். அது என் படுக்கை அறை. பீரோவுக்குப் பின் மறைந்து கொண்டவள், என்னைப் பார்த்துக் கெகெத்தாள். ''நீங்கள் போங்கள். இங்கு தாமதிக்காதீர்கள்: இதோ பாருங்கள். போலீஸாருக்கு என்னைப் பற்றிச் சொல்லி விடாதீர்கள்! சீக்கிரம் போங்கள்!''

கதவை ஒருக்களித்துக் கொண்டு நான் அறைக்கு வெளியே வந்தேன். மனத்தில் இலேசாக அச்சம் தலையெடுத்தது. தெரிந்து கொண்டே நான் இவளுக்கு இடம் கொடுத்திருக்கிறேனே. இது நியாயமா? இவள் நடத்தையோ சந்தேகப்படக்கூடியதாக இருக்கிறது என்பதும் நமக்குத் தெரியும். நேபாளத்திலிருந்து கஞ்சா கடத்தி வந்திருக்கிறான். இது மூன்றும் மனிதர்கள் சொல்லக் கேட்டதில்லை. நம் கண்ணால் நாமே நேரில் பார்த்தது. எல்லாம் தெரிந்தும் அன்று அவன் வீட்டுக்கு நான் ஏன் போனேன்? இன்று நம் வீட்டில் இவளுக்கு ஏன் அடைக்கலம் கொடுத்தேன்? தவறுக்கு உடந்தையாக நாமும் தவறு செய்தால்...?

கதவைத் திறந்த நான் பிரமித்துப் போனேன். போலீஸ்காரர்கள் யாரும் நிற்கவில்லை. என் வேலைக்காரன் காளுயிதான் நின்று கொண்டிருந்தான்.

''எங்கேடா போயிருந்தாய்?''

''கடுகெண்ணெய் தீர்ந்து போயிற்று. வாங்கி வரப் போயிருந்தேன்!'' என்றான்.

காளுயி எண்ணெயை எடுத்துக் கொண்டு சமையலறைப் பக்கம் போனான். நான் என் படுக்கையறைப் பக்கம் போனேன். ஆனால் சரயு எங்கே? குளியலறையைப் பார்த்தேன். கட்டிலுக்கு அடியில், பீரோவுக்குப் பின்னும் என்று ஓரிடம் விடவில்லை. ஆனால் அவளைத் தான் காணவில்லை. கடைசியில் குளியலறையின் புறக்கடைக் கதவு—துப்புரவாளர்கள் வந்து போவதற்காக வைத்திருந்த வாசல் கதவு—மல்லாக்கத் திறந்து கிடந்தது. அதன் வழியாக எட்டிப் பார்த்தேன். போலீசுக்குப் பயந்து அந்த வழியாக எங்கேயாவது ஓடி விட்டாளோ என்னவோ?


நான் பெருமூச்சு விட்டேன். நிசமாகப் போலீஸ் வந்திருக்குமானால், எனக்கும்தான் வீணில் எத்தனை தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கும்? தொல்லைகள் நேர்ந்திருக்கும்?

மறுபடியும் சரயு என் வீட்டுக்கு வந்தால் அவளுக்கு இடம் கொடுப்பதில்லை என்று மனத்துள் உறுதி பூண்டேன். 'துஷ்டர்களைக் கண்டால் தூரவிலகு' என்பது இந்தமாதிரிப் பெண்களுக்கும் பொருந்தும்தானே? (தொடரும்)

சித்ரா - சுதா சகோதரிகள் இருவரும் ஒரேமாதிரி சாயல் உடையவர்கள். விண்ணிலிருந்து இறங்கிய மின்னல் கீற்றுகளைப் போல் சபையோரைக் கவர்ந்து விட்டனர். வர்ணம் பூர்வி கல்யாணியில் எடுப்பாக அமைந்தது. ''குமாரஸ்வாமியை வரச் சொல்லடி'' என்ற பதத்துக்கு அபிநயம் பிடித்து, முருகப் பெருமானிடம் மாறாத நேயம் பூண்ட நாயகியின் மனவேதனையை - சித்ரா, சுதா இருவரும் அழகுற எடுத்துக் காட்டினர். ''பார்த்துக் கொண்டே இருந்தால் போதுமா!'' ஆபேரி ராகப் பதத்துக்கு அவர்கள் ஆடிய நடனமும் அபாரம்!

சித்ரா, சுதா இருவரும் காலஞ்சென்ற கே. என். தண்டாயுதபாணி பிள்ளையின் மாணவிகள். அன்றைய நிகழ்ச்சிகளில் பதங்கள் ஸ்ரீ தண்டாயுதபாணி பிள்ளை இயற்றியவை. -காந்தன்






நினைக்கும் நெஞ்சு
இனிக்குமே, மணக்
கோலத்தில் அன்று நீங்கள்
நின்ற நன்னாள்—மணியான மணப்பெண்
என்று மலர்மாரி தூவினார்களே உங்கள்மீது.
இன்றோ, உங்கள் மகளுக்குத் தை பிறந்தாச்சு,
வருகிற வாரம் மேளம் முழங்குமே. நினைவுகள் எல்லாம்
நிலைத்திட வேண்டுமன்றோ? அதற்கொரு ஆல்பம் வேண்டும்
படமெடுக்க ஒரு க்ளிக்-III.

விலை:
ரூ. 70.25,
எக்ஸைஸ் தீர்வை
உள்ளிட்டது.
தல வரிகள்
தனி.

Agfa க்ளிக் III

குறிவைத்துச் சடக்கெனச் சுடும் காமெரா.



AGI விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
மார்க்கண்ட் சேம்பர்ஸ், 41 நியூ மெரின் லைன்ஸ், பம்பாய்-400 020.
கிளைகள்: பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.
® புகைப்படச் சாதனத் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/லெவர்குஸன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

தயாரிப்பாளர்கள்: **நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,** பரோடா • பம்பாய்

SIMOES/AG/17C TM

சேர, சோழ, பாண்டிய வரலாற்றில் ஓர் அபூர்வ நிகழ்ச்சி. பாண்டியன் கோச்சடையன் ரணதீரனுக்குச் சோழ மன்னன் மருமகன். மாமனாரைப் பார்க்க அவன் மதுரை வந்த சமயம், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனாருடன் அங்கே வந்து சேர்ந்தார்.

ஆலவாய் அழகனைச் சேர சோழ பாண்டியர்கள் ஒருங்கே வழிபட்டார்கள். புண்ணியம் கட்டிக் கொண்டவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் அந்தக் காலத்து விஸ்வி.ஐ.பி. இல்லை என்றால் வேறு யார்? ...

(வேறு யார் இருக்கிறார்கள், சீதாமணியைத் தவிர?) எதையோ சாதிக்கிறவரைப் போல் வெளியூருக்குப் போயிருக்கிறார். சுந்து பல் தேய்க்கும்போதுதான் அவனுக்குத் தெரியும். எங்கே போனான், எதற்குப் போனான் என்று தெரியாது. ரமணி வீட்டுக்கு நீலா அவனுடைய சொற்படி போயிருக்கிறாள். லாவண்யா அமெரிக்கன் ஜார்ஜெட்டை, அப்படியும் இப்படியும் விரித்து மடித்துப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஒரு சாதாரண பூப்போட்ட 'மஸ்டர்ட்' கலர் புடவையைக் கட்டிக்கொண்டு கிளம்பியிருக்கிறாள். இன்று 'வழிகாட்டி' வேலை இல்லை போலிருக்கிறது.

களைந்த அரிசியை உலையில் போடும்போது திடீரென்று சீதாமணிக்கு ராஜப்பாவின் நினைவு வந்தது. ராஜப்பா அவனுடைய ஒன்று விட்ட அண்ணா. மூன்று மாதங்களுக்கு முன் குதிரைப் பந்தய மைதானத்தில் மாரடைப்பில் காலமானார். தமிழ்ப் பத்திரிகைகளில் அவருடைய மரணம் சாதாரணச் செய்தியாக வரவில்லை. பெரிய விளம்பரம் போலவே வந்தது. இருக்கிற சொத்தை எல்லாம் குதிரை வாலிலேயே கட்டி இழந்துவிட்டு, சாவதற்கு முன் பிள்ளை பூரணத்திடம் நாட்களை ஓட்டினார். பூர்ணத்துக்குப் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் நல்ல வேலை. அப்பாவும் பிள்ளையுமாக வீட்டில் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். (ராஜப்பாவின் மனைவி தர்மா பூவும் பொட்டுமாகப் போய் ஏழு ஆண்டுகள் ஆகின்றன.)

மதுர நாயகி

பி.வி.ஆர்

15

சீதாமணி இயந்திரமாக, இருக்கும் இரண்டு அறைகளில் வளைய வளைய வந்தாள்.

கணவன் பலராமன் இனிமேல் கோட்டை அடுப்பின் ஜ்வாலையில் வேகவே வேண்டாம் என்ற திருப்தி ஒரு பக்கம் தோன்றியது. ஆனால் வீட்டில் இனி எப்படி அடுப்பு எரியும் என்ற கேள்வி இன்னொரு பக்கம் உறுத்து வதைத்தது. ஹோட்டல் முதலாளியைக் குற்றம் சொல்ல அவளுக்கு மனம் வரவில்லை. கான்சர் வியாதி என்று தெரிந்தும் அவர் (பலராமனுடைய நச்சரிப்புக்காக) இத்தனை நாட்கள் தொடர்ந்து வைத்துக் கொண்டதே மேல். ரொக்கமாக இரண்டாயிரம் கொடுத்து உடம்பைப் பார்த்துக் கொள்ளவும் சொல்லியிருக்கிறார். இதற்கு மேல் ஒரு தொழிலாளி முதலாளியிடம் என்ன எதிர்பார்க்க முடியும்?

இரண்டாயிரம் ரூபாயைப் பற்றி மனம் சிந்தித்தது. சங்கரி மனம் மாறி மூவாயிரம் தந்தால் ஐயாயிரமாகி விடும். சென்னையிலேயே சிகிச்சை செய்து விடலாம். அவளுக்கு மாங்கல்ய பலம் இருந்தால், அமெரிக்க டாக்டர்கள்தான் பலராமனைக் காப்பாற்ற முடியும் என்று அவன் மாய்ந்து போவானேன்? தெய்வம் சென்னை டாக்டர்கள் மூலம் அவளுடைய மாங்கல்யத்தைக் காப்பாற்றட்டும்.

வீடு வெறிச்சோடியது. பலராமன் அதிகாலையிலேயே யார் பேச்சையும் கேட்காமல்

பூர்ணம் அப்பாவைப் போல் குடி, குதிரை, கூத்தி என்று பரம்பரைப் பெயரை நிலை நாட்டவில்லை. ஐப்பசி முடிந்தால் போதும், மாலையைப் போட்டுக் கொண்டு தாடி வளர்க்க ஆரம்பித்துவிடுவான். அதன் பிறகு அவன் இருக்கும் ஐயனாவரத்திலும் சரி, சென்னையின் மற்ற பகுதிகளிலும் சரி, நாள் தோறும் ஐயப்பன் பஜனைதான். மதுரை வழியாக இரண்டு தடவை ஆண்டுதோறும் அவன் சபரிமலைக்குப் போவது வழக்கம். ஒன்று மகர விளக்குக்காக. இன்னொன்று சித்திரை முதல் தேதி 'விஷு'வுக்காக. காலையில் வந்தால் குளித்துவிட்டுக் காப்பிகூடச் சாப்பிடாமல் கிளம்பி, மதுரையில் ஒரு கோவில் பாக்கி வில்லாமல் அலசிவிட்டுச் சாயங்காலம் புறப்பட்டு விடுவான். சுந்து பூர்ணத்துக்குச் சின்னச் சாமியார் என்று பெயர் சூட்டியிருக்கிறான். நீலா அவனை அதிசய அப்பாவி என்பாள். சங்கரி, இப்படி ஓர் ஒன்றுவிட்ட மாமா பூர்ணம் என்கிற பெய

ருடன் இருக்கிறான் என்பதையே பொருட்படுத்தவில்லை.

களைந்த அரிசி முழுவதையும் உலையில் போட்டபின், பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த மணிகளை எடுத்துப் போட உலையிலிருந்தே ஓர் அகப்பை நீரை எடுத்து ஊற்றினாள் சீதாமணி.

பூர்ணத்துக்கு ரயில்வே கொடுத்த வீடு இருக்கிறது. கட்டைப் பிரம்மச்சாரியான அவன் வீட்டில் அவளும் பலராமனும் இருந்து கொள்ளலாம். துணைக்குச் சந்துவையும் அழைத்துக் கொள்ளலாம். சென்னையில் சிகித்சை ஆரம்பித்து விட்டது போல் ஒரு கணம் அவள் பூரித்துப் போனாள். அன்று மாலையே பாண்டியன் எக்ஸ்பிரஸில் ஏறிவிட வேண்டும் என்று மனம் துடித்தது. ஆனால் அதற்குள் சங்கரி மனம் மாறி விடுவாளா? பாங்கிலிருந்து பணம் எடுக்க நேரம் இருக்குமா?

காலையில்தான் சரியாக ஏதும் சமைக்கவில்லை. இரவுச் சாப்பாடாவது நன்றாக இருக்க வேண்டும் என்று சீதாமணி நினைத்தாள். அவள் கறிகாய்க் கூடையைப் பார்த்தாள். ஓரிரண்டு பழுத்த பச்சை மிளகாயும், உலர்ந்து போன கறிவேப்பிலையும் கூடையில் சிறைவாசம் செய்தன. வெறும் ரசத்தை வைக்க வேண்டியதுதான் என்று அவள் வாய் முணுமுணுத்தது.



திடீரென்று 'அம்மா!' என்ற குரல் கேட்டது. நீலா.

''நீலாவாடீ?''

''ஆமாம்மா.''

''ஏன் இத்தனை நேரம்?''

''பஸ் கிடைச்சுத்தானே வரணும்?''

''எப்படி இருந்த டவுன் சர்விஸ் எப்படியாயிடுத்து?'' என்று முணுமுணுத்தவள் ''ரமணி இருந்தானா?'' என்று கேட்டாள்.

'உம்' கொட்டின அவள், ''இன்னிக்குக் கார்த்தாலே வர முடியலை. நாளைக்கு வரேன்னா'' என்றாள்.

''வேறே என்ன சொன்னான்?''

''பெரிசா ஒண்ணும் சொல்லல்லே...... சங்கரி எங்கே காணோம்?''

''சொல்லிண்டு போனால்தானே எனக்குத் தெரியும்?''

''இப்ப, வர்றபோது அவளோட ஃப்ரண்ட் கான்வேயைப் பார்த்தேன். சரியான அசட்டுப்பிண்டம். நெற்றி யெல்லாம் விபூதியை அப்பிண்டு, நட்ட நடுவிலே பெரிசாக் குங்குமத்தையும் இட்டுண்டு போறது... செங்கொரங்குக்கு வேஷம் போட்டால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கு.''

''நம்ம நம்பிக்கை போயிண்டு வர்றது. அவா நம்பிக்கை வளர்ந்துண்டு வர்றது... அப்பா பெட்டியில் எதானும் சில்லறை இருக்கா பாரு.''

''எங்கிட்டே நாப்பது பைசா இருக்கு.''

''இருபது பைசாவுக்குக் கீரையும், பாக்கிக்கு பூசணிக்கீத்தும் வாங்கிண்டு வர்றியா, ஒரு சாம்பாரை வைச்சு, கீரை கடைறேன்.''

''சரி. நான் ரமணிகிட்டே, ஒரு வேலை வாங்கித் தரச் சொல்லி யிருக்கேன்.''

''தந்தப்புறம் சொல்லு.''

''சந்து எங்கே?''

''யார் கண்டா? போய் வாங்கிட்டு வா!''

நீலா புறப்படவும் சங்கரி எதிரே வரவும் சரியாக இருந்தது.

மாத்திரையை விழுங்கிய பிறகும் அதன் கசப்பு நாக்கில் ஒட்டிக் கொண்டிருப்பது போல, ஹரிணியின் வார்த்தைகளும் சிரிப்பும் ஒரு கசப்பாக லாவண்யாவின் மனத்தில் நாள் முழுதும் ஒட்டிக் கொண்டன. இதுவரையில் பிறரைத் தூக்கி எறிந்து பேசியே பழக்கப்பட்ட அவளால் ஹரிணியின் எகத்தாளத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் இப்போது ஊமைக் கோபத்தில் பொருமிக் கொள்வதை விட வேறு என்ன செய்ய முடியும்?

அவளுக்கு அவளுடைய நடையே மாறி விட்டதாகத் தோன்றியது. கால்களின் இயல்பான விரைவு மறைந்து தள்ளாடின.

முழங்காலை முழங்கால் இடித்தது. திடீரென்று நடந்த சம்பவத்துக்குக் காரணம் ரமணிதான் என்பதை அவள் உணர்ந்தாள். ஹரிணி எப்படி அவனை ரமணியுடன் இணைத்துப் பேசலாம்? இன்று ரமணியை யாருடனாவது இணைத்துப் பேசலாமானால் அது ஹரிணியைத்தான். அவள்தான் அவனுடன் சினிமா என்றும் கச்சேரி என்றும் செல்கிறாள். பாண்டியன் ஹோட்டலில் எத்தனை தடவை லாவண்யா இருவரும் சிரித்துக்

கும்மாளம் அடித்து டிடன் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறான்?

இந்த ரமணியின் மனம் தன்னிடம் லயித்திருக்கிறது என்பதை லாவண்யா அறிவாள். அவளும் சிற்சில சமயங்களில் அவனைப் பற்றிச் சிந்திக்கவும் சிந்தித்திருக்கிறாள். ரமணி பிறருடன் கலகலவென்று சிரிக்கச் சிரிக்கப் பேசுவது போல் அவளிடம் பேசியதே இல்லை. இதற்குக் காரணம் என்னவென்று பல நாட்கள் புரியாமலே இருந்திருக்கிறது. அவளிடம் நெருங்கிப் பழக அவன் ஆசைப்படுகிறான். அந்த ஆசையை அவன அடக்கி வைத்திருக்கிறான் என்பதை அவள் நாளாவட்டத்தில் புரிந்து கொண்டிருக்கிறாள். ஆனால் ஏன் அவன் இப்படி ஆசையை அடக்கி வைத்திருக்கிறான் என்றுதான் இன்றுவரை புரியவில்லை. ஹரிணியைச் சந்திக்கும் வரை புரியாமல் இருந்தது. இப்போது ஒருவாறு புரிந்து விட்டது. ஹரிணியின் பேச்சிலிருந்து, தன்னைப் பற்றி ரமணி ஹரிணியிடம் பேசியிருக்க வேண்டும், அதுவும் உயர்வாக, என்பது புரிந்து விட்டது. ஒரு சமையற்காரனின் பெண்ணைப் பற்றி, கேவலம் பயணிகளுக்கு வழிகாட்டியாக நடந்து நாளுக்கு இருபது ரூபாய் சம்பாதிக்கிறவளைப் பற்றி ஒரு பெரிய பணக்காரன், தன் பணக்காரச் சிநேகிதியிடம் உயர்வாகப் பேசுவானேன்?

ரமணி அவளை விரும்புகிறான். ஆனால் தன் விருப்பத்தை வெளியிடத் தைரியமில்லாத கோழையாக இருக்கிறான். ஏன்? அவள் பிறரைத் தூக்கி எறிவது போல் அவனையும் தூக்கி எறிந்து விடுவாளோ என்ற பயமா?

ஒருசில நிமிடங்கள் ஹரிணியை மறந்து ரமணியையும் தன்னையும் மட்டுமே இணைத்துப் பார்த்தாள்.

அம்மாவுக்கு ஒரே பிள்ளை. பிள்ளை ஆசைப்பட்டதை அம்மா நிறைவேற்றி வைக்கக் கூடியவள். மதுரையில் ஐந்தாறு வீடுகள் சொந்தம். தெற்கு மாசி வீதி மருந்துக் கடையிலிருந்து வருமானம். பிள்ளை பெரிய வக்கீலிடம் ஜூனியர். இப்படிப்பட்ட இடத்திலிருந்து பெண் கேட்டு வந்தால்?

அப்பாவின் கான்சர் திகைப்பிலும் மகிழ்ச்சி விழுமேயே குணமாகி விடும். அம்மா தலைகால் புரியாமல் குதிப்பாள். அக்கா மூலமாக நமக்கும் நல்ல காலம் பிறக்கும் என்று நீலாவும் சந்துருவும் துள்ளுவார்கள்.

ஆனால் அவள்?

இத்தனை வருடங்களாக இருபது ரூபாயில் பத்தும் பத்து ரூபாயாகப் போட்டு ஆயிரக் கணக்கில் சேர்த்து வைத்திருக்கிறானே, அந்தப் பணம் எதற்கு? அவளுடைய சேமிப்பின் காரணமே, மனத்துக்குப் பிடித்த ஒருவனுக்கு மனைவியாக வாய்க்கத்தானே?

ரமணி அவளுடைய மனத்துக்குப் பிடித்தவனா?





பிக்பாக்கெட் மகாநாடு!

அண்மையில் ஜாவா தீவில் உள்ள பாண்டுங் நகரில் பிக்பாக்கெட்காரர்களின் மகாநாடு நடந்தது. பிக்பாக்கெட் அடிப்பதற்கான பல வழிகள் இந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதே மாளிகையில் முன்பு கூட்டுசேராக் கொள்கை பற்றி விவாதிக்க உலக மாநாடு நடந்தது! -டெக்கான் ஹெரால்ட் - ஸ்ரோ

கேள்வி ஒரு பயங்கர ஒலியுடன் அவளுள் எழுந்தது. ரமணி பணக்காரன், ஏற்ற வயது, கலகலவென்று சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறவன். ஆண் மகனுக்கு இருக்க வேண்டிய லட்சணங்களை உடையவன்.

இவ்வளவெல்லாம் இருந்தும் அவன் அவளுடைய மனத்துக்குப் பிடித்தவனா?

கேள்வியே குழப்பியது.

ஏன் அவளால் சீராகச் சிந்திக்க முடியவில்லை? உணர்ச்சிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கிறவளாக இருந்தால், ஆமாம், இல்லை என்று ஒரே வார்த்தையில் பதிலைச் சொல்லி விட முடியும். அவள்தான் யதார்த்தவாதியாயிற்றே? ஆனால் யதார்த்த ரீதியில் இந்தப் பிரச்னையை அலசவும் முடியவில்லை. சுக—வாழ்க்கைக்குப் பணக்காரன் கிடைக்கலாம். ஆனால் பணக்காரன் சுகத்தை அளிப்பானா?

வேறு ஒரு பெண்ணுடன் சில வருடங்களாகப் பழகுகிறவன், வேறு ஒரு பெண்ணுக்குக் கணவனான பின்பும், பழைய சிநேகிதியுடன் பழகப் போகிறவன், எப்படிப்பட்ட கணவனாக இருப்பான்?

என்னதான் ஹரிணி – ரமணி நட்பு, ஒரு லட்சிய நட்பாக இருந்தாலும், சமூகத்தின் நடைமுறைக்கு ஒத்து வராத நட்பு. சமூகத்துக்கே இப்படி யென்றால், ரமணியின் மனைவிக்கு எப்படி இருக்கும்?

கூட்ஸ் ஷெட் தெருவை அடைந்தபோது தான் அவளுடைய சிந்தனைத் தொடரை அறுத்தெறிந்தார் பண்டிதர் கண்டிராக்டர் ஆடியபாதம்.

அதன் பிறகு வீட்டை அடைந்த பின்தான், இத்தனை நேரம் அனாவசியமாக ரமணியின் மீது சிந்தனையைச் செலவழித்தோம் என்று லாவண்யாவுக்குப் பட்டது.

குப்பைக் கூடையில் காகிதத்தைச் சுருட்டி எறிவது போல், மனத்திலிருந்து ரமணியைச் சுருட்டி எறிந்தாள். அன்று மாலை, மறுநாள் வரப்போகும் கனடா நாட்டுப் பயணிகளைப்பற்றி அறிய பாண்டியன் ஹோட்டலுக்குச் சென்று திரும்பினாள் லாவண்யா. வாசற்படியில் காலை வைக்கையில் நீலா எதிர்ப்பட்டாள். அவள் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தாள். ஒரு தடவை லாவண்யா அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

''ஏண்டீ, அப்படிப் பார்க்கறே... இது உன் புடவை இல்லை'' என்றாள் நீலா.

''இது எது புடவை? எப்ப வாங்கினே...?''

''அப்புறமாச் சொல்றேன். ஒரு ரூபாய் கொடு. கறிகாய் வாங்க வேணும்.''

''முந்தாநாளே அம்மாகிட்ட ஆறு ரூபாய் கொடுத்தாச்சு. அம்மா கிட்டே கேளு.''

''அதிலே தொண்ணூறு பைசாதான் பாக்கி இருந்தது. இப்ப ரமணி வீட்டுக்குப் போய் வந்ததிலே ஐம்பது பைசாவும் தீர்ந்தாச்சு. இப்ப நாற்பது பைசாதான் இருக்கு.''

''எதுக்கு நீ ரமணி வீட்டுக்குப் போனே?''

''உட்கார், சொல்றேன்.'' நீலா முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டே கூறினாள்.

லாவண்யா உட்கார்ந்தாள்.

''இப்படியே இரு... கறிகாய் வாங்கிண்டு வந்தப்பறம் சொல்றேன். நான் வர்றத்துக்குள்ளே எழுந்திருந்தே, சொல்ல மாட்டேன்!''

அடுத்த கணம் நீலா வாசலை நோக்கி நடந்தாள். 'லாவண்யா ஒரு ரூபா கொடுத்திருந்தால் இரவுச் சாப்பாடு ருசியாக இருந்திருக்கும்; இப்போ வெறும் கீரைதான்' என்று அவள் மனம் ஏக்கத்துடன் முணுமுணுத்தது.

''அம்மா!'' என்றாள் லாவண்யா. நீலா மட்டம் தட்டியது அவளுக்குப் புதிய அனுபவம் அல்ல. இருந்தாலும் அவளுடைய ஆர்வப் பசிக்கு நீலா இரை போடாமல் வெளியேறியது ஆத்திரத்தைக் கிளப்பியது.

''என்ன?''

''நீ நீலாவை ரமணி வீட்டுக்கு அனுப்பினியா?''

''ஆமாம், அதுக்கு என்ன?''

''என்ன விஷயம்?''

''எதுவானா உனக்கு என்ன?''

''தெரிஞ்சுக்கப்படாதோ?''

''நீ அக்கறை காட்டறபொண்ணுன்னு என்னிக்கு எனக்குத் தோன்றதோ அன்னிக்குச் சொல்றேன்.''

''அம்மா!''

''ஏண்டி கத்தறே?''

''நீ என்னை உன் பொண்ணுலே ஏத்துக்கலே!''

''அப்படி உனக்குத் தோணினா அதுக்கான காரணத்தை நீயே அலசிப் பாரு... இப்ப என் வேலையைப் பார்க்க விடு.''

''ரமணி வந்தா அவர் கிட்டே மண்டையிலே அடிச்ச மாதிரி ரெண்டு வார்த்தை கேட்கணும்.''

''கேளு. நன்னாக் கேளு. ஏதோ நம்ம வீட்டுக்குக் கொஞ்சம் ஒத்தாசையா, நல்ல பிள்ளையா வந்து போறானே இல்லையோ. அதனாலேதான் அவன் மண்டையிலே அடிக்க உன் நாக்குத் துடிக்கிறது.''

''அவர் ஏன் நல்ல பிள்ளையா, ஒத்தாசையா இங்கே வந்து போறார் தெரியுமாம்மா?''

''நீயே சொல்லு.''

''நீ இன்னும் புரிஞ்சுக்கலேன்னு நான் சொல்லி நீ தெரிஞ்சுக்கறதிலே....''

சிதாமணி இடைமறித்தாள். காரணம் என்னவென்று புரியாமல் லாவண்யா திரும்பிப் பார்த்தாள்.

ரமணி முன்னேறி வந்துகொண்டிருந்தான்.

(தொடரும்)



U-BF 7/7 tam

இளமைப் பருவத்தில் ஏற்படும் பற்சிதைவு, நிரந்தரப் பற்கள் தெற்றுப் பற்களாக வளர்ந்து, என்றென்றும் சிரிக்கவே முடியாத நிலைக்கு உங்களை ஆளாக்கிவிடக் கூடும்—நீங்கள் உங்கள் பற்களுக்குப் பினாகா ஃப்ளோரைட்* பாதுகாப்பு அளிக்காத வரையில்.

உலகெங்கும் நடத்திய சோதனைகளின் மூலம், பற்பசையில் அடங்கிய பொருட்களில் ஃப்ளோரைட் மட்டுமே, பல் எனாமலோடு <u>உண்மையிலேயே கலந்து</u>, அதற்குப் பற்சிதைவை எதிர்க்கும் வலிமையை ஊட்டுகிறது என்று நிரூபணமாகி உள்ளது. பினாகா ஃப்ளோரைடின் நீடித்துநிற்கும் ஆற்றல், பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.

*தீவிர ஃப்ளோரைட் கலவையான சோடியம் மோனோஃப்ளோரோபாஸ்பேட் அடங்கியது.



பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினாகா ஃப்ளோரைட்

இந்தியாவின் முதன்முதல் சக்திவாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

வாசகர் மேடை

□ இப்பொழுதெல்லாம் மக்களின் வரிப் பணத்தில் மாநில அரசாங்கங்களும் மத்திய அரசும் தங்கள் சாதனைகளைப் பட்டியல் போட்டுப் பத்திரிகைகளிலும் சுவரொட்டிகளிலும் பிரும்மாண்டமான அறிவிப்புப் பலகைகளிலும் (Hoardings) விளம்பரம் செய்து வருகின்றன. அதுவும் தேர்தல் சமயத்தில் இப்போது (DAVP, DIPR) விளம்பரங்கள் ரொம்பவும் அதிகமாகி விட்டிருக்கின்றன. அது ஆளும் கட்சி மக்கள் வரிப் பணத்தில் பகிரங்கமாகச் செய்துகொள்ளும் விளம்பரம் என்று பச்சையாகத்தெரிந்தபோதிலும் அதைப்பற்றி ஆள்வோர்வெட்கப்படுவதாகத்தெரியவில்லை.

தேர்தலின்போது மட்டுமில்லை, பொதுவாகவே அரசாங்கங்கள் தங்கள் கடமை என்று செய்ய வேண்டியவைகளைச் 'சாதனை' என்று ஏன் விளம்பரம் செய்ய வேண்டும்? அதற்கு ஏன் வரிப் பணம் வீணாக வேண்டும்?

குடும்பக் கட்டுப்பாட்டை ஊக்குவிக்க விளம்பரம் தேவைதான். சுற்றுலா முன்னேறவும் விளம்பரம் தேவைதான். செய்யட்டும். மற்ற மற்ற சாதனை விளம்பரங்களைத் தங்கள் கட்சிப் பணத்தில் செய்துகொள்ளட்டும்.

சென்னை—30
10—3—77 எஸ். அனந்தராமன்

□ கடந்த 9—3—77 தேதி காலையில் 7—15 மணி டெல்லிச் செய்தி அறிக்கை ஆரம்பித்தவுடன் "ஆகாசவாணி செய்திகள் வாசிப்பது சரோஜினி நாராயணசாமி" என்றவர், "கையெல்லாம் ஒரே வேர்வையா இருக்கு" என்றார். தூக்கி வாரிப் போட்டது. இவர் கையில் வேர்த்தால் நமக்கென்ன? சுவிட்சை அணைக்க மறந்து விட்டார் போலும்! ஒரு பதினைந்து நிமிட நேரச் செய்தி அறிக்கையைப் பொறுப்புடன் வாசிக்க முடியாதா இவர்களால்?

சென்னை—17
11—3—77 பி. ப. சுந்தர்

□ கோமதி ஸ்வாமிநாதன் எழுதியுள்ள 'ஓய்வு எதற்கு?' சிறுகதை என் உள்ளத்தை வெகுவாகத் தொட்டது. சாருக்கு 'லாஸ்ட் டே'யாக்கும் என்ற அச்சாணியமான வார்த்தைகளிலிருந்து அவர் தப்பிக்கப் பட்ட பாட்டை நினைக்கும்போது அழுதுகொண்டே சிரிக்கிறேன்!

பெரியதிருமங்கலம்
10—3—77 எஸ். பூவேந்தரசு

அரசுச் செலவில் தேர்தல் பிரசாரமா?



□ 'பொன்னியின் புதல்வர்' வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்தேன். 'கல்கி வளர்த்த தமிழைப் போற்றுவோம் - தமிழ் வளர்த்த கல்கியைப் போற்றுவோம்' என்ற வாசகம் வாசலிலேயே வரவேற்றது. பின்னர் விழாப் பந்தலில் தூண்கள், அவர் 'அஷ்டாவதான'ப் பெருமைகளைப் பேசின.

விழா மிகச் சிறப்பாக நடந்தது. 'வானதி'க்குப் பாராட்டுக்கள். மேடையில் 'கல்கி'யுடன் கலந்து பழகிய நண்பர்கள், அவரைப் பற்றிப் பேசும்போது அந்தக் காலத்துக்கே சென்றுவிட்டது போன்று உணர்ச்சி வசப்பட்டேன். விழா நடக்கும் வரை ஏதோ ஒரு தனி உலகில் சஞ்சரித்து விட்டு, திடீரென்று பூமியில் தள்ளப்பட்ட உணர்வு வந்தது விழா முடிந்தபோது.

சென்னை—30
14—3—77 கோதா பார்த்தசாரதி

□ ஓட்டல் பண்டங்களின் தரம் மிகவும் குறைந்து விட்டது.

சம்பந்தப்பட்ட ஓட்டல் நிர்வாகியிடம் புகார் செய்தால் இந்த விலை ஏற்றத்தில் விலையையும் எடையையும் நிர்ணயம் செய்து விட்டுத் தரமாகக் கொடு என்றால் எப்படிக் கொடுப்பது என்று கேட்கிறார்கள்.

சதா ஓட்டலையே நம்பிக் கொண்டிருக்கும் என் போன்றோருக்கு இனி மேல் நிவர்த்தியே கிடையாதா?

மாயூரம்
7—3—77 கே. சடகோபன்

□ பற்றிய கொள்கையில்
  பாசமும் பிடிப்பும்
முற்றிய அறிவில்
  முனைப்பும் துடிப்பும்
சுற்றியே சுடர்விடும்
  சுயேச்சைகள் பலரை
பற்றியே செய்திதந்த
  பத்திரிகை தர்மம் வாழ்க!

சென்னை—11
11—3—77 கோட்டை அம்பிதாசன் மற்றும்
திரு வி. நகர் சுதந்திரப் பறவைகள்


பாரதப் பெருமை பேசும்
சுகபோக சோப்புகள்
மைசூர்
ஸாண்டல்
GOVT. SOAP FACTORY
BANGALORE
கவர்மெண்ட் சோப் :பாக்டரி, பெங்களூர் அளிக்கும் நாமிக்க தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள்: மைசூர் ஸேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்

MCA-SS-60 Tam

குட்மார்னிங் டாக்டர்!

பதினைந்து வயதுச் சிறுவனை அழைத்துக் கொண்டு வந்த செல்வநாயகம் கூறினார்: ''கடந்த நாலைந்து மாதங்களாக, அடிக்கடி தலைவலி வந்து விடுகிறது இவனுக்கு. தலைவலி மாத்திரைகள் ஒன்றிரண்டு கொடுப்பேன். வலி நின்றுவிடும். ஆனால், மறுநாள் அல்லது அதற்கு அடுத்த நாள் மீண்டும் தலை வலிக்கிறது என்று சுருண்டு படுத்து விடுகிறான். பரீட்சை நெருங்குகிறது; இதை இப்படியே நீடிக்க விடக் கூடாது என்று அழைத்து வந்தேன்.''

சிறுவனை நான் சோதித்த பிறகு, அடிக்கடி ஜுரம், ஜலதோஷம், இருமல், காதுவலி ஏதும் வருவதில்லை என்பதையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். பள்ளியில் படிப்பு, விளையாட்டுக்கள் எல்லாவற்றிலுமே சிறந்து விளங்குகிறான் என்பதையும் செல்வநாயகம் சொன்னார். அருகிலிருந்த நாளேடு ஒன்றை எடுத்துக் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். கண்ணுக்கு மிகவும் அருகில் — சுமார் ஆறு அங்குல தூரத்தில் பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு படித்தான். கண் வைத்தியர் ஒருவரிடம் அழைத்துக் கொண்டு போய்க் காண்பிக்கும்படி கூறினேன். ஒரு மாதத்துக்குப் பிறகு செல்வநாயகம் என்னிடம் வந்து பையனுக்கு இப்போது மூக்குக் கண்ணாடி போட்டிருப்பதாகவும் முன்னைப் போல் தலைவலி வருவதில்லை என்றும் கூறினார்.

''நாள்பட்ட தலைவலியைக் குணப்படுத்தி விட முடியுமா?''

தலைவலிக்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை முதலில் கண்டறிந்த பிறகு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். அடிக்கடி அளவுக்கு மீறி உணர்ச்சி வசப்படுகிறவர்களுக்குத் தலைவலி ஏற்படலாம். அலுவலகத்தில் ஏற்படுகிற தொல்லை, தீராத குடும்பப் பிரச்னைகள், நெரிசல் மிகுந்த பேருந்துகளில் நீண்ட தூரம் தினமும் பிரயாணம் செய்வது, வறுமை இப்படிப் பல காரணங்களால் மன வேதனை மிகுதியாகிக் கோபத்துக்கு உள்ளாகிறவர்களுக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுவதுண்டு. டைபாய்டு ஜுரத்தின் காரணமாகவும் கடுமையான தலைவலி ஏற்படலாம். கன்னத்தில் மூக்கின் இரு பக்கங்களிலும் 'சைனஸ்' உபத்திரவம் இருந்தாலும் தலைவலி ஏற்படலாம். மூல காரணம் என்ன என்பதை அறிந்து அந்த நோய்க்குச் சிகிச்சை செய்தால் தலை வலியும் மறைந்துவிடும்.''

''சிலர் அலுவலகத்துக்கு அல்லது வேறு எங்காவது சென்று விட்டு வீடு திரும்பியதும் தலையைச் சுற்றிக் கைக்குட்டை அல்லது துண்டினால் இறுகக் கட்டி விட்டுப் படுத்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்களே...?''

''அது பெரும்பாலும் 'மைக்ரெய்ன்' தலைவலியாக இருக்கலாம். உடலில் ஓடும் இரத்தத்தில் உள்ள 'மைக்ரெய்ன்' என்ற இரசாயனப் பொருள் இரத்தக் குழாய்கள் சுருங்கவும் விரிவடையவும் செய்வதால் ஏற்படும் இத்தலைவலி, எர்காடமின் டார்ட்டரேட் என்ற மாத்திரைகளுக்குக் கட்டுப்படும். ஆனால் நீண்ட காலம் இந்த மாத்திரைகளைச் சாப்பிடுவதும் நல்லதல்ல.''

''தலைவலியால் உடலுக்கோ உயிருக்கோ அபாயம் ஏற்படக் கூடுமா?''

''வாந்தியுடன் கூடிய தலைவலி தொடர்ந்திருந்தால் உடனே மருத்துவரிடம் செல்வது அவசியம். கண் பார்வை மங்குவதுடன் தலைவலியும் சேர்ந்து கொண்டால், அதில் மூளை சம்பந்தப் பட்டிருக்கக் கூடும். இவ்விரு தலைவலிகளும் உடனடியாகக் கவனிக்கப் படவேண்டியவை. இரத்த அழுத்தம் அதிகமாகித் தலைவலி வரக் கூடும். மூளையில் கட்டி ஏற்படுவதும் தலைவலிக்குக் காரணமாகலாம். நீரழிவு நோயுள்ளவர்களுக்குச் சிறுநீரில் சர்க்கரை மிகுதியாவதும் தலைவலிக்குக் காரணமாகக் கூடும். அடிக்கடி தலைவலி ஏற்படுகிற சிலர் மூளையில் 'டியூமர்' (கட்டி) இருப்பதுதான் தலைவலிக்குக் காரணமாயிருக்கலாம் என்று பீதியடைந்து நேரே நரம்பு — மூளைச் சிகிச்சை மருத்துவரிடம் ஓடிவருகின்றனர். முதலில் குடும்ப மருத்துவரிடம் காட்டி அவரது யோசனைக் கிணங்கச் சிகிச்சை செய்து கொள்வது உசிதம். சாப்பிடும்போதும், முக க்ஷவரம் செய்து கொள்ளும்பொழுதும், பேசும்பொழுதும்கூட சிலருக்குக் கடினமான வலி ஏற்படலாம். அவ்வமயம் நோயாளி வலி பொறுக்க முடியாமல் இரு கன்னங்களையும் அழுத்திப் பிடித்துக் கொள்வதுண்டு. முகத்தின் கீழ்ப் பகுதியிலிருந்தே வலி இருக்கும். இது 'ட்ரைஜெமினல் நியூரால்ஜியா' (Trigeminal Neuralgia) எனப்படும். வலியுள்ள பகுதியில் புதிய கட்டி ஏதாவது வளர்கிறதா என்பதைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.''

''தலைவலி வரும்போது தலைவலி மாத்திரைகள் சாப்பிடுவதால் உடலுக்குத் தீங்கு ஏற்படுமோ?''

''எப்போதாகிலும் அபூர்வமாகச் சாப்பிட்டால் குற்றமில்லை. அடிக்கடி சாப்பிடுவது கெடுதல் விளைவிக்கும். அதிலுள்ள 'பாராஸெடமால்' 'ஃபெனஸிடின்' — இவை சிறுநீரகத்தை நாளடைவில் பாதிக்கும். தலைவலிகளுள் பெரும்பாலானவை மருத்துவர்கள் கொடுக்கும் எளிய மாத்திரைகளால் குணமாகி விடும். நோயாளிகள் தாங்களாகவே மருந்துகளைச் சாப்பிடுவது நல்லதல்ல.''

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஸ்ரீநிவாஸ் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.





இரண்டும் அவளே!

டி.கே.டி.துரைராசன்

நிலைமை சரியில்லை.

அதாவது ருக்மிணியின் நடவடிக்கைகள் சரியில்லை.

ராஜு ஆபீசுக்குக் கிளம்பிப் போகிறான் என்றால், எல்லா வேலைகளையும் தள்ளி வைத்து விட்டு அவன் அருகிலேயே இருப்பாள் ருக்மிணி. சட்டை — பாண்ட் — கைக்குட்டை எடுத்துக் கொடுப்பாள். செலவுக்குப் பணம் தருவாள். லெதர் பாக்கில் டிபன் பாக்ஸைக் கச்சிதமாக வைத்துக் கொடுப்பாள். பிறகு வாசற்படி வரை வந்து வழி அனுப்புவாள்.

ஆனால் அன்று....?

''ருக்மிணி ... எனக்கு ஆபீசுக்கு மணியாச்சு....'' என்று குரல் கொடுத்தான் ராஜு.

பதில் இல்லை. சமையலறையிலிருந்து ருக்மிணி வெளியில் வரவில்லை.

''ருக்மிணி....'' என்றான் மீண்டும்.

''போய்ட்டு வாங்களேன்....'' என்று குரல் மட்டும் வந்தது. ருக்மிணி வரவில்லை.

ராஜு யூகித்துக் கொண்டான். — மனைவியின் மனத்தில் ஒரு புயல் உருவாகிறது என்று. ஆனால் அந்தப் புயல் அவன் மீது வீசாது. அவன் போன பிறகு அவனுடைய அம்மா மீது வீசும்.

ராஜு சமையலறைக்கு வந்தான். ருக்மிணி, எந்த வேலையும் செய்யாமல், எங்கோ வெறித்துப் பார்த்தபடி சும்மா உட்கார்ந்திருந்தாள்.

கணவன் வந்து நிற்பது தெரிந்து, ஒரு விநாடி அவனைப் பார்த்துவிட்டு, மறுவிநாடி பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

''என்ன விஷயம்? ஏன் ஒரு மாதிரி இருக்கே....?'' என்று அவள் அருகில் வந்து நின்றான் அவன்.

ருக்மிணி மௌனமாய் இருந்தாள். அதாவது எதையோ சொல்ல வேண்டும் என்ற உள்ளத்தின் துடிப்பை—உதடுகளின் தவிப்பை அடக்கிக் கொண்டு மௌனம் சாதித்தாள்.

''நேற்று சாயந்திரம் நடந்த தகராறு நேற்றோடு போச்சு. அதையே ஏன் நினைச்சிட்டு இருக்கே? இன்னும் ஒரு வாரமோ, பத்து நாளோ தான் அம்மா இங்கே இருப்பாங்க. அதுக்கப்புறம் மதுரைக்குப் போயிடுவாங்க. அதுவரைக்கும் உன்னாலே அமைதியா இருக்க முடியாதா?'' என்று கேட்டபடியே அவள் அருகில் உட்காருவதற்காக அவன் குனிந்த பொழுது —

அவள் 'விசுக்'கென்று எழுந்து நின்று கொண்டாள்.

''அமைதியா இல்லாமல் அமர்க்களமா பண்ணிட்டிருக்கேன்?'' என்று சீறினாள் அவள்.

அவனுக்கு உள்ளூற கோபம் வந்தது. ஆனால் வெளியில் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்போடு சிரிப்பாக —

''இதோ பார். கோபம் அதிகமாக அதிகமாக ஆயுள் குறையும்னு சொல்லியிருக்காங்க. உனக்கு இப்போது முப்பது வயசுக்கு மேலே இருக்குமில்லையா....?'' என்று கேட்டபடி அவள் கையைப் பற்றினான்.

ருக்மிணி அதை உதறி விட்டாள். தொடர்ந்து — ''முதல்லே உங்க அம்மாவை மதுரைக்கு அனுப்புங்க....'' என்றாள்.

''அதான் சொன்னேனே — ஒரு வாரம் பத்து நாட்களில் போகப் போறாங்கன்னு...''

''அதென்ன ஒருவாரம் பத்து நாள்....? காலண்டர் கணக்கு. இப்பவே அனுப்பினா என்ன?''

ஆம். அது காலண்டர் கணக்குதான். விக்ரமாதித்த மகாராஜா நாடாறு மாதம் — காடாறு மாதம் என்று வாழ்ந்தாலும்— இரண்டு இடங்கள். ஆனால் ராஜுவின் தாயாருக்கோ மூன்று இடங்கள்.

வருஷத்தில் முதல் நான்கு மாதங்கள் சென்னையில் ராஜுவிடம் இருப்பாள். அவன் மூத்தவன். அடுத்த நான்கு மாதங்கள் மதுரையில் இரண்டாவது மகன் வீட்டில் வாசம். கடைசி நான்கு மாதங்கள் பெங்களூரில் மூன்றாவது மகனுடைய பராமரிப்பு.

இன்று நேற்றல்ல — கடந்த மூன்று வருடங்களாக இந்த நியதிதான்.

ருக்மிணி, அதை ஒரு நியதியாக மட்டும் நினைத்திருக்கவில்லை. ஒரு நியமமாகவே கருதினாள். அப்படிக் கருதி, அத்தை வந்து தங்கியிருக்கும் நான்கு மாதங்களும் பயபக்தியோடு பராமரித்து வந்தாள்.

அப்படியிருந்தவளுக்கு இப்போது மட்டும் என்ன வந்தது? ஏன் அடிக்கடி என் தாயாரோடு சண்டை போடுகிறாள்?' — இதுதான் ராஜுவுக்குப் புரியவில்லை.

''சரி....சரி.... உன்னோடு பேசிக்கிட்டிருக்க எனக்கு நேரமில்லை. ஆபீசுக்கு டயமாச்சு. நீ கோபமாக இங்கேயே உட்கார்ந்திரு...'' என்று சொல்லி விட்டுத் திரும்பிய பொழுது—

''இனிமேல் உங்க அம்மாவை உங்கரெண்டு தம்பிமார் வீட்டிலேயே இருந்துக்கச் சொல்லுங்க. நாம வேண்டுமானால் பணம் அனுப்பி விடுவோம்'' என்று ருக்மிணி சொல்லவுமே—

ராஜு 'டக்'கென்று நின்று விட்டான். அது, அவன் சற்றும் எதிர்பாராத வார்த்தைகள். அந்தத் திகைப்பு சிறிது நேரம் அவனை ஒன்றும் பேச விடாமல் அவளையே முறைத்துப் பார்க்கும்படி செய்து விட்டது. அந்தப் பார்வையில் ருக்மிணிக்குச் சற்று பயம் தட்டியது. கணவனுக்குக் கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

''சரி....சரி... நீங்க ஆபீசுக்குப் புறப்படுங்க'' என்று சொல்லி விட்டு வேகமாக வந்து சட்டை — பேண்ட் எடுத்துக் கொடுத்தாள். செலவுக்குப் பணம் தந்தாள். லெதர் பாக்கில் டிபன்பாக்ஸைக் கச்சிதமாகவைத்துக்

கொடுத்தாள். பிறகு வாசற்படி வரை வந்து கணவனை வழியனுப்பி வைத்தாள்.

அந்த நேரத்துக்கு ருக்மிணியை அடக்கி விட்டதில் ராஜுவுக்கு ஒன்றும் பெருமை இல்லை. ஏனெனில் மீண்டும் அவள் அந்த வார்த்தையைச் சொல்ல மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?

'பணம் அனுப்பி விடலாம்' என்று இப்போது சொல்லும் ருக்மிணி — இன்னும் ஓரிரு ஆண்டுகள் கழித்துப் 'பணம் கூட அனுப்ப வேண்டாம்' என்று சொல்ல மாட்டாள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நேற்று இரவு என்ன நடந்தது? ராஜு இப்போது நினைத்துப் பார்த்தான்.

அவன் அன்றைய செய்தித் தாள்களைப் படித்துக் கொண்டிருந்தான். மூன்று குழந்தைகளும் வெவ்வேறு இடத்தில் அமர்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் உண்மையிலேயே படித்தார்களோ — அல்லது படிப்பது போல் நடித்தார்களோ தெரியாது.... ருக்மிணி அடுக்களையிலிருந்து வேகமாக வந்து மூன்று குழந்தைகளின் முதுகிலும் நன்றாகத் தீட்டினாள்.

சரியான அடிதான். அது மட்டுமா?

''படிங்க. படிங்கன்னு இந்தச் சனியன்கள் கிட்டே மாரடிக்கிறதே எனக்குப் பெரிசாப் போச்சு....'' என்றும் கத்தினாள்.

கூடத்தில் அமர்ந்திருந்தாள் ராஜுவின் தாய். குழந்தைகள் இப்படி அடிபட்டதைக் காணப் பொறுக்கவில்லை அவளுக்கு.

''ஏன்டி இப்படிப் பிசாசு மாதிரி அடிக்கறே....'' என்று அவள் ருக்மிணியைக் கண்டிக்க —

''நான் பிசாசுதான். என் குழந்தைகளை நான் என்னவோ செய்வேன்'' என்று ருக்மிணி பதிலுக்குச் சீற —

தகராறு வளர்ந்து — சமாதானம் செய்வதற்குள் ராஜுவுக்குப் 'போதும் போதும்' என்று ஆகிவிட்டது.

மனைவி — அம்மா — இந்த இருவரில் யார் மேல் தவறு?


நிச்சயம் தன் அம்மா மீது இல்லை என்று நினைத்தான் ராஜு. அவனுக்குத் தெரியும் — பேரக்குழந்தைகள் மேலே அவள் காட்டும் அன்பும், பரிவும். குழந்தைகளை அடிப்பதைக் கண்டித்ததும் கூட அந்த அடிப்படையில் தான். அதை உணர்ந்து கொள்ளாமல் ருக்மிணி இப்படியா ஒரு தகராறை உருவாக்க வேண்டும்?

ராஜுவுக்கு இப்போது தெரிந்தது — ருக்மிணி தகராறுகளை உருவாக்குகிறாள் என்று. அதற்குக் காரணம் — அத்தை இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை.

இது, இப்படியே தொடர்ந்து நடக்க அனுமதிப்பதா?

'இல்லை...இதனைப் பொறுப்பதில்லை.மாலையில் அலுவலகத்திலிருந்து திரும்பியதும் ருக்மிணியைக் கண்டித்துத் திருத்த வேண்டும்!





அழுவதற்கு ஓர் அறை!

ஆஸ்பத்திரியில் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய உறவினர்கள் போடும் ஓலம் மற்ற நோயாளிகளுக்குக் கிலியை உண்டாக்கி விடுகிறது. இதைத் தவிர்ப்பதற்காகக் கல்கத்தாவில் உள்ள ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரியிலேயே ஓர் அறையை அழுவதற்காக என்று ஒதுக்கி விட்டார்கள்!

ஹிந்துஸ்தான் டைம்ஸ்-ராகமாலிகா

அன்று மாலை....

வழக்கமாக 'அப்பா' என்று கூச்சல் போட்டு வரவேற்கும்குழந்தைகளைக்காணோம். ருக்மிணி மட்டும்தான் இருந்தாள்.

''பசங்க எங்கே?'' என்று கேட்டான் ராஜு, ருக்மிணியின் முகத்தைப் பார்க்காமல்.

''கோயிலுக்குப் போயிருக்காங்க'' என்றாள் ருக்மிணி. அவளும் கணவன் முகத்தைப் பார்க்கவில்லை.

இருவர் மனத்திலும் சுமை.

''தனியாகவா போயிருக்காங்க?''

''அத்தைகூட அனுப்பி வச்சேன்.''

'அத்தை' என்ற வார்த்தையை அதற்குரிய மரியாதையோடு சொன்னாள் ருக்மிணி.

ராஜுவின் மனம் ஒரு விநாடி நெகிழ்ந்து — மறுவிநாடி விறைத்து நின்றது.

''ருக்மிணி வருஷத்திலே நாலு மாசம் எங்க அம்மா இங்கே இருக்கிறதிலே உனக்கு என்ன கஷ்டம் இருக்கு?'' என்று நேரடியாகப் பிரச்னைக்கு வந்தான்.

ருக்மிணி பதில் பேசவில்லை. ''காப்பி போடட்டுமா?'' என்று கேட்டாள்.

''காப்பி இருக்கட்டும். முதலில் நான் கேட்டதற்குப் பதில் சொல்லு.''

ருக்மிணி தலையைக் குனிந்து கொண்டாள். ராஜு தொடர்ந்தான்.

''எங்க அம்மாவினாலே உனக்கு ஏதாவது சிரமம் இருக்கா? அது வேண்டும் — இது வேண்டும் என்று கேட்கிறாங்களா? ஏதோ நீ ஊத்தற கஞ்சியைக் குடிச்சிட்டுப் பேசாமல் இருக்காங்க. அவங்களுக்குத் தேவையானது என்ன? குழந்தைகளோடும்—பேரக் குழந்தைகளோடும் சந்தோஷமா இருந்துட்டு கண்ணை மூடணும்ங்கிறதுதான். அதைக் கூட நீ அனுமதிக்கலேன்னா....?''

ராஜுவால் தொடர்ந்து பேச முடியவில்லை. அத்துடன் உணர்ச்சியின் மேலீடு.

குனிந்த தலையை ருக்மிணி இன்னும் நிமிர்த்தவில்லை. நிமிர்த்தாமலேயே ''அத்தை இருக்கிறதிலே எனக்கொன்றும் கஷ்டம் இல்லே...'' என்று பாதியில் நிறுத்தினாள்.

''ஆறு என்ன?''

''அதை எப்படிச் சொல்றதுன்னு எனக்கு விளங்கலே. அப்படியே சொன்னாலும் உங்களாலே புரிஞ்சுக்க முடியுமான்னும் எனக்குத் தெரியலே.''

''நான்சென்ஸ்... அப்படியென்ன சொல்ல முடியாத — சொன்னாலும் விளங்காத மகா பெரிய காரணம்?''

''எனக்குக் கூட அது நான்சென்ஸாகத் தான் தோணுது. ஏன்னு அவங்க மேல் எனக்குப் பொறாமை ஏற்படுறதையும், அவரைப் பார்க்கும்போதெல்லாம் என் மனசு பலவீனப்படுவதையும் யாரும் ஒத்துக்க மாட்டாங்க'' என்றாள் ருக்மிணி.

''பொறாமை ... பலவீனம்... என்ன சொல்றே?'' என்று ருக்மிணியை வினாக் குறியாகப் பார்த்தான் ராஜு.

ருக்மிணியும் இப்போது தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

''என்னை மாதிரி அவங்களும் மூன்று குழந்தைகளுக்குத் தாய். அந்த மூன்று குழந்தைகளையும் வளர்த்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்துட்டாங்க. அதாவது வாழ்க்கைப் போராட்டத்திலே ஜெயிச்சுட்டாங்க. அந்தச் சந்தோஷத்திலே அவங்க நிம்மதியாக இருக்கிறதைப் பார்க்கிற போது என்னை அறியாமலேயே ஒரு பொறாமையும், நாமும் நம்முடைய மூன்று குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி வாழ்க்கைப் போராட்டத்தில் ஜெயிப்போமோ மாட்டோமோங்கிற பலவீனமும் ஏற்பட்டு....'' என்று சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்காமல் ருக்மிணி தவித்தபொழுது—

மயிரிழையினும் மிக நுட்பமான அந்த மனோதத்துவம் ராஜுவின் கண்களுக்குப் பூதாகாரமாகத் தெரிந்தது.

'மை காட்! இதற்காகவா ருக்மிணி இப்படி நடந்து கொள்கிறாள்? ஒருவேளை பல பெண்கள் தங்கள் அத்தைமார்களுடன் சண்டைபோடுவதற்கு இதுதான் காரணமோ? இதென்ன பைத்தியக்காரத்தனம்!

''போ பைத்தியம்!'' என்றான் ராஜு. ''எங்க அம்மாவைப் பார்க்கறப்போ உனக்குப் பலவீனம் ஏற்படுது. ஆனால் எனக்கு பலம் உண்டாகுது. ஏன்னு நம்ம குழந்தைகளை நல்ல விதமாக வளர்த்து ஆளாக்க முடியுமோங்கிற கவலை எனக்கும் ஏற்படும். அந்தச் சமயங்களிலே என் அம்மாவை நினைப்பேன். ஒரு பெண் கல்யாணமான பன்னிரண்டு வருஷங்களில் தன் கணவனை இழந்துட்டாலும்—தன்னந் தனியாகப் பாடுபட்டுத் தன்னுடைய மூன்று குழந்தைகளையும் ஆளாக்கி யிருக்கும்போது நாம் — ஆண் — நம்மால் ஏன் முடியாதுன்னு நினைக்கும்போது என் மனத்தில் எவ்வளவு தைரியம் ஏற்படுது. தெரியுமா? என்னுடைய அம்மா வேறு.... உன்னுடைய அத்தை வேறு இல்லே. இரண்டும் ஒருத்தர்தான். எனக்கு மனோ பலத்தைத் தரக்கூடிய இந்த மெலிந்த உருவம் உனக்கு மட்டும் எப்படிப் பலவீனத்தைத் தரும்? என்னாலே புரிஞ்சுக்கவே முடியலே....'' என்று சொல்லி விட்டு ராஜு மெதுவாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு, தன்னுடைய அர்த்தமில்லாத பலவீன உணர்ச்சியைப் பார்த்து உலகம் சிரிக்கிற சிரிப்பாக ருக்மிணிக்குத் தோன்றியது.

தெய்வங்களின் இருப்பிடத்தைக் காண வருக...



பத்ரிநாத், கேதார்நாத்.

உன்னதமான சிகரங்களின் இடையே உயர்ந்த பகுதி. நிசப்தமான மலைக்காற்றில் தவழ்ந்துவரும் ஆலயமணி ஓசை. பக்தர்களின் நன்றிப் பெருக்கான பிரார்த்தனைகளின் ஒலி... நம்பமுடியாத பரவசக் காட்சிகளைக் காணும்போது பத்ரிநாத், கேதார்நாத்தின் வசீகரத் தன்மையையும் மறைந்து கிடக்கும் பெருமையையும் நீங்கள் உணர முடியும்.

ரிஷிகங்கா, அலகாந்தா நதிகளின் சங்கமம். அருகே மஹாவிஷ்ணு, சிவபிரானின் ஆலயங்கள், வசுதாரா அருவியின் இடியோசை. தப்த குண்டத்தின் உஷ்ண நீர் ஊற்று. மலர் சூழ்ந்த மந்தாகினிப் பள்ளத்தாக்கு... இத்தகைய இனிய சூழ்நிலை "பூலோகத்திலும் சொர்க்கம் உண்டோ" என்று எண்ண வைக்கும்.

பத்ரிநாத், கேதார்நாத்தை சாலை மார்க்கமாக அடையலாம்.* ரிஷிகேசத்திலிருந்து நேர் பஸ்வசதி. நவீன வசதிகள் கொண்ட தங்கும் இல்லங்கள், விருந்தினர் விடுதிகள், பிரயாணிகள் மாளிகைகள். வருகை புரிய ஏற்ற மாதங்கள் மே முதல் அக்டோபர் வரை.

தெய்வங்களின் உறைவிடத்தின் உயர்வை உணர வருக. காணக் கிடைக்காத காட்சிகளைக் காணலாம். புத்துணர்ச்சி பெறலாம். என்றும் நினைவிலிருக்கக் கூடிய புதிய அனுபவங்களைப் பெறலாம்.

*ஜெனரல் டூரிஸ்ட் ப்யூரோ
யதாயத் பஸ் ஸ்டாண்ட்
ரிஷிகேஷ் (உ. பி.)

உ. பி. டூரிஸ்ட் ப்யூரோ
"சந்த்ர லோக"
36, ஜன்பத்
புது டில்லி 110 001

UPT உ. பி. டூரிஸம்
21, விதான் சபா மார்க்
லக்னௌ 226 001

FDS/UPT-35 TAM

பாக்கியசாலி யார்?



சமீபத்தில் மதுரை மீனாட்சி கோயிலுக்கு அன்னையைத் தரிசிக்கப் போயிருந்தேன். காலை ஆறு மணிக்குக் கர்ப்பக் கிரகம் முழுதும் மல்லிகைப்பூ தோரணங்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தது. அம்பாள் வெண் பட்டு உடுத்தி, முத்து நகைகளால் தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்தாள். இந்தக் காலத்துப் பெண்களும் 'மாட்சிங்காக உடுத்துகிறோம்' என்கிறார்களே! அன்னையின் இந்த ''மாட்சிங்'' அவளுக்கே அர்ப்பணம்! உடல் புல்லரித்தது. அன்னையின் அஷ்டோத்திரத்தைக் காலைவேளையில் மோகன ராகத்தில் சொன்னார் பட்டர்.

சுவாமி சன்னிதியில் பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் ரொம்ப ''ஸிம்பிளா''க இருந்தார். பிரமுகர்கள் வந்தால் அவர்களுக்கு மாலை மரியாதை செய்வதற்குக் கூடப் பெருமானின் கழுத்தில் மாலை இல்லாமல் ஒரு வில்வ மாலையோடுதான் இருப்பாராம். அம்பாள்தான் உலக பாரத்தோடு மலர் மாலைகளையும் சுமந்து கொண்டிருக்கிறாளே! அவைகளில் இரண்டைக் கொண்டு வந்து ஐயன் கழுத்தில் போட்டுவிட்டுப் பிறகு பிரமுகர்களுக்கு எடுத்துக் கொடுப்பார்களாம். அம்பாளுக்கு நைவேத்தியம் ஆன பிறகுதான் ஸ்வாமிக்குச் செய்கிறார்கள். ஆறு கால பூஜைகளும் கிரமமாக அம்பாளுக்குத்தான் முதலிடம்.


மதுரைக் கோயிலிலுள்ள எத்தனையோ சிற்பங்களில் மீனாட்சி கல்யாணம்தான் மிகப் பிரசித்தி. நாற்பது வருஷங்களுக்கு மேலாக அன்னைக்குத் தொண்டு செய்து கொண்டிருக்

மகளிர் பகுதி

அழகும் ஆரோக்கியமும்

உடற்பயிற்சியை நாள்தோறும் அவசியம் பெண்கள் செய்து வரவேண்டும். வீட்டில் இருந்தபடியே சில உடற்பயிற்சிகள் செய்யலாம்.

கன்னம் பகுதி: கன்னத்தில் உள்ள சதையைப் 'பலூன்' ஊதுவது போல் ஊத வேண்டும். அப்பொழுது கன்னத்தில் உள்ள தளர்ந்த சதைகள் குறைந்து சற்றுப் பருத்து அழகாகத் தோன்றும்.



கழுத்து: கழுத்து பாகத்தை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் அசைத்து இருபது தடவை செய்ய வேண்டும். கழுத்து பாகத்திலுள்ள வெற்றுச் சதைகள் குறைந்து எடுப்பாக இருக்கும்.

மார்பு: கைகள் இரண்டையும் மார்புக்கு நேராக நீட்டி வைத்து வேகமாக விரிக்க வேண்டும். அப்பொழுது மார்புச் சதைகளுக்குப் பயிற்சி ஏற்பட்டு அழகு அமைப்பைப் பெறும்.

வயிற்றுப் பாகம்: கால்களை மடிக்காமல் நேராக நின்றுகொண்டு முன் பக்கம் வளைந்து நிமிர வேண்

கறை படியாக் காலர்

என் கணவரின் சட்டை இரண்டு நாட்கள் அணிந்தால்கூட காலரின் மடிப்புக்கருகில் கறுப்பாக அழுக்குப் படிந்திருக்கும். துவைக்கும்போது அந்த அழுக்கைப் பிரஷ்ஷால் தேய்த்துத் தோய்த்தால் சட்டைக் காலர் சீக்கிரம் கிழிந்துவிடும். இந்தப் பிரச்னையிலிருந்து விடுபட எனக்கு ஒரு யோசனை தோன்றியது. காலரின் மடிப்புக்கருகில் சிறிது அகலமுள்ள, ஒரு நிறமில்லாத பிளாஸ்டிக் (பாலிதீன்) பேப்பரைக் காலர் நீளத்துக்கு வைத்துத் தைத்துவிட்டால் காலரில் அழுக்கும் படியாது. துவைக்கச் சுலபமாக இருக்கும். காலரும் நீண்ட நாட்களுக்குக் கிழியாமல் இருக்கும். -எஸ். உமாதேவி

கும் திரு தங்கவேல் தேசிகர் இந்தச் சிற்பத்தின் நயங்களை விளக்கினார்: ''தன் தங்கையாக இருந்தாலும் தன் கடைக்கண் பார்வையால் உலகையே உய்விக்கும் அன்னையைத் தாரைவார்த்துக் கொடுக்கும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததே என்று பூரித்துப் போகிறார் மகாவிஷ்ணு. மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் அவர் நிமிர்ந்து நிற்பதைப் பாருங்கள்! அழகும் வசீகரமும் இருந்தாலும் மீனாட்சியின் நிறம் கறுப்பானதால் எவ்வளவு கவலையாக அவருக்கு இதுநாள்வரை இருந்தது! 'அதற்கு என்ன செய்வது! நானே நீலமேக ஸ்யாமளன் தானே! என் தங்கை எப்படித் தாமரைப்பூ நிறத்தைக் கொண்டிருப்பாள்? நல்லவேளை மாப்பிள்ளை சிவந்த ரோஜாவாக வாட்டசாட்டமாகக் கண்ணுக்கு நிறைந்து கிடைத்துவிட்டாரே!' — உலகளந்தவரின் நெஞ்சம் நிறைவால் விம்முகிறது.

''இப்போது ஹாலாஸ்ய சுந்தரரைப் பாருங்கள். மாப்பிள்ளை என்று ஒரு ஸ்தானம் வந்துவிட்டால் அவன் ஒல்லிக் குச்சியாக இருந்தாலும் விறைப்பாக நிற்பான். நம்மவரோ சுந்தர புருஷன், உமையவளையே கைப்பிடித்துக் கொண்டிருக்கும் பெருமை வேறு. மகாவிஷ்ணு பவ்யமாகத் தங்கக்கிண்டியிலிருந்து நீரைத் தாரை வார்க்கிறார். ஐயனுக்கு அம்மையின் நிறம் கண்ணுக்கே தெரியவில்லை. ஜன்மம் ஜன்மமாகத் தொடர்ந்து வருகிறவளை இப்போதும் கைப்பிடித்து விட்டோம் என்ற கர்வம் முகத்தில் பளிச்சிடுகிறது. அவள் கடைக்கண் பார்வை முழுதும் தன்னிடம் இருப்பதை அறிந்து அளவிலா ஆனந்தமும் முகத்தில் கரை புரள்கிறது.

''அன்னையின் அழகிய வதனத்தைப் பாருங்கள். உலக மாதாவான அவள் இந்த நிமிஷத்தில் கல்யாணப் பெண்தானே! அதற்குரிய நாணம் முகமெல்லாம் பளிச்சிடுகிறது. கண் நிறைந்தவரை, காலமெல்லாம் நினைந்தவரைக் கைப்பிடித்த சந்தோஷம். கையைப் பிடிக்கத்தானே அண்ணா சொன்னார். இப்படி அழுத்தவா சொன்னார்? வெட்கம் குப்பென்று முகத்தில் படர நாணுகிறாள்.

'' 'தன்னைவிட அதிர்ஷ்டசாலி யார்?' என்று மூவரும் நினைக்கிறார்கள்!''

பேஷ்கார் இப்படிக் கூறியபோதிலும் எனக்கென்னவோ அந்த மூவரையும்விட அச் சிற்பத்தை இந்த ஜன்மாவில் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கும் நாம்தான் பாக்கியசாலிகள் என்றே தோன்றியது! — ராமப்பிரியா

சமையல் டிப்ஸ்

○ உருக்கிய நெய் அல்லது சூடான திரவம் எதையும் பாட்டிலில் உடனே ஊற்றினால் பாட்டில் உடைந்துவிடும் என்ற கவலை வேண்டாம். மரப் பலகையின் மேல் பாட்டில்களை வைத்து எவ்வளவு சூடாக ஊற்றினாலும் உடையாது. பலகையில் ஈரம் இருக்கக்கூடாது. பாட்டில்கள் ஒன்றுடன் ஒன்று படாது வைத்துக் கொள்ள வேண்டும்.

○ உருளைக் கிழங்கைச் சீவி ஒரு வெள்ளைத் துணியில் கட்டிக் கொதிக்கும் தண்ணீரில் ஐந்து நிமிடம் அமிழ்த்தி எடுத்து விட்டுக் குளிர்ந்த உப்புத் தண்ணீரில் போட்டுவிட்டு பின்பு வறுத்தால் வெள்ளை வெளேரென்று கரகரப்பாக இருக்கும். - சேது ரத்தினம்



டும். இப்படி இருபத்தைந்து தடவைகள் செய்தால் போதுமானது. வயிற்றுப் பகுதியில் உள்ள ஊளைச் சதைகள் குறைந்து அழகாக இருக்கும்.

தொடை: இதற்குச் சிறந்த பயிற்சி கயிறு விளையாட்டு என்கிற ஸ்கிப்பிங் விளையாட்டை ஒரு நாளைக்கு ஐம்பது தடவைகள் செய்தால் போதுமானது.

இந்த ஐந்து உடற்பயிற்சிகளையும் தாள் தோறும் இருபது நிமிஷங்கள்செய்து வந்தால் உடல் அழகாகவும் வளமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். பெண்கள் செய்ய ஆரம்பித்தவுடனே குழந்தைகளும் செய்ய ஆரம்பிப்பார்கள். அந்தக் குடும்பமே ஆரோக்கியமாக இருக்கும்.

மதுராந்தக சகுந்தலா
பூபதி உடல்பயிற்சி
ஆசிரியை


× ×

''ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது'', ''மஞ்சள் முகமே வருக'', ''பச்சை விளக்கு'', ''நீல வானம்'', ''சிவந்த மண்'', ''கறுப்புப் பணம்'' படங்களிலிருந்து நகைச்சுவைக் காட்சிகளை எடுத்து ஒரு டெக்னிக் கலர்ப் படம் வெளியிடலாம்னு இருக்கேன். அதுக்கு என்ன தலைப்புக் கொடுக்கலாம்?''

''கை கொட்டிச் சிரிப் பார்கள்!'' - காந்தி



சேரமான் காதலி



அத்தியாயம் 18

குலதர்ம பத்தினி

யூஜியானாவை, யூதர்கள் வெகு ஆரவாரத்தோடு வரவேற்றார்கள். அவளது பெண் வாரிசு ஓர் இளவரசிக்குரிய மரியாதையோடு வரவேற்கப்பட்டது.

யூதப் பெண்களெல்லாம் அந்தக் குழந்தையை ஆவலோடும், பாசத்தோடும் தூக்கிக் கொண்டார்கள்.

''அதே கண்கள்; அதே இதழ்; அதே தோற்றம்'' என்று வர்ணித்தார்கள்.

சற்றும் விருப்பமில்லாத நிலையில் யூஜியானா வந்தாள் என்றாலும், அவள் வரவேற்கப்பட்ட சூழ்நிலை அவளை மெய்மறக்கச் செய்தது.

இப்போதுதான் திருவஞ்சைக் களத்தை அவள் உரிமையோடு பார்க்கிறாள்.

தான் ஆசைப்பட்டது பலிக்கப்போகிறது என்கிற உணர்ச்சியோடு யோகோவா இருந்தாலும், ஓர் அச்சமும் அவர் மனத்துக்குள் இருந்தது.

'ராஜாங்கத்தில் நுழைகிறோம்; நம் இனம் ஒரு சிறுபான்மை; ஆத்திரப்பட்டு யாரும் ஏதேனும் செய்து விட்டால் இஸ்ரவேலில் இருந்து கப்பற்படையா வரப் போகிறது?' என்றே அவர் பயந்தார். பிரதானமாக நாராயண நம்பூதிரியைப் பற்றிய பயமே அவருக்கு அதிகமாக இருந்தது.

அராபியர்களோ, சலீமாவை ராணியாக்கிப் பார்க்க விரும்புகிறார்கள் என்றாலும், யூஜியானா அந்த இடத்தைப் பெற முயன்றால் ஏற்படக்கூடிய நியாயமான சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று அஞ்சினார்கள்.

சலீமாவோடு சேரமான் உடலுறவு கொண்டு விட்டதால், தங்கள் முடிவை வற்புறுத்தாமல் இருக்க அவர்களால் முடியவில்லை.

புதிய உரிமைக்குப் போராடும் இந்த இரண்டு பேர்தான் கேரளத்து மக்கள் கண்களிலே தெரிந்தார்களே தவிர, பாரம்பரிய உரிமைக்காரி, பட்டத்து ராணி, எத்தகைய கேள்விக் குறிக்கும் அப்பாற்பட்டவள்—பத்மாவதி என்னும் பரிதாபத்துக்குரிய தங்கச் சிலை — அவளைப் பற்றி யார் சிந்தித்தார்கள்?

நாராயண நம்பூதிரி சிந்தித்தார். ஆம்; அவர் மட்டுமே சிந்தித்தார். அதற்காகவும்தான் அவர் மன்னரின் காதலுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினார்.

ஆனால் அவளைக் காப்பாற்றுவதும் தன் நோக்கங்களில் ஒன்று என்று நம்பினாரோ, அவள், அந்தப் பத்மாவதி இந்தப் போராட்டத்துக்குத் தயாராக இல்லை.

மயில், சிறகை விரிப்பதிலேதான் தன் அழகு இருக்கிறது என்று கருதினால், அதை மூடி வைத்து அழகு பார்க்க இறைவன் கூட விரும்ப மாட்டான்.

தன் நாயகனது மனோதர்மங்களுக்குத் தான் குறுக்கே நிற்பது மேலும் தன் மீது வெறுப்பை வளர்க்குமேயன்றி, காதலை வளர்க்காது என்பதை அவள் அறிவாள்.

நம்பூதிரியிடம் வாதாடிப் பயனில்லை என்பதால், திருவிதாங்கோட்டை விட்டு அவர் புறப்படும் வரை அவள் மார்த்தாண்டவர்மனின் முன்னால் வரவில்லை. அந்தப்புரத்தில் அவள் விம்மினாள்; மெல்லிளங்கோதை அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

திருவிதாங்கோட்டுச் சிறைச்சாலையில் இருந்து, ஒரு சரியான முடிவுக்கு வரும் வரை சேரமானை விடுவிப்பதில்லை என்ற உறுதியை மார்த்தாண்ட வர்மனிடம் பெற்றுக் கொண்டு அடுத்த அர்த்த சாஸ்திரத்தை எழுத நம்பூதிரி திருவஞ்சைக் களத்தை நோக்கிப் புறப்பட்டார்.

கண்ணதாசன்

அவர் சென்று விட்டார் என்ற செய்தி அறிந்து அரண்மனை பூஜை மண்டபத்தில் அமர்ந்திருந்த தம்பி மார்த்தாண்டவர்மனை நோக்கித் தயங்கித் தயங்கி வந்தாள் பத்மாவதி; கூடவே தளிர்நடை போட்டு வந்தாள் மெல்லிளங்கோதை.

''தம்பி?'' என்றவள் அழைக்கவும், மார்த்தாண்டவர்மன் பூஜை மணியை ஒலிக்கவும் சரியாக இருந்தது.

இந்தக் குரலை அவன் கேட்டான்; அந்த ஒலியை அவள் கேட்டாள்.

''இந்த ஆலயத்து மணி எப்போதும் ஒலிக்க வேண்டும் என்று நீ ஆசைப்படுவது போல், இந்த மாங்கல்ய மணியும் ஒலிக்க வேண்டும் என்று நீ விரும்பவில்லையா தம்பி?'' என்று கேட்டாள் பத்மாவதி.

''உன் மாங்கல்யத்துக்கு ஒருநாளும் ஆபத்தில்லை'' என்றான் மார்த்தாண்டவர்மன்.

''என் கண்ணீர்த் துளிகள் தினந்தோறும் அதன்மீது விழுந்து சிதறிக் கொண்டிருக்கும்போது, அது ஆபத்தில்லாமல் இருந்துதான் என்ன பயன்?'' என்று கேட்டாள் பத்மாவதி.

''கண்ணீர் நாம் முயன்றால் நிறுத்தக் கூடிய ஒன்றுதான். தனி மனிதரின் கண்ணீர் அவர்கள் மனத்தையே மையமாகக் கொண்டு ஊற்றெடுக்கிறது. ஆனால் ஒரு நாட்டின் கண்ணீர், யார் அந்த மணி மகுடத்துக்கு உரியவரோ அவராலே உருவாக்கப்படுகிறது. அவரை மக்கள் திருத்த வேண்டும், அல்லது மகேசன் திருத்த வேண்டும். அவர் திருந்தி விட்டால் மக்களின் கண்ணீர் நின்று விடும். உன் கண்ணீரும் கூட'' என்றான் மார்த்தாண்டவர்மன்.

''தம்பியின் தத்துவம் எனக்கு விளங்குகிறது. ஆனால் என் தலைவனின் விருப்பம் எதுவோ, அதுவே என் விருப்பமாக இருக்க வேண்டும் என்று ஆகி விட்ட பிறகு, நான் மக்களில் ஒருத்தியாக இருக்க முடியாது. இது திருத்தக்கூடிய ஒன்றல்ல. யூஜியானுவை அவரிடம் இருந்து பிரிப்பதில் நீங்கள் வெற்றி பெற்று விட்டதாகக் கருதினீர்கள். ஆனால் அவரோ அதையே ஒரு வஞ்சகமாக எடுத்துக் கொண்டு விட்டார். இந்தக் காதலுக்காக அவர் எதையும் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார். அது மரணமாக இருந்து விட்டால், கால காலங்களுக்குக் கலங்கப் போவது நீயோ, தம்பிரான் சுவாமியோ அல்ல'' என்றாள் பத்மாவதி.

''இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்...?'' என்று கேட்டான் மார்த்தாண்ட வர்மன்.


''அவரை, அவர் விருப்பம் போல் விட்டு விடச் சொல்கிறேன்...'' என்றாள் பத்மாவதி.

''நாடு கொந்தளிக்கும்!'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''அதை நான் சமாளிக்கிறேன்!'' என்றாள், பத்மாவதி.

''அவ்வளவு அரசியல் துணிவு உனக்கு வந்து விட்டதா...?'' என்று கேட்டான் மார்த்தாண்ட வர்மன்.

''கணவனைப் பிரிந்த பிறகு கையறு நிலையில் கண்ணீர் வடித்து, நான்கு சுவர்களுக்கு நடுவே நடுங்கிக் கிடந்த கண்ணகிதான், கணவனுக்கு ஆபத்து என்றதும் கடும் புலியாக மாறினாள். அந்த மண்ணுக்கும், இந்த மண்ணுக்கும் அதிக



தாரமில்லையே தம்பி...'' என்றாள் பத்மாவதி.

''இதில் தலையிடாமல் இருக்கத்தான் நான் விரும்பினேன். ஆனால் பந்தபாசமும், நாட்டுப் பற்றும், தம்பிரான் சுவாமியின் கட்டளையும் என்னை இதில் சிக்க வைத்தன. எனது லௌகிக விஷயங்களில் கூட நான் அக்கறையைக் குறைத்துக் கொண்டுள்ள நேரம் இது. இதில் ஏன் நான் இவ்வளவு அக்கறை காட்டுகிறேன்...? நாட்டு மக்கள், — உன் மாங்கல்யம் அத்தனைக்கும் நன்மையாக. தம்பிரான் சுவாமிக்காக இதற்கு ஒப்புக் கொண்ட நான், உனக்காகப் பின் வாங்கத் தயார். ஆனால் எதிர்காலத்தில் சமயக் குழப்பங்கள் நேருமானால், அதன் விளைவுகளை நீயும் சேர்ந்துதான் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்!'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''எதையும் ஏற்றுக் கொள்ளத் தயார்'' என்று ஆர்வத்தோடு கூறினாள் பத்மாவதி.


இதுவரையில் வாய் திறக்காத மெல்லிளங்கோதை, ''அவர்களை, அவர்கள் விருப்பப்படி விட்டு விடுங்கள்'' என்றாள்.


அன்புக்குக் கட்டுப்பட்ட வேணாட்டடிகள் தன் இடுப்பில் இருந்த சிறைச்சாலைச் சாவியை எடுத்துப் பத்மாவதி கையில் கொடுத்தபோது, யூஜியானா முன்பு தங்கியிருந்த பழைய மாளிகையின் சாவியை எடுத்து யூஜியானா கையில் கொடுத்தார் நாராயண நம்பூதிரி,

ஆம்; திருவஞ்சைக் களத்துக்கு வந்து சேர்ந்த அவர், யூஜியானாவையும், யோகோவாவையும் மட்டும் அழைத்து வரச் சொல்லி நம்பூதிரிகள் சபையிலேயே அவளை அங்கீகரிப்பது போல் பேசினார்.

''பட்டத்துக்கு ஒரு ராணிதான் இருக்க முடியும்; ஆனால் பக்கத்தில் பல ராணிகள் இருக்கலாம். அவர்களையும், இனம் பார்த்து அங்கீகரிப்பதே நாட்டு நலனுக்கு நல்லது. உங்களை நான் அறிவேன். எந்தச் சிக்கலும் முளைக்காமல் இருக்கவே உங்களை இஸ்ரவேலுக்குக் கப்பலேற்ற ஏற்பாடு செய்தேன். ஆனால் இப்போது முளைத்துள்ள சிக்கல் எங்கள் சமயத்துக்கே விடுக்கப்பட்ட சவாலாக அமைந்து விட்டது. என்னுடைய கணக்கில் புதுச் சிக்கலைத் தீர்க்கும் பொறுப்பு பழைய சிக்கலில்தான் இருக்கிறது. சேரமானின் நன்மையே — சேர நாட்டின் நலனே உன் ஆசையென்றால், இதில் நீ ஒத்துழைக்க வேண்டும்'' என்றார் நம்பூதிரி.

சேர நாட்டின் பழக்க வழக்கங்களை யூஜியானா நன்றாக அறிவாள். அவள்





அவர் போட்ட கையெழுத்து!

சில ஆண்டுகளுக்கு முன் கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதாக வதந்திகள் கிளம்பியபோது சில வியாபாரிகள் நூறு ரூபாய் நோட்டை வாங்கிக் கொள்ளும்போது அந்த நோட்டில் கொடுத்தவரின் கையெழுத்தை வாங்கிக் கொண்டார்கள்.

பெட்ரோல் பங்க் ஒன்றில் ஒருவர் தம் காருக்குப் பெட்ரோல் போட்டுவிட்டு ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தார். பையன் ''உங்கள் கையெழுத்தைப் போட்டுக் கொடுங்கள், ஸார்'' என்று கேட்கவும் அவர் அப்படியே செய்தார். உள்ளே போய் விட்டு அந்த நோட்டோடு பையன் திரும்பினான். பின்னால் பெட்ரோல் பங்க் முதலாளி வந்தார். ''உங்கள் கையெழுத்தைக் கேட்டால் நீங்கள் நோட்டில் உள்ள ரிசர்வ் பாங்க் கவர்னர் கையெழுத்தைப் பார்த்து அப்படியே போட்டுக் கொடுத்து விட்டீர்களே'' என்றார்.

''அந்த நோட்டில் அந்தக் கையெழுத்தைப்போட்டிருப்பதும் நான்தான். நான் ரிசர்வ் பாங்க் கவர்னராக இருந்தபோது வெளியிடப்பட்ட நோட்டு அது'' என்றார், பெட்ரோலுக்குப் பணம் கொடுத்த திரு எச். வி. ஆர். ஐயங்கார்.

-இந்தியன் எக்ஸ்பிரஸ்-பாபு

நம்பூதிரியின் காலில் விழுந்து வணங்கினான். தன் குழந்தையையும் அவர் காலடியில் வைத்தான்.

குழந்தையைத் தூக்காமலேயே அதைப் பார்த்துச் சிரித்த நம்பூதிரி, ''சேர நாட்டில் ஒரு புதிய வம்சத்துக்கு அடிக்கல் இது. எதிர்காலத்தில் ஒரு கலப்பு இனம் இங்கே உருவாகப் போகிறது; அதை நான் வரவேற்கிறேன். நாங்கள் நாங்களாகவே இருந்து கொண்டு, எங்கள் ரத்தத்தில் ஓர் இனம் தோன்றுமானால், அதை அங்கீகரிப்பதில் எங்களுக்கு மறுப்பில்லை. ஆனால் எங்கள் கழுத்தில் வேறொரு குறியை அணிந்து கொள்ள நாங்கள் விரும்ப மாட்டோம். நீங்களும் அதை வற்புறுத்த மாட்டீர்கள். இவை நமக்குள் இருக்கட்டும். நான் எப்போது என்ன சொல்கிறேனோ, அப்போது, அதை நீ செய்ய வேண்டும். அது உனக்கும் நல்லது; நீ விரும்புகிற கேரள தேசத்திற்கும் நல்லது'' என்றார்.

யூஜியான் தலைகுனிந்து குழந்தையைத் தூக்கி யோகோவாவிடம் கொடுத்தான்.

அதுவரை கைகட்டிக் கொண்டு நின்ற யோகோவா குழந்தையை வாங்கித் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

இருவரும் தங்கள் பழைய அரண்மனையை நோக்கிச் சென்று காவலர்களைக் கடந்து மாளிகைக் கதவைத் திறந்த போது.....

.....அங்கே திருவிதாங்கோட்டுச் சிறைக் கதவைத் திறந்தாள் பத்மாவதி.

சேரமானின் மடியிலே சலீமா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். சேரமான் அந்தக் குழந்தையை அணைத்தபடி மெய்மறந்திருந்தார்.

கதவு திறந்த சப்தம் கேட்டும் சலீமா விழிக்கவில்லை.

சேரமான், பத்மாவதியைக் கண்டு திகைத்தார். என்றாலும், 'இவள் தூக்கத்தைக் கலைக்காதே' என்பது போல் சைகை காட்டினார்.

கணவன் மடியிலே வேறொருத்தி; அதுவே ஒரு குலமகளின் கண்ணீருக்குப் போதுமானது. ஆனால் அவளுக்கே தன்னைச் சேவை செய்யச் சொன்னால், அதுவே ஒரு குலமகளின் மரணத்துக்குப் போதுமானது.

இரண்டையும் தன் ஆத்ம சக்தியால் தாங்கிக் கொண்டாள் பத்மாவதி.

இப்போது அவள் சேரமானின் மனைவியல்ல; ஒரு தெய்விகத் தியாகி.

தலைகுனிந்தபடியே சிறைக் கதவின் சாவியைச் சேரமானிடம் நீட்டினாள் பத்மாவதி.

அதை வாங்கிக் கொண்ட சேரமான், 'போகலாம்' என்பது போல் சமிக்ஞை செய்தார்.

அவள் பின்னங் காலாலேயே நடந்து ஓர் அடிமையைப் போல் வெளியில் வந்தாள்.

சிறைக் காவலர்களில் ஒருவன், ''குதிரை தயாராக இருக்கிறது'' என்றான்.

அவனையும், 'சப்தம் செய்யாதே' என்று ஜாடை காட்டினார் சேரமான்.

மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்த சலீமா, சில நாழிகைகள் கழித்தே விழித்தாள்.

பத்மாவதி வந்த செய்தியையோ, தங்களை விடுதலை செய்ததையோ சேரமான் அவளுக்குச் சொல்லவில்லை..

''நாம் திருவஞ்சைக்களத்துக்குப் புறப்படுகிறோம்'' என்றே அவர் சொன்னார்.

''எப்படி? எப்படி?'' என்று கேட்டாள் சலீமா.

''எல்லாம் பிறகு'' என்று சொன்ன சேரமான், அவளை மார்போடு சேர்த்துத் தூக்கிக் குதிரையில் உட்கார வைத்தார்.

சேரமானும், சலீமாவும் அரண்மனைக்குள் நுழைந்த போது, நாராயண நம்பூதிரி அங்கே இல்லை.

ஆரத்தித் தட்டோடு பத்மாவதி எதிரே வந்தாள். (தொடரும்)

கதம்ப மலர்க் குவியலைக் காற்று மெல்லென எடுத்து வீசினாற்போல் கல்லூரிக் காம்பவுண்டில் இறைந்து கிடந்த மாணவ — மாணவியர்.

இளமையின் துடிப்பு; கனவுகளின் மிதப்பு; கவலையற்ற போக்கு!

'வீல்-சேரி'ல் பூவாக மலர்ந்திருந்தாள் லதா.

கூட்டத்தின் இடையே வழியை மெல்லியதாகக் கீறியபடி வண்டியை நடத்திக்கொண்டிருந்தான் திவாகர்.

''கொடுத்து வைத்தவள்!....''

''அவன் அமர்ந்திருக்கும் ஒயிலென்ன; அவன் அழைத்துச் செல்லும் அழகென்ன!''

''எல்லாவற்றிலுமே லதா உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறாள்.''



நியாயங்களின்

''ஆமாம்; செல்வச் செழிப்பிலாகட்டும்; பருவக் கொழிப்பிலாகட்டும்; அறிவு வளப்பிலாகட்டும் — அவளுக்கு இணை அவன்தான்!''

''எல்லாவற்றையும் விட அவளுக்குக் கிடைத்திருக்கும் துணை! சரிசமமான இணை!''

முதுகைத் தொட்டுச் சென்றது உரையாடல்.

லதா நிமிர்ந்தாள். திவாகரை நோக்கி முறுவலித்தாள்.

சற்றே முகம் தாழ்த்தி, ''என்ன லதா?'' என்றான்.

அவள் நிலை அவனுக்குப் புரிந்தது.

''ஒன்று....மில்லை!'' என்றவாறு அவன் முகத்தை விழிகளால் கவ்வியபடி தலை குனிந்தாள் லதா.

''ஹ...ல்...லோ!...'' எதிர்ப்புறமிருந்து வந்த குமார் நின்றான். அவனுடைய அண்மையை விரும்பாத திவாகர் வண்டியை நகர்த்தினான்.

தன்னிடமிருந்து விலகிப் போவதையே திவாகர் விரும்புவான் என்று குமார் எதிர்பார்த்தான்.

திவாகர் பார்வையால் குமாரின் முகத்தில் கட்டான். குமாரையும், அவன் அட்டகாசமாக நின்றிருந்த நிலையையும் பார்த்து எரிந்தான்.

''கு...மா....ர்....''

—லதா இனிமையான குரலில் ஆரம்பித்தபோது திவாகர் பொறுமையை இழந்து வண்டியை நகர்த்தினான்.

லதா திரும்பிப் பார்த்தாள்.

குமார் பெரிதாகச் சிரித்துக்கொண்டிருந்தான்.

கார் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

எப்போதுமே திவாகர் அதிகமாகப் பேசாதவன் என்றாலும் இப்போது ஓரிரு வார்த்தைகள் கூடப் பேசாமல் அவன் இருப்பது லதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''அ...த்...தா...ன்...!''

''ம்....!''

''ஏன் என்னவோபோல் இருக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லையே!...'' — அதிகப் பிரயாசையின் முடிவில் ஒரு புன்னகை. அதுவும் பிறந்தவுடன் இறந்தது.

லதா அதைக் கவனித்தாள்.

''குமார் சொன்னதையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் — அப்படித்தானே?''

''அவன் என்னைப் 'பெண் பிள்ளை' என்றதால் நான் குறைந்து விடப் போவதில்லை.''

''பின்னே ஏன் 'உம்'மென்று இருக்கிறீர்கள்?''

''உன்னுடைய கற்பனை.''

''என்னை ஏமாற்ற முடியாது.''

''அதுதான் ஒன்றுமில்லை என்கிறேனே, லதா!''

''வார்த்தைகளில்அப்படிச்சொல்லலாம்.''

மீண்டும் மீண்டும் அவன் உள்ளத்தைக் கிளறினாள் அவள். திவாகரால் மறைக்க முடியவில்லை.

''லதா...! குமாரைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவனைப் போன்றவர்களை ஆண்டவன் ஏன் படைத்தான்? நானும் பல தடவைகள் பார்த்து விட்டேன். அவன் வேண்டுமென்றேதான் இப்படிச் செய்கிறான். தாவி அணைக்க ஓடிவரும் குழந்தையின் கன்னத்தைக் கடித்து மகிழும் கயவன்! வக்கிரமான ரசனை உள்ள மிருகம்! உன்னைப் போய் நடுங்க வைக்கிறானே... அவன் மனிதனா?''

''அவர் போக்கு அப்படி!''

''அதை வேறு எதிலாவது வைத்துக்கொள்ளட்டும்.''

''விளையாட்டுத்தனமான....''

''நல்ல விளையாட்டு! இன்னொரு தடவை அவன் உன் இயலாமையோடு விளையாடினால் நான் கொலைகாரனாக மாறிவிடுவேன்!''

''ஐயையோ! எனக்காக நீங்கள் கொலைகாரனாகி விடாதீர்கள். அப்புறம் அப்பா அம்மா இருவரும் என்னைத் தொலைத்து விடுவார்கள்!''

'பூச்சாண்டி' காட்டும் குழந்தையைப் போல அவள் கண்களை மலர்த்திச் சொன்ன முறை அவனிடம் சிரிப்பைத் தோற்றுவித்தது: சிரித்தான்.

தன்னை மறந்து சிரிப்பில் கரைந்தவனின் உள்ளம் இலேசானது.

வண்டி சீராக ஓடத் தொடங்கியது.

பொற்குடத்துக்குப் பொட்டு; அதன் அழகையும் அமைப்பையும் வெளிச்சம் போட்டுக் காட்ட!



ஊர்வலம்

வி.பார்த்திபன்



அதுவே திருஷ்டிப் பொட்டாக அமைந்து விட்டால்?...

லதாவுக்குக் கடவுள் வைத்து அனுப்பியது இரண்டாவது வகை.

எதிலும் குறைவற்ற அவளைத் திருவாரூர்த் தேராக்க, படைத்தவனுக்கு விருப்பம் இல்லை போலும்; அதனால் அப்படி ஓர் ஊனத்தை—கண்டவர் மனம் விண்டு போகும்படி — ஏற்படுத்தி விட்டான். என்றாலும், அவளைப் பார்த்தவர்கள் அவர்கள் காணாத தெய்வத்தைக் கடிந்து கொண்டனர். 'கடின மனம் கொண்ட கொடுங்கோலன்!'

'தான் அப்படிப்பட்டவன் இல்லை' என்பதை நிரூபித்தான் உலக நாயகன்.

இல்லாவிட்டால் லதாவுக்காக — அவளுக்காகவே வாழ வேண்டும் எனத் துடிப்பவனை— திவாகரைப் படைத்திருப்பானா?

திவாகர் லதாவின் வீட்டில் நுழைந்தான். அநாதைச் சிறுவனாக!

அப்போது லதா 'ஃப்ராக்' அணிந்த சிறுமி. அன்று அவள் கையைப் பிடித்தான்.

அந்தப் பிடி சந்திரசேகர் — சிவகாமி தம்பதியரின் உள்ளத்துக்குள் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது.

பள்ளிக்குச் சென்றபோதும், கல்லூரியில் நுழைந்தபோதும், நாலு இடங்களுக்குப் போய் வந்தபோதும் லதாவை நலுங்காமல் 'பொத்திப் பொத்தி' அழைத்துச் சென்றவன் திவாகர்தான்.

அவளுக்கு அவனே காலானான். வண்டியைத் தள்ளியபோது தாழ்வு மனப்பான்மை இல்லை. உலக அதிசயங்களில் ஒன்றுபோல் பார்ப்பவரைச் சுண்டி இழுக்கும் அழகுப் பேரரசியைப் பவனி அழைத்துச் செல்லும் விநாடிகளில் அவன் வானத்தில் பறந்தான். அவள்?....

லதா 'வீல் சேரில்' அமர்ந்தபடி கையிலிருந்த 'இன்விடேஷன்' மாதிரிக் கார்டையும், பத்திரிகைக் கையெழுத்துப் பிரதியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

விநாடிக்கு விநாடி மௌனத்தின் இறுக்கம் அங்கிருந்தவர்களைச் சித்திரவதை செய்தது.

லதா தாயைப் பார்த்தாள்; தானே சிரித்துக்கொண்டாள்.

தந்தையைப் பார்த்தாள்; அவர் சிரிக்க முயன்றார்.

''ராங் மூவ்'' — லதாவின் உதடுகள் முணுமுணுத்தன.

'' 'ராங் மூ'வா? எது?''

''இந்தத் திருமணம்!''

''எந்த அடிப்படையில்?''

''எனக்கும் அத்தானுக்கும் முடிச்சுப் போட்டு நீங்கள் செய்திருக்கும் இந்த முடிவு என் கோணத்திலிருந்து பார்த்தால் தவறுதான்!''

''இது என்றோ தீர்மானிக்கப்பட்டது.''

''யாரால்?...''

லதாவுக்குத் தாயின் தவிப்புப் புரிந்தது; சிரித்துக் கொண்டாள்.

மனைவியின் தோல்வியை நீடிக்கச் சந்திரசேகர் விரும்பவில்லை.

''இதோ பார், நீ பிறந்த அன்றே எங்கள் இருவர் உள்ளத்திலும் உன் எதிர்காலம் பற்றிய கவலையும் பிறந்தது. பல நாட்கள் தூக்கமின்றி அதைப் பற்றிப் பேசினோம். சிந்தித்தோம்; உருவகப்படுத்திப் பார்த்தோம். ஒரே இருட்டு! அந்தச் சமயத்தில்தான் ஒரு சிறு அகல் விளக்கு தெரிந்தது — திவாகர்! ஆமாம், லதா! அவன் அகல் விளக்குத்தான். ஏனென்றால், ஏழையாக, தாய் தந்தையரை இழந்த அநாதையாக இந்த வீட்டினுள் அடியெடுத்து வைத்தான். அஃப்கோர்ஸ் ஹீ ஈஸ் மை ஸிஸ்டர்ஸ் சன்!...''



குண்டூரில் உள்ள மருத்துவக் கல்லூரி மாண வர்கள் வகுப்பில் மேஜை டிராயரில் ட்ரான்ஸிஸ் டரை வைத்துக் கொண்டு அதில் ஸ்டெதாஸ்கோப்பை இணைத்துக் கிரிக்கெட் காமெண்டரி கேட்பார்களாம்!



அண்ட் ஹி நிங் அவுட்!'' - பாபு

பிடி கிடைத்த வேகத்தில் சிவகாமி ஆரம் பித்தாள்:

''அரை நிஜார் அணிந்து வந்த அன்றே அவன் எதையும் எதிர்பார்க்காமல் உனக்குத் துணையானான்; விளையாடினான், வேடிக்கை காட்டினான்; பள்ளிக்குத் துணையானான்; கைக்குள் மூடி வளர்த்தான். எங்கள் உள்ளத் தில் இருந்த பளு இறங்கியது. அதை அவன் ஏற்றுக் கொண்டான். ஆமாம், லதா! நீயே சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார். உன் இழந்து பட்ட கால்களாகவே அவன் இருக்கிறான். உன் ஊனம் அவனால் ஈடு செய்யப்பட்டிருக் கிறது.... இல்லையா அம்மா!''

திவாகரைப் பற்றி அவர்கள் சொல்லச் சொல்ல லதாவின் இதயத்தில் அவன் தியா கத்தின் கனம் இறங்கியது. கண்களில் நீர்மணிகள் பூத்தன. லதா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''உனக்கு எப்படியும் திருமணம் முடித்து விடத் தீர்மானித்து விட்டோம். திவாகர் வேண்டாம் என்றால் அவனைப் போல் வேறு யாரையாவது இந்தப் பரந்த உலகத்தில் உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?''

லதாவின் முகத்தில் ஆங்காங்கே மகிழ்ச் சிப் பூக்கள் மலர்ந்தன. அவற்றின் பெயர் நாணம்.

சந்திர சேகர் மகளின் மாற்றத்தைக் கவ னித்து விட்டார். தெம்போடு நிமிர்ந்தார்.

''ஹூ ஈஸ் தட் லக்கி மேன்? உன் உள் ளத்தில் ஸ்வாதீனமாக இடம் பிடித்து, அழுத்தமாக அமர்ந்து விட்ட அந்தப் பையன் யார் அம்மா?'' என்று கேட்டார்.

''குமார்! மை கிளாஸ்மேட். ஜட்ஜ் தாமோதரத்தின் பிள்ளை!''—

'ரைட் சாய்ஸ்!' — சந்திர சேகரின் உள்ளே அங்கீகாரம்.

''லதா! நீ என்ன சொல்கிறாய்? உனக் காகவே வாழும் திவாகர் உன் முடிவைக் கேட்டால் உடைந்து விடுவானே, அம்மா!..'' —சிவகாமி பதறினாள்.

''அவனுடைய முடிவின் ஒரு பகுதியை என்னால் தாங்கிக் கொள்ள முடியும் மாமி!'' திவாகர் நின்று கொண்டிருந்தான்.

''எதைத் தாங்க முடியும், சுதாகர்?''

''என்னை நிராகரித்ததை.''

''எதைத் தாங்க முடியாது?''

''உன் முடிவின் மறு பகுதியை!''

''குமாரைத் தேர்ந்தெடுத்ததையா?''

''ஆம்!''

''அதில் கண்ட தவறு?''

''அவன் உனக்குச் சிறிதும் பொருத்த மற்றவன். அவனை நீ மணப்பதை என்னால் ஏற்க முடியவில்லை.''

''காரணம்?''

''அவன் ஒரு மிருகம். மனித உணர்வு களுக்கு மதிப்புக் கொடுக்காதவன். மலரைக் கசக்கி ரசிப்பவன்!''

''எதை வைத்து இந்த முடிவுக்கு வந் தீர்கள்?''

''அவன் உன்னிடம் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தவன் நான். பார்த்து வேதனைத் தீயில் காயம் பட்டவன் நான். உன் குறையை நினைத்து ஒவ்வொரு கணமும் என்னுள்ளேயே கரைந்து கொண்டிருப்பவன் நான். வேண்டாம் லதா. நீ யாரையாவது திருமணம் செய்து கொள். ஆனந்தமாக இரு. ஆனால்... ஆனால்.... குமார் வேண் டாம். அவன், ஒவ்வொரு செய்கையிலும் தன் அரக்கத்தனத்தைக் காண்பிக்கிறான். நீ கால்களை இழந்தவள் என்ற நினைப்பின் நுனிகூட அவனைத் தீண்டியதாகத் தெரிய வில்லை....'' அவனுடைய குரல் தழுதழுத்தது.

''அத்தான்! ஒரு நாளில் பெரும் பகுதி முழுதும் நீங்கள் எனக்காகவே வாழ்கிறீர்கள். அந்த நன்றியும் பாசமும் தெய்வத்துக்கும் தாய்க்கும் அடுத்தபடி என் இறுதி மூச்சு வரை உங்களிடம் எனக்கு உண்டு. அம்மா வும் சரி, நீங்களும் சரி, ஒவ்வொரு கணமும் என் ஊனத்தைப் பற்றியே நினைத்து மறுகிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான்...நான்..

''இந்த இடத்தில்தான் நான் உங்களிட மிருந்து விலகுகிறேன். ஒவ்வொரு நாளும் என் குறையை மறக்கவே நான் முயன்று வருகிறேன். நான் ஒரு குறைப் பிறவி என்ற நினைவே எனக்கு எரிச்சலூட்டியது. நான் மறக்க முயன்றதை, என் நினைவை விட்டு அழிக்க முயன்றதை ஒவ்வொரு செயலிலும் பேச்சிலும், இழையோடிய பரிவிலும் நீங்கள் சொல்லாமல் சொல்லுகிறீர்கள்.

''உங்களை விட என்னைக் கைமேல் வைத்துத் தாங்கக் கூடிய ஒருவர் உலகில் பிறக்கவில்லை. இது உண்மை. அம்மாவும் அப்பாவும் அதனால்தான் உங்களை எனக்கேற்ற மண வாளராக்கிக் கனவை வளர்த்துக் கொண் டிருந்தார்கள். அது நியாயமான முடிவு — அவர்களைப் பொறுத்தவரை!

''குமார் உங்கள் போக்கிலிருந்து பெரிதும் மாறுபட்டிருக்கிறார். என்னை உணர்ந்தவர்; ஆனால் என் ஊனத்தை உள்ளத்தில் அவர் ஒட்டி வைத்துக் கொள்ளவில்லை. எனக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார். ஆனால் என்னால் முடிந்ததையும் கூட 'அன்பு' என்ற போர்வையில் செய்யத் தயாராக இல்லை. அவர் என்னை வாழ்நாள் முழுதும் அன்பு வெள்ளத்தில் நீராட்டி, இதயத்தோடு உறவாடி, உங்கள் உள்ளங்கள் பூரிக்கும்படி செய்வார் என்பதை முற்றும் புரிந்தே இந்த முடிவை உறுதியாக உங்களிடம் சொன் னேன்!'' — மனம் இலேசான குதூகலத்தில் இரு கண்களையும் மூடி நிம்மதியை அனுப வித்தாள் லதா.

மூவரும் அவளையே பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

அவளுடைய நியாயங்கள் ராஜபாட்டை யில் தலை நிமிர்ந்து போய்க் கொண்டிருந்தன.

அதை எக்காரணம் கொண்டும் தடுத்து நிறுத்த அவர்களால் முடியாது.

ஆனால்.... அவர்களுடைய நியாயங்களும் அதே பாதையில் போக வேண்டும் என்று அவசியம் இல்லையே!

அன்றும் இன்றும்




நேற்று நிறுவப்பட்டது ஜோதி ஸ்டார்ட்டர்




இன்றே காண முடிந்தது இன்ப நாள்.

முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி ஸ்டார்ட்டர்



ஜோதி ஆயில்-இம்மர்ஸ்டு ஸ்டார்ட்டர்



ஜோதி எய்ர்-பிரேக் ஸ்டார்ட்டர்

மற்ற ஸ்டார்ட்டர்களைத் திரும்பத் திரும்பப் பழுது பார்க்கவோ, மாற்றிப்போடவோ தேவைப்படும் அதேநேரம் நல்லபடி ஓயாது உழைக்கிறது ஜோதி ஸ்டார்ட்டர். ஜோதி என்றாலே நீடித்த ஆயுள்-பலமுள்ள ஸ்டார்ட்டர். ஸிங்கிள் ஃபேஸ், ஓவர்லோடு, தாழ்ந்த வோல்டேஜ் ஆகியவற்றிலிருந்து மோட்டார்களைப் பாதுகாத்து எவ்வித இசைகேடான சேதமும் வராதபடி மோட்டாரைக் காப்பாற்றுகிறது இந்த ஸ்டார்ட்டர்.

ஜோதி லிமிடெட், பரோடா

ஹைட்ராலிக்ஸ் • எலக்ட்ரிகல்ஸ் • பவர் எலக்ட்ரானிக்ஸ்

everest 23 r1/JY-tm

கிளை: 33, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 600 034. போன்: 85007
விற்பனையாளர்கள்: ஸி. வி. & கோ. xxx/613, மகாத்மா காந்தி ரோடு, கொச்சி 682 016; ராஜும் & கோ., 61, சதி ரோடு, ஈரோடு; மேலக்கடை எலக்ட்ரிகல்ஸ், 215, மெயின் ரோடு, பெண்ணாடம் 606 105; ஆக்ட ஏஜன்ஸீஸ், நம்பர் 8, நியூ கொழும்பு ஸ்டோர்ஸ், மாயூரம்; ப்ரீமியர் இண்டஸ்ட்ரீஸ், 80/81, செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை 600 001; முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோயில் ஸ்ட்ரீட், உசிலம்பட்டி; ஓரியண்ட் எலக்ட்ரிகல்ஸ், 170, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை 600 001; பழனியப்பா டிரேடிங் கோ., 2 ஹெட்குவார்ட்டர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் 641 018; ஆட்டோமேட்டிக் பம்ப் ஸ்பெஷலிஸ்ட்ஸ், நம்பர் 4, பாண்டி பஜார், தி நகர், சென்னை 600 017

சிலம்புச் செல்வம்

ம.பொ.சி.

திருமாலை வழிபடுவதற்காக வைகையாற்றில் குளிக்கச் சென்ற மாதரி, அங்கு தன் காதில் விழுந்த ஒரு செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டு விட்டாள். ''கள்வன்'' என்று காரணம் காட்டி, பாண்டிவேந்தன் கோவலனைக் கொன்றுவிட்ட செய்தி, வைகைக் கரையில் நீராட வந்த பெண்கள் மூலமாக மாதரிக்குத் தெரிகிறது. அதுதான் அவள் திடுக்கிட்டதற்குக் காரணம். ஆற்றங்கரையில் சில பெண்கள் பேசிக் கொண்டதனை 'ஊரர் அரவம்' என்கிறார் இளங்கோ.

ஊரரவம் கேட்டு, வைகையில் குளிக்காமல் திருமால் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தாமல், விரைந்து வீட்டுக்குத் திரும்பி விட்டாள் மாதரி.

திரும்பியவள், கண்ணகியின் எதிரே கற்சிலை போல் நின்று விட்டாள். அவள் வாய் பேசவில்லை. ஆனால், அவள் முகம் பேசுகிறது. அதனைக் கண்டு அவள் ஏதோ ஒரு தீய செய்தியை அறிந்து வந்திருக்கிறாள் என்பதனை உணர்ந்து கொள்கிறாள் கண்ணகி. ஆம்; கோவலன் கொலையுண்டு விட்டான்; கண்ணகி வாழ்விழந்து விட்டாள் என்பதனை மாதரியின் வாய் சொல்லவில்லை; ஆனால், அவள் முகம் சொல்லி விட்டது. அகத்திலுள்ளதை முகத்தில் அறியலாந்தானே! இதனை,

''அவள்தான்
சொல்லாடாள், சொல்லாடா
நின்றாள்; அந்நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடுந்தான்''

என்ற வரிகளில் புலமை நயம் தோன்றச் சொல்லுகிறார் இளங்கோ. ''அவள்தான் சொல்லாடாள், சொல்லாடா நின்றாள்'' என்றது, மாதரியாள் பேசாமடந்தையாகிவிட்டதைக் குறிக்கும். ''அந்நங்கைக்குச் சொல்லாடும் சொல்லாடுந்தான்'' என்பது கண்ணகிக்கு வாயால் சொல்லாமலே முகத்தால் சொல்லிவிட்டாள் மாதரி என்று பொருள் தரும். மாதரியின் நிலை கண்டு கண்ணகி புழுப்போல் துடித்தாள். ''எல்லா! ஓ!— என்ன செய்தியை அறிந்து வந்தனையோ?'' என்று கேட்டாள்.

''நேற்று நடுப் பகலில் என்னை விட்டுப் பிரிந்து சென்ற காதலர் திரும்பி வரக் காணேன். திரும்பாததால், நேற்று இரவெல்லாம் மனக் கலக்கத்தோடு இருந்தேன். கொல்லன் உலைக் களத் துருத்தியும் தோற்றுப்போகும் வண்ணம் எனது நெஞ்சத்திலே வெப்பத் தீ உயிர்க்கின்றதே! அயலார் சொன்னதுதான் என்னவோ, எனக்குச் சொல்லம்மா!'' என்று மாதரியின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணகி கெஞ்சினாள். திரும்பத் திரும்ப இதையே சொல்லி, ஊரார்



சொல்லி மாதரி கேட்ட செய்தியைத் தனக்குச் சொல்லுமாறு அவளை வற்புறுத்தினாள். இந்த இடத்திலே கண்ணகி ஒப்பாரி ஓசையிலேயே மாதரியுடன் உரையாடுகிறாள்.

''காதலற் காண்கிலேன்;
கலங்கிநோய் கைம்மிகும்;
ஊதுலை தோற்க
உயிர்க்குமென் நெஞ்சன்றே,
ஊதுலை தோற்க
உயிர்க்குமென் நெஞ்சாயின்,
ஏதிலார் சொன்னது
எவன்? வாழியோ, தோழீ!
நண்பகற் போதே
நடுக்கு நோய் கைம்மிகும்
அன்பனைக் காணாது
அலவுமென் நெஞ்சன்றே;
அன்பனைக் காணாது
அலவுமென் நெஞ்சாயின்,
மன்பதை சொன்னது
எவன்? வாழியோ, தோழீ!
நஞ்சமோ, தோழீ!
தலைவன் வரக் காணேன்;
வஞ்சமோ உண்டு;
மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு
மயங்குமென் நெஞ்சாயின்,
எஞ்சலார் சொன்னது
எவன்? வாழியோ, தோழீ!''

கண்ணகி துயருறுவதைச் சகித்துக் கொள்ள மாட்டாமல், மாதரி வாய் திறந்து பேசுகின்றாள். வைகையாற்றங் கரையில் ஊரார் பேசிக் கொண்டதை அரைகுறையாகக் கூறுகின்றாள்:

''அரைசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய, கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே''

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.


நாளைய
டூத்பேஸ்ட் இன்றைக்கே!
புதிய
க்ளோஸப்
டூத்பேஸ்ட், மவுத்வாஷ்
இரண்டும் ஒன்றாய் இணைந்தது
close-up
close-up
ஜெல்லிபோல சிகப்பொளி வீசும் க்ளோஸப்--பற்பசைகளிலே ஒரு புத்தம் புதுமை.
இதில் அடங்கியுள்ளவை: க்ளோஸப் புது நயத்தை மூச்சிலே இழைய வைக்கும் ஒரு மவுத்வாஷ்,
அதோடு க்ளோஸப் வெண்மையினைப் பற்களிலே குலவச் செய்யும் சிறப்புச் சாதனங்கள் இரண்டு.
மூச்சுக்கு நேசம் க்ளோஸப் புதுமை,
பற்களின் உறவு க்ளோஸப் வெண்மை...
மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத், கோவா, தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம்
ஆகிய மாநிலங்களின் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் மட்டுமே கிட்டும்.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேஷா காசு